விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 05 செவ்வாய்க்கிழமை (17.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 060

# விசாரணை அறிக்கையை தாமதப்படுத்த இணக்கம்

## அரசின் வேண்டுகோளை ஏற்றது ஐ.நா



(ஜெனிவா)

***இலங்கை குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் முன்னெடுத்த யுத்த குற்ற விசாரணை அறிக்கையை வெளியிடுவதை தாமதிக்க வேண்டுமென்ற இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு மனித உரிமை ஆணையாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். இதன்படி செப்ரெம்பர் மாதம் இவ் அறிக்கை வெளியிடப்படவுள்ளது.***

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மனித உரிமை ஆணையாளர் இதனை குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்ட விசாரணை அறிக்கை வெளியாவதை செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள அமர்வு வரை பிற்போடவேண்டும் என தான் கருதுவதாக மனித உரிமை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மாற்றமடைந்து வரும் சூழ்நிலையை பொறுத்தும், புதிய அரசாங்கத்திடமிருந்து வரும் ஒத்துழைப்பிற்கான பரந்துபட்ட சமிஞ்ஞைகளை கருத்தில் கொண்டும் தான் இந்த வேண்டுகோளை விடுப்பதாக அவர்

23ஆம் பக்கம் பார்க்க....

# வட மாகாண பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை அறிவிப்பு

## பதிற்பாடசாலை சனிக்கிழமை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணப் பாடசாலைகளுக்கு நாளை புதன்கிழமை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இவ் அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

சைவ விரதங்களில் ஒன்றான மகாசிவராத்திரி விரதம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இந்நிலையில் நாளை புதன்கிழமை வட மாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பதிற்பாடசாலை தினமாக எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைமுறைப்படுத்தப்படும் என வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக உதவிச் செயலாளர் ந.தெய்வேந்திரராஜா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கோப்பாய் ஆசிரிய

23ஆம் பக்கம் பார்க்க....

# அணுசக்தி ஒப்பந்தம்

## மோடி-மைத்திரியிடையே கைச்சாத்து



***(புதுடில்லி)***

***இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையேயான சிவில் பயன்பாட்டு அணுசக்தி ஒத்துழைப்பு, விவசாயம், கல்வி, கலாசாரம் ஆகிய நான்கு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எட்டப்பட்டுள்ளன.***

23ஆம் பக்கம் பார்க்க....

# சமாதானத்தின் பலன்கள் தமிழரும் அனுபவிக்க வேண்டும்

## அமைச்சர் கரு உரை



(யாழ்ப்பாணம்)

சமாதானத்தின் பலன்களை வடக்கு மக்களும் அனுபவிக்க வேண்டுமென்பதே ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கத்தின் நோக்கமென யாழ் வந்த உள்ளூராட்சி மாகாண சபைகள், புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இதற்கமையவே புதிய அரசின் 100 நாள் வேலைத் திட்ட செயற்பாடுகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடக்கு மக்கள் தமது

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி இன்று திருப்பதி பயணம்

(புதுடில்லி)

இந்தியா சென்றிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குழுவினர், இன்று 17-ம் திகதி பிஹாரில் உள்ள புத்த கயாவில் சிறப்பு பிரார்த்தனை நடத்தவுள்ளனர்.

அங்கிருந்து திருப்பதி செல்லும் ஜனாதிபதி குழுவினர் ஏழுமலையானை தரிசிக்கவுள்ளனர்.

அதனைத்தொடர்ந்து நாளை புதன்கிழமை காலை திருப்பதியில் இருந்து கொழும்பு திரும்புவர்.

இந்தியா சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பல்வேறு தரப்பினருடனும் சந்தித்து பேசியமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# விசாரணை கூண்டில் நிறுத்த தமிழ்த் தலைமைகள் முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் போராடி வென்றெடுக்கப்பட்ட சமாதானத்தை சீரழிக்கும் செயற்பாடாகவே வட மாகாண சபையின் பிரேரணை அமைந்துள்ளது. இலங்கையை சர்வதேச விசாரணைக் கூண்டில் நிறுத்த தமிழ்த் தலைமைகள் முயற்சிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் நிமல சிறிபால டி சில்வா குற்றம் சாட்டினார்.

கடந்த வாரம் வட மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட இனப்படுகொலை தொடர்பிலான தீர்மானம் மற்றும் இனப் படுகொலை குற்றச்சாட்டு விசாரணை தொடர்பில் சர்வதேசத்துடனான அரசின் நகர்வுகள் எதிர்க்கட்சியின் கருத்தினை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர

23ஆம் பக்கம் பார்க்க....

## உறவுகளைத் தேடி உண்ணாவிரதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் காணாமல போனோரின் உறவுகள் நேற்று உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு மணிக்கூட்டுக் கோபுரத்தின் முன்பாக 500க்கும் அதிகமான பெண்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட

23ஆம் பக்கம் பார்க்க....

# முரண்பாட்டு அரசியலை விடுத்து இணக்க அரசியலில் ஈடுபடவேண்டும்

## முதல்வர் விக்னேஸ்வரன் அழைப்பு



(யாழ்ப்பாணம்)

இதுவரை காலமும் முரண்பாட்டு அரசியலில் ஈடுபட்டு வந்த நாங்கள் இனியேனும் இணக்க அரசியலில் ஈடுபட இறைவன் எமக்கு வழி அமைக்க வேண்டும் என வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண விசேட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று யாழ். பொது நூலகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

23ஆம் பக்கம் பார்க்க....

## மார்ச்சில் வருவார் பிரதமர் மோடி

இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக, இந்திய பிரதமரின் உத்தியோகபூர்வ டுவிட்டர் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


எதிர்வரும் மார்ச் மாதத்தில் இந்த விஜயம் மேற்கொள்ளப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்குச் சென்றபோது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்த அழைப்பையடுத்தே இந்த விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விசாரணை அறிக்கையை ஏற்பது கூட்டமைப்பின் முடிவல்ல!

## சுமந்திரனின் கருத்துக்கு சுரேஸ் மறுப்பு



**(யாழ்ப்பாணம்)**

**சர்வதேச தரத்திலான உள்ளூர் விசாரணை அறிக்கையை ஏற்றுக் கொள்வதென்பது கூட்டமைப்பின் முடிவல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் உத்தியோகபூர்வப் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

ஐ.நா.விசாரணையாளர்கள் விசாரணைக்காலத்தை நீடித்து நாட்டுக்குள் வந்து விசாரணை செய்ய அனுமதித்தால் ஐ.நா.விசாரணை அறிக்கையை வெளியிடும் காலத்தை நீடிக்கலாம் எனவும் ஐ.நா. மனிதவுரிமைக் கவுன்சிலின் மேற்பாரவையின்கீழ் உள்ளக விசாரணை ஒன்று நடைபெறுமாயின் அவ் விசாரணையை நாம் வரவேற்போம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ள கருத்திற்கு கூட்டமைப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ பிரேமச்சந்திரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நா.விசாரணையாளர்கள் விசாரணைக்காலத்தை நீடித்து நாட்டுக்குள் வந்து விசாரணை செய்ய அனுமதித்தால் ஐ.நா.விசாரணை அறிக்கையை வெளியிடும் காலத்தை நீடிக்கலாம் எனவும் ஐ.நா. மனிதவுரிமைக் கவுன்சிலின் மேற்பார்வையின் கீழ் உள்ளக விசாரணை ஒன்று நடைபெறுமாயின் அவ் விசாரணையை நாம் வரவேற்போம் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப் பினர் சுமந்திரன் தெரிவித்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன.

ஆனால் இவ்வாறான முடிவுகள் எடுப்பதற்கான எந்தக் கலந்துரையாடலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித்தலைவர்களுடனோ, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடனோ நடத்தப்படவில்லை. சுமந்திரன் வெளியிட்ட கருத்தானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தல்ல என்பதுடன் இது அவரின் சொந்த தனிப்பட்ட கருத்து என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

சுதந்திரதின விழாவில் கலந்து கொள்வது என் பதிலும் அவர்கள் தனிப்பட்ட முடி வையே எடுத்தார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உள்ளக விசாரணையை ஏற்றுக் கொள்வதென்பதும், ஐ.நா. இலங்கைக்குள் வந்து வசாரணைகளை நடத்த வேண்டு மென்பதும் விசாரணையின் காலத்தை நடித்து ஐ.நா விற்கான அறிக்கையை வெளியிடாமல், காலதாமதம் ஆககு வதற்கான உத்திகளே. இவ்வாறான உத்திகளை கையாள்வதென்பது ஒருவருட காலம் விசாரணை செய்து உருவாக்கப்பட்டு வருகின்ற மார்ச் மாதம் வெளிவருகின்ற அறிக்கையை வெளியிடாமல் தடைசெய்வதற்குச் சமனானதாகும்.

இது மார்ச் மாதம் வெளியிடப்படாமல் காலதாமதப்படுத்தப்பட்டால் பின்னர் எப்பொழுது வெளியிடப்படும் என்பதற்கு எத்தகைய உத்தரவாதமும் கிடையாது.

உள்ளூர் விசாரணை என்பதும் தமிழ் மக்களை ஏமாற்றி சர்வதேச விசாரணை அறிக்கையை ஒழிக்கின்ற செயற்பாடாகும்.

இவ்வாறான அறிக்கைகளை சுமந்திரன் ஏற்றுக்கொள்வதென்பது அவரைப் பாராளுமன்றத்திற்கு அனுபபிய தமிழ் மக்களுக் குச் செய்கின்ற துரோகமாகும்.

இத் தகைய செயற்பாட்டினை கூட்டமைப் பிலுள்ள தமிழரசுக் கட்சி உட்பட ஏனைய அங்கத்துவக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளாது என்று தெரிவித்துள்ளார். (எ-4)

## ஜே.வி.பிக்கு அழைப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி மற்றும்ஜாதிக ஹெல உறுமயவிற்கு ஐக்கிய தேசிய கட்சி அழைப்பு ஒன்றினை விடுத்துள்ளது.

ஹொரண பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலநதுக்கொண்டு கருத்து தெரிவித்த வெளியுறவு துறை பிரதி அமைச்சர் அஜித் பெரேரா இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் செயற்பட்டது போன்று எதிர் வரும் காலங்களிலும் குறித்த இரு கட்சிகளும் செயற்படும் என தான் எதிர்பார்ப்பதாக அஜித் பெரேரா தெரிவித்துள்ளார். (எ-11)

## பிலியந்தலையில் வங்கிக் கொள்ளை

(கொழும்பு)

பிலியந்தலையில் உள்ள தனியார் வங்கியொன்றில் ஒரு மில்லியன் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் 2.45 மணியளவில் முச்சக்கர வண்டியில் வந்த இருவர் வங்கியில் நுழைந்து பணத்தை கொள்ளையடித்து தப்பி சென்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

## வடக்கில் அபிவிருத்தி நடந்தாலும் பாரிய பிரச்சினைகள் உண்டு

### புதிய ஆளுநர் விபரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் அபிவிருத்திகள் நடைபெற்றாலும் தற்போதும் பாரிய பிரச்சினைகள் இருப்பதாக தெரிவித்திருக்கும வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநர் ஏச்.எம்.பலிகக்கார, ஆகவே இத்தகைய பிரச்சினைகளை ஆக்கபூர்வமான முறையில் பேசித்தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உள்ளூராட்சி மாகாண சபைகள், புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றபோது விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது,

மாகாணத்தின் புதிய ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னராக மத்திய மற்றும் மாகாண அரச தரப்பினர்கள் கலந்து கொள்ளும் முக்கியத்துவம் வாய்ந்த இக் கூட்டத்தில் நானும் வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

வடக்கில் பாரிய அபிவிருத்திகள் நடைபெற்று வருகின்றது. அதே வேளையில் பல்வேறு பிரச்சினைகளும் இங்கு இருக்கின்றது. இத்தகைய பிரச்சினைகளை நாம் குறைத்து மதிப்பிடவில்லை. இங்குள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பன தொடர்பில் முதலமைச்சரே தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்.

ஆகவே, இவ்வாறான விடயங்களை சம்மந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடி ஆக்கபூர்வமான முடிவுகளை ஏற்படுத்தி வெற்றிபெற வேண்டும்.

ஆனால் கலந்துரையாடாத எந்தப் பிரச்சினைக்கும் தீர்வை ஏற்படுத்த முடியாது. இத்தகைய கலந்துரையாடல்கள்தான் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள முடியுமென்று நம்புகிறோம்.

ஆகவே மாகாணத்தின் ஆளுநர் என்ற வகையில் நானும் முழுமையான உதவிகளை வழங்குவேன்.

இங்குள்ள எனது அலுவலகம் எப்போதுமே திறந்தே இருக்கும். இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் அல்லது தேவைகள் தொடர்பில் முதலமைச்ரோ அல்லது மாகாண சபை உறுப்பினர்களோ அல்லது அரச அதிகாரிகளோ நேரடியாகவே வந்து கலந்துரையாட முடியும்.

இதன் போது மக்களின் முழுமையான தேவைகள் பிரச்சினைகள் தீர்த்து கொள்ள முடியாவிட்டாலும் செய்யக் கூடியதை செய்து தீர்க்கக் கூடியதை தீர்த்து கொள்ள முடியும்.

குறிப்பாக இங்கு அபிவிருத்தி உட்பட எதிர்காலத்தில் செய்ய வேண்டி யுள்ளதாக முதலமைச்சர் கூறியுள்ள மீள்குடியேற்றம், உதவி வழங்கல், காணிப்பறிப்பு உள்ளிட்ட அனைத்தை யும் செய்வதற்கு நானும் சம்மதம் தெரி விக்கின்றேன்.

அதே நேரம் நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதுடன்மக்களின்மனித உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும்.

எனவே, இங்குள்ள பிரச்சினைகள் தேவைகளுக்கு அமைய அதனை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினர்களினதும் ஒத்துழைப்பு மிக அ வசியமென்றும் ஆகவே இதனை அனைவரும் வழங்க வேண்டுமென்றும் பலிகக்கார மேலும் தெரிவித்தார். (எ-4)

## தனியார் காணிகளின் விபரம் திரட்டும் அரசு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் யுத்தத்தின் போது படையினரால் சுவீகரிக்கப்பட்டு தற்போது அவர்களின் பாவனையில் உள்ள பொதுமக்களின் காணிகளின் விபரங்களை திரட்டுவதற்கு மீள் குடியேற்ற அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளதாக அரச அதிபர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் அடிப்படையில் தனியாருக்குச் சொந்தமான காணிகள் தொடர்பில் விபரம் சேகரிக்கப்பட்டு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர்கள் மேலும் தெரிவிததுள்ளனர்.

இவ்வாறான விவரங்களில் மக்களின் வாழ்விடங்களில் படையினர் நிலை கொண்டுள்ளமையினால் இருப்பிடம் இன்றி அல்லல்படும் மக்கள் தொகையும் கோரப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து 5 ஆண்டுகள் நிறைவடைந்த நிலையில் தமது இருப்பிடங்களை விட்டு வட மாகாண மக்கள் தொடர்ந்து முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர். (எ-11)


### தவறிவிட்டது

நடராஜா ரங்கராஜா ஆகிய எனது தேசிய அடையாளஅட்டை (இல.600981404V), ATM காட் மற்றும் பேர்சுடன் யாழ்.கொழும்பு புகையிரதத்தில் 15.02.2015 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 0771752747 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அறியத் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9544)

### தேவை

நெல்லியடியில் மில் வேலைக்கு ஆள் தேவை. (C-136)

தொடர்பு : 077 9361356

### கார் விற்பனைக்கு

வவுனியாவில் பாவனையில் உள்ள மினி பஜறோ கறுப்பு நிற கார் (மிகச் சொற்ப காலம் பாவித்தது) கடன் வசதிகளும் செய்து கொடுக்கப்படும். யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம்.

தொடர்பு : 0755295746 (9543)

### பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணி நிலை வெற்றிடம் உண்டு.

**குழந்தைகளைப் பராமரிப்பதற்கான ஆண் பராமரிப்பாளர்கள் தேவை (Warden)**

**தகைமைகள் :**

1. க.பொ.த சா/த தரத்திற்கு குறையாத கல்வித் தகைமை.
2. அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.
3. வயதெல்லை : 30 - 65
4. விடுதியில் தங்கியிருப்பது அவசியம், உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
5. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும் இல்லக் குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சைவ நெறி ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

● சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 23.02.2015

தொடர்புகளுக்கு :- தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொலைபேசி இலக்கம் : 077-0604950, 021-4923118 (C-143)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹெலிகொப்டர் எங்கே? லம்போகினிகார் எங்கே?

## நாமல் கேள்வி

தன்னிடம் உள்ளதாக கூறிய ஹெலிகொப்டர் மற்றும் லம்போகினி கார் தற்பொழுது எங்கே உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வியெழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பு ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார். தேர்தல் மேடைகளில் என்னிடம் ஹெலிகொப்டர், லம்போகினி கார்கள் உள்ளதாக கூறினார்கள்.

அவர்கள் கூறியது போன்று நான் ஹெலிகொப்டர் வைத்திருந்திருந்தால் அவற்றினை வைப்பதற்கு ஒரு இடம் இருக்க வேண்டும்.

அப்படியான குற்றங்களை சுமத்தியவர்கள் தற்பொழுது கற்களால் அடிக்கப்பட்ட நாய்கள் போல் ஆதாரங்களின்றி நிற்கிறார்கள்.

லம்போகினி வைத்திருப்பதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு லம போகினி தயாரிக்கும் நிறுவனங்களில் விசாரணை செய்தால் அவர்கள் பதிலளிப்பார்கள் என நாமல் ராஜபகஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# சு.க.பிளவுபட்டுள்ளது

தற்பொழுது வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டு பட்டுள்ளதாகவும் எதிர்கால அரசாங்கத்தை அமைப்பது ஐக்கிய தேசிய கட்சியே என பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலநது கொண்டு கருத்து தெரிவிக்கும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இடம பெற்ற மத்திய நிர்வாக குழு கூட்டத்தின் மூலம் கட்சி இரண்டுபடும் என்பது தெரிய வந்ததாகவும், எதிர்வரும் 15 வருடங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சியில் இருக்கும் எனவும் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (இ-5)

# வடக்கு மாகாண சபை தீர்மானத்துக்கு ஆதரவு கோரி நேற்று ஆர்ப்பாட்டம்



விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது. இலங்கை வடக்கு மாகாணசபை தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கக் கோரி நடந்த இந்த ஆர்ப்பாட்டத்துக்கு விடுதலை சிறுத்தைகள் தலைவர் தொல்.திருமாவளவன் தலைமை தாங்கியிருந்தார்.

இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் இந்திய பயணம் இந்தியா- இலங்கை உறவை வலுப்படுத்துவதை விட மார்ச் மாதம் ஐ.நா.சபையில் நடைபெறவுள்ள போர்க்குற்ற விசாரணையை தள்ளிப்போடுவதற்காகத்தான் அவர் வந்துள்ளார். இதற்காக சிறிசேன உலக தலைவர்களின் ஆதரவை பெற்று வருகிறார். அதன் அடிப்படையில் அவர் இந்த பயணத்தை மேற்கொண்டு உள்ளார்.

ஐ.நா. விசாரணை முன்கூட்டியே நடந்தால் சிங்களவர்களுக்கு எதிராக அமைந்து விடும் என்று மைத்திரி பயப்படுகிறார்.

இலங்கை தமிழர் பிரச்சினையில் மகிந்தவுடன் ஒப்பிடுகையில் மைத்திரி எந்தவகையிலும் குறைந்தவர் அல்ல. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 6 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் இராணுவ முகாமை அமைத்து இருக்கிறார்கள்.

விக்னேஸ்வரன் மற்றும் தமிழ் அமைப்புகள் இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என்று வலியுறுத்தியபோது அவர்களிடம் இராணுவத்தை விலக்கிக் கொள்வதாக ஜனாதிபதி மைத்திரி கூறினார்.

அதே நேரத்தில் சிங்களவர்களிடம் பேசும்போது, இராணுவதனதை விலக்கும் எண்ணம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இது மைத்திரியின் இரட்டை வேடத்தை காட்டுகிறது. இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை வேண்டும் என்று குரல் கொடுத்தது அவர்தான். ஆனால் இப்போது போர்க்குற்ற விசாரணையை தள்ளிப் போடவும், தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கு இந்திய அரசு துணை போகக்கூடாது. இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையை நடத்த இந்தியா வலியுறுத்த வேண்டும். தமிழக அரசியல் கட்சி தலைவர்களும் இதனை வலியுறுத்த வேண்டும். வடக்கு மாகாண சபை தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வலியுறுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இது தொடர்பாக அனைத்துக் கட்சி தலைவர்களையும் சந்தித்து பேசுவேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 100 நாட்களில் நீதி கிடைக்கும்

## அமைச்சர் நம்பிக்கை

அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதே நல்லாட்சியாகும். தற்போதைய அரசு அதனையே 100 நாட்களில் செய்து காட்ட முயற்சிப்பதாக தபால் துறை, முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச்.ஏ.ஹலீம் தெரிவித்தார்.

கட்டுகாஸ்தோட்டை, இனிகலை, கொண்டதெனிய உட்பட்ட பல பிரதேசங்களுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்து தமது வாக்காளர்களைச் சந்தித்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த பல வருடங்களாக ஐ.தே. க. அங்கத்தவர்கள் பழிவாங்கப்பட்டனர். அவர்களுக்கு பல்வேறு அநீதிகள் இழைக்கப்பட்டன. சுமார் 19 வருடகாலமாக ஹரிஸ்பத்துவ தொகுதி ஐ.தே.க. ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தனர். முன்னாள் அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீத் மேற்கொண்ட பல சேவைகள் இடை நிறுத்தப்பட்டன.

முன்னர் கண்டியிலிருந்து கொண்டதெனிய பிரதேசத்திற்கு பொது பேருந்து சேவை ஒன்று நடத்தப்பட்டு வந்தது. அரசியல் நோக்கம் காரணமாக அச் சேவை இடைநிறுத்தப்பட்டது. அதேபோல் சுகாதார மத்திய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டு கட்டடங்கள் இன்று அழிவுறும் நிலையில் உள்ளன. இவ்வாறு மக்கள் பெற்றுக் கொண்ட பல பொது நலன்கள் அரசில் காரணங்களுக்காக கைவிடப்பட்டன. அல்லது தடுக்கப்பட்டுள்ளன.

ஐ.தே.க. அரசாங்கம் வறுமை ஒழிப்பை அடிப்படையாகக் கொணடு ஜனசவிய என்ற ஒரு உதவித் திட்டத்தை ரனசிங்க பிரேமதாச முன் வைத்தார். பின்னர் வந்த அரசுகள் அதனை மாற்றி அமைத்தன.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நாம் பல வாக்குறுதிகளை வழங்கினோம். தற்போது படிப்படியாக அவை நிறைவேற்றப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் இன்னும் பல நற்பணிகளை மேற்கொள்வோம். இதனையே நாம் நல்லாட்சி என்ற அடிப்படையில் செய்து வருகிறோம் என மேலும் தெரிவித்தார். (இ-5)

# வெலே சுதாவின் போதைப்பொருள் களஞ்சியம் பொலிஸாரால் முற்றுகை



சர்வதேச போதைப்பொருள் வியாபாரியான சமந்த குமார எனப்படும் வெலே சுதாவுக்கு சொந்தமான களஞ்சியசாலை சோதனையிடப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்களுக்கு அனுப்புவதற்காக போதைப்பொருள் களஞ்சியபடுத்தி வைக்கப்பட்டிருந்த அறை ஒன்றினை பொலிஸார் நேற்று காலை சோதனையிட்டுள்ளனர்.

இலக்கம் 875, பியகம வீதி, சிங்காரமுல்ல, களனி என்ற முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய அறை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் திறக்கப்பட்டுள்ளது. (இ-5)

# இராசி பலன்

17.02.2015
(மாசி 05, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.28 மணிக்கு
திரயோதசி முற்பகல் 11.03 மணிக்கு,
உத்தராடம் முற்பகல் 10.49 மணிவரை
இராகுகாலம் 3.33-5.03 மணிவரை
சுபநேரம் 11.03-12.33 மணிவரை
மகாசிவராத்திரி விரதம்

வளவன்

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**இடபம்:** தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், தந்தை வழியில் தன வரவுண்டு, அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் காண்பீர்கள், புதிய திட்டங்கள் வெற்றிதரும்.

**மிதுனம்:** வழிபாட்டால் வளர்ச்சி காணவேண்டிய நாள், தொழிலில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடு செய்ய முற்படுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** உடல் நலம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், போசன சுகமுண்டு.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், அரசு வழியில் அனுகூலமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்:** சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நல்லவர்களின் தொடர்புகள்

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு:** செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள், அதிகாரிகள் அனுகூல மாக நடந்து கொள்வர், குடும்பத்தில் பெருமைப்படும் வகையில் சில தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்களில் ஏற்பட்ட மாற்றம் விலகும், பணிகளுக்கு கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின்

**கும்பம்:** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், சயன சுகக் குறை வான நாள், சுப செலவுகள் கூடும்.

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நட்பு வட்டம் விரிவாகும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 147

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

இன்னொரு விடயம்.....

குறைந்த பட்சம் மிருகங்களிடம் இருப்பதாவது தூய இச்சையாக இருக்கிறது. ஒறவு கொள்ளும் போது அவை வெறுமனே முழு உலகையும் மறந்து விடுகிறது. ஆனால் நமக்கோ நமது இச்சை கூட தூய்மையாக இல்லை. அது எப்பொழுதும் குற்ற உணர்வுடனும் ஆசைகளுடனும் இருக்கிறது. கடந்தகால நெறிப்படு த்தல்கள் நம்மை குற்ற உணர்வடைய வைத்து விலகிக் கொள்ள வைக்கின்றன அல்லது எதிர்காலத்தினுள் தொடர்ந்து செல்லும் தீவிரமான ஆசை நம்மை அதில் மேலும் ஈடுபட வைத்து மீண்டும் குற்ற உணர்வையே உண்டாக்குகிறது. இழுபறியான இந்த கொடிய சூழலில் சிக்கிக் கொள்வதன் விளைவாக இச்சை மாசுபட்டு விடுகிறது. அது தூய்மையாக இல்லை.


நீங்கள் கவனித்தீர்களானால் எப்பொழுதுமே உங்களுடைய கற்பனையை நிறைவேற்றிக் கொண்ட உடனேயே உங்களை குற்ற உணர்வடைய வைக்கிறது. நீங்கள் குழந்தையாக இருக்கும் பொழுதே குடும்பம்தான் உங்களுக்குள் முதல் குற்ற உணர்வைப் புகுத்துகிறது. பிறகு நீங்கள் குற்ற உணர்வை உருவாக்கிக் கொள்வதில் தேர்ச்சி பெற்று விடுகிறீர்கள்.!

முதலில் குற்ற உணர்வைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வர விரும்பும் எவரும் முதலில் உங்களுக்குள் குற்ற உணர்வைப் புகுத்து கின்றனர். ஏதோ ஒரு வகையில் நீங்கள் தாழ்ந்தவர் என்று உங்களை எண்ணச் செய்கின்றனர். பிறகு நீங்கள் தானாகவே அவர்கள் சொல்வதைப் பின் தொடர ஆரம்பித்து விடுவீர்கள்.

மனிதனுக்கு குற்ற உணர்வின் மூலம் மட்டுமே கட்டுப்படுத்தத் தெரியும். நான் சொல்கிறேன் குழந்தைகளுக்கு விதிமுறைகள் சரிதான். விதிமுறைகளுடன் ஆரம்பிப்பது நல்லதுதான். ஆனால் நீங்கள் வளந்து உங்கள் சொந்த அறிவுக் கூர்மையால் வழி நடத்தப்பட வேண்டியது மிகவும் முக்கியமானது. நீங்கள் உங்களுடைய புறத்தன்மையை ஒருங்கிணைத்து விட்டீர்களானால் உங்களுக்குள் குற்ற உணர்வைப் புகுந்த்த முடியாது. உண்மையில் ஒரு சம்பவமே உங்களுக்குள் குற்ற உணர்வை ஏற்படுத்தி விடுவதில்லை. அந்தச் சம்பவத்தின் விளைவுதான் உங்களுக்குள் குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

மக்கள் விதிமுறைகளை ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறைக்கு குருட்டுத்தனமாகக் கைமாற்றுகிறார்கள். அதனுடன் குற்ற உணர்வும் கைமாற்றப்படுகிறது ஒரு மகுடத்தைப் போல குற்ற உணர்வும் தாத்தாவிடமிருந்து தந்தைக்கும் தந்தையிடமிருந்து மகனுக்கும் மகனிடமிருந்து பேரனுக்கும் கொடுக்கப்படுகிறது.

எல்லா அழகுசாதனங்களுமே நீங்கள் போதுமான அளவு நன்றாக இல்லை என்று மீண்டும் மீண்டும் சொலக்கின்றன. அதனால் குறை வுள்ள உங்கள் உடலைக் குறித்து குற்ற உணர்வடைய ஆரம்பிக்கிறீர்கள். பிறகு என்ன செய்கிறீர்கள். அவர்களுடைய பொருள்களை வாங்கி உபயோகப்படுத்துகிறீர்கள். நீங்கள் தானாகவே அவர்களுடைய கட்டுப்பாட்டிற்குள் விழுந்து விடுகிறீர்கள். ஒரு முறை அவற்றை உபயோகப் படுத்தினால் இதற்காகத்தான் இத்தனை தொல்லைகளையும் படவேண்டியிருந்ததா? என்கிற இன்னுமோர் குற்ற உணர்வால் சூழப்படுகிறீர்கள். நீங்கள் எதையேனும் சாதித்தவுடன் உங்களைச் சூழ்ந்து கொள்ளும் முதல் உணர்வு குற்ற உணர்வுதான்.



உங்கள் கனவும் கற்பனையும் உங்களை ஒரு பயனற்ற வாழ்க்கைச் சுழலுக்குள் அமிழ்த்தி விடுகிறது. நீங்கள் தொலைக்காட்சி இணையத் தளங்கள் புத்தகங்கள் இப்படிப் பலவற்றிலும் பார்த்தவற்றில் இருந்து தொகுத்த கற்பனைகளைக் கொண்டு ஒரு திடமான மூளைப் படிவத்தை உருவாக்கிக் கொள்கிறீர்கள். நீங்கள் மனதால் எப்பொழுதும் இந்தப்படிவத்தில் வாழ்கிறீர்கள். உறவுகளில் கூட நீங்கள் இந்தப் படிவத்துடன்தான் தொடர்பு கொள்கிறீர்களே தவிர உண்மையான மனைவியுடனோ அல்லது கணவனுடனோ தொடர்பு கொள்வதில்லை.


(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### சூப்பராய் ஓவியம் வரையும் குட்டி இளவரசர்: மனம்திறக்கும் கேட்





பிரித்தானிய இளவரசி கேட் மிடில்டன், தன் மகன் ஜார்ஜ் அழகாக ஓவியம் தீட்டுகிறான் என பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

பிரித்தானியாவின் போர்ட்ஸ்மவுத்(Portsmouth) நகரில் உள்ள பள்ளி ஒன்றிற்கு கடந்த 12ஆம் திகதி கர்ப்பிணியான இளவரசி கேட் வருகை தந்ததுடன், அப்பள்ளி மாணவர்களுடன் சேர்ந்து சுவரில் இயற்கை காட்சி ஒன்றை வரைந்து அசத்தியுள்ளார்.

இந்த ஓவியம் அங்கு குடியிருந்த அனைவரையும் கவர்ந்துள்ளது. அப்போது தன் குழந்தை ஜார்ஜ் பற்றி கேட் பேசியுள்ளார்.

அவர் பேசியதாவது, நேற்று தான் நான் என் மகன் ஜார்ஜ்"டன் ஓவியம் வரைந்து கொண்டிருந்தேன் என்றும் அவன் ஓவியம் வரைவதில் மிகவும் சிறந்து விளங்குகிறான் எனவும் மகிழ்ச்சி பொங்க கூறியுள்ளார்.

# சமைப்போம் சுவைப்போம்

## தக்காளி அவல்



**தே.பொருட்கள்:-**

அவல் - 1 கப்
தக்காளி - 1
பச்சைப் பட்டாணி - 1/2 கப் (வேகவைத்தது)
கேரட் - 1 சிறியது
பெரிய வெங்காயம் - 1
கறிவேப்பிலை - சிறிதளவு
கொத்தமல்லி - சிறிதளவு
மிளகாய் வத்தல் - 3
பெருங்காயம் - 1 சிட்டிகை
மஞ்சள் - 1/2 டீ ஸ்பூன்
உப்பு - தேவையான அளவு
எண்ணெய் - 4 ஸ்பூன், கடலைப்பருப்பு - 1 டீ ஸ்பூன்
உளுத்தப்பருப்பு - 1 டீ ஸ்பூன், கடுகு - 1 டீ ஸ்பூன்
எலுமிச்சைச் சாறு - 1 மூடி

செய்முறை:

அவலுடன் மஞ்சள், எலுமிச்சைச் சாறு, உப்பு, சிறிது நீர் சேர்த்து நன்கு கிளறி 10 நிமிடம் ஊறவைக்கவும்.

பச்சைப் பட்டாணியை வேக வைத்துக் கொள்ளவும்.

பெரிய வெங்காயம், தக்காளி, கேரட், கறிவேப்பிலை, கொத்தமல்லி ஆகியவற்றை சிறிதாக நறுக்கி வைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெயை ஊற்றவும்.

எண்ணெய் காய்ந்த பிறகு கடுகு, கடலை, உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் சேர்க்கவும்.

பிறகு பட்டாணி, நறுக்கி வைத்த அனைத்தையும் சேர்த்து பச்சை வாடை போகும்வரை வதக்கவும். அதனுடன் பருப்பு, ஊறவைத்த அவலை சேர்த்து நன்கு கிளறவும். பெருங்காயம் சேர்த்து இறக்கவும்.

சுவையான தக்காளி அவல் தயார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் அழைப்பை நிராகரித்த பிரதம நீதியரசர்

நீதிமன்றக் கட்டடத்தை திறந்து வைக்குமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பை பிரதம நீதியரசர் சிறீபவன் நிராகரித்து விட்டதாக, நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். உடுகம நீதிமன்றக் கட்டடத் தொகுதியைத் திறந்து வைக்குமாறு அரசாங்கம் பிரதம நீதியரசருக்கு அழைப்பு விடுத்தது.

அதனை நிராகரித்த அவர், நீதிமன்றங்களைத் திறந்து வைப்பது நீதிபதிகளின் பொறுப்பு அல்ல, அது அரசாங்கத்தின் கடமை என்று தன்னிடம் கூறியதாக விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார். உடுகம நீதிமன்றக் கட்டடத் தொகுதி திறப்பு விழாவிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார். தனது நிலையை தெளிவுபடுத்தியதற்காக பிரதம நீதியரசருக்கு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ நன்றி தெரிவித்தார்.

மேலும், நீதிபதிகளை அரசியல்வாதிகள் நிகழ்வுகளுக்கு அழைக்கக் கூடாது என்றும், ஊழல் அரசியல்வாதிகளுடன் நீதிபதிகள் அமர்ந்திருந்தால் நீதித்துறை மீதான நம்பகத்தன்மையை மக்கள் இழந்து விடுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நிதிக்குற்றங்களைத் தடுக்க பூஜித ஜெயசுந்தர நியமனம்



(கொழும்பு)

நிதி ஒழுங்கின்மை, தேசிய பாதுகாப்பு, சுகாதாரம், சுற்றாடல், சட்டவிரோத நிதித்தேடல், அதிகார துஷ்பிரயோகம் உட்பட்ட விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

எனவே இவற்றை தடுக்கும் வகையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நிதிக் குற்றங்களை விசாரணை செய்யும் பிரிவு செயற்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தப் பிரிவு, பொலிஸ்மா அதிபரின் தலைமையில் செயற்படவுள்ளது.

இதன் மூலம் பாரிய ஊழல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று அரசாங்கம் தெரி வித்துள்ளது.

இந்தப் பிரிவுக்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பூஜித ஜெய சுந்தர தலைமை தாங்கவுள்ளார் என மேலும் தெரிய வருகிறது. (இ-5)

# த.தே.கூ., ஐ.தே.க. சூழ்ச்சிக்குள் ஜனாதிபதி மைத்திரி சிக்கிவிட்டார்

## நாட்டை மீட்க மகிந்த மீண்டும் வரவேண்டுமென்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்



**(கொழும்பு)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசியக் கட்சியின் சூழ்ச்சி வலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிக்கி விட்டார். சம்பந்தனும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்குமே தேசிய அரசாங்கத்தின் பிரதான கதாப்பாத்திரங்கள் என தெரிவிக்கும் சேதப்பற்றுள்ள தேசிய இயக்கம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் கட்சியை மீட்டெடுக்க அரசியலுக்கு வரவேண்டும் எனவும் அவ்அமைப்பின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கத்தின் புதிய ஆட்சி ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்கும் சாதகமானதானதொன்று அல்ல. இவ் ஆட்சி முற்றிலும் பிரிவினைவாதிகளின் திட்டப்படி அமைக்கப்பட்ட பிரிவினைவாத ஆட்சியே.

இதில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரே பிரதான கதாபாத்திரத்தினை வகிக்கின்றனர்.

தேசிய அரசாங்கம் உருவாகியவுடன் வடக்கில் இராணுவம் முடக்கப்பட்டு விட்டது. ஆளுநர் மாற்றப்பட்டு இன்று வட மாகாணம் முற்று முழுதாக தமிழ் தேசியக்கூட்டமைப்பு மற்றும் புலம்பெயர் பிரிவினைவாதிகளின் கைகளிலும் சென்று விட்டது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் சூழ்ச்சி வலையில் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிக்கி விட்டார்.

இதனால் பௌத்த சிங்கள மக்களே முழுமையாக பாதிக்கப்படப் போகின்றனர்.

மேலும் விடுதலைப் புலிகளிடம் இருந்து வென்றெடுத்த நாட்டினை இன்று பிரிவினைவாதிகளின் கைகளில் ஒப்படைத்துள்ளோம். சர்வதேசத்தின் எதிர்பார்ப்பினையும் புலம்பெயர் புலி அமைப்புக்களின் தேவையினை நிறைவேற்றவுமே புதிய தேசிய அரசு உருவாகியுள்ளது.

எனவே இழந்த நாட்டை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும். சிங்கள பௌத்த மற்றும் தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரையும் மீண்டும் ஒரே குடையின் கீழ் கொண்டுவர வேண்டும்.

கடந்த பத்து ஆண்டுகளிலும் இந்த நாடு மிகப்பெரிய வளர்ச்சியினை கண்டது. அது இன்று மீண்டும் முடக்கப்பட்டு விட்டது.

எனவே நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உதயமாக வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிப்பீடத்தில் அமர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 285

டொறின் மன்மதநாயகம்




சிவம் சக்தி





துஷா துஷா





இந்துஜன் ரமணன்




இரு இருஜிகா




சானுகா பத்மநாதன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் [illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமான பனை அழிப்புத் தொடர்பில் வனவள பாதுகாப்பு கூட்டத்தில் வாக்குவாதம்


வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற வனவளப் பாதுகாப்புக் கூட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இடம் பெறுகின்ற சட்ட விரோதமான பனை அழிப்புத் தொடர்பான கடுமையான வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் சட்ட விரோதமாக பனை அழிப்பது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்தாலும் அவர்கள் அந்த இடத்திற்குச் செல்வதற்கு நீண்ட நேரம் எடுப்பதாகவும் சில வேளைகளில் அந்த இடத்திற்கு செல்லாது இருப்பதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பொலிஸார் வெட்டப்பட்ட பனை மரங்களைப் பறித்தாலும் அதனை ஏற்றிக் கொண்டு வருவதற்கு வாகனவசதி இல்லை என்று தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த வனவளப் பாதுகாப்புக் குழுவின் இணைத்தலைவரும் பருத்தித்துறைப் பிரதேச சபையின் தவிசாளருமாகிய பூ.சஞ்சீவன், சபையில் இருக்கும் உழவியந்திரம் ஒன்றை உடனடியாக செம்பியன்பற்று பிரதேச சபை உப அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பதாகவும் அவ்வுழவியந்திரத்தைப் பொலிஸார் எந்த நேரமும் பயன்படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி உழவியந்திரம் நேற்றுவரை செம்பியன்பற்று பிரதேசசபை அலுவலகத்திற்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3-64)




# வலிகாமம் வடக்கில் விடுவிக்கப்படும் காணிகளில் உரிமையாளர்களே மீள்குடியேற்றப்பட வேண்டும்

### ஈ.பி.டி.பி.அரசிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**வலிகாமம் வடக்கில் அதியுயர் பாதுகாப்பு வலையத்தில் ஆயிரம் ஏக்கர் காணியை விடுவிக்க இந்த அரசு கொள்கை ரீதியிலான தீர்மானம் எடுத்திருப்பதை நாம் வரவேற்கின்றோம். அதேநேரம் இவ்வாறு விடுவிக்கப்படுகின்ற பகுதிகளில் நாம் இதுவரையில் மேற்கொண்டு வந்த வகையில் அக்காணிகளின் உரிமையாளர்களே மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.**

இவ்விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கென இப்போது விசேட இராணுவத் தேவைகள் கிடையாது. எனவே மக்களின் நிலங்கள் அம்மக்களுக்கே சொந்தம் என்ற கொள்கை நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கும் நாம் வலிகாமம் வடக்கில் இராணுவத்தின் வசமுள்ள எமது மக்களின் காணிகள் அதன் உரிமையாளர்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கடந்த அரசிடமும் இந்த அரசிடமும் முன்வைத்திருந்தோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது எமது இக்கோரிக்கை முன்னாள் ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிய அரசு ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிப்பதற்கு முன்வந்துள்ளது. இது எமது தொடர் முயற்சிகளுக்குக் கிடைத்துள்ள மற்றுமொரு வெற்றியாகும்.

கடந்த காலங்களில் பாதுகாப்பு வலையங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த கணிசமான காணிகளை மீட்டுள்ள நாம் அவற்றில் அவற்றின் உரிமையாளர்களையே இனங்கண்டு மீள்குடியமர்த்தி உள்ளோம். அவ்வாறு மீட்கப்பட்ட விவசாய நிலங்கள் கட்டடங்கள் என்பன உரிமையாளர்கள் இனங்காணப்பட்டே கையளிக்கப்பட்டன.

அந்த வகையில் இப்போது விடுவிக்கப்படும் காணிகளிலும் அக்காணிகளின் உரிமையாளர்களையே மீள்குடியேற்றுவதற்கும் எஞ்சியுள்ள எமது மக்களது காணிகளைப் படிப்படியாக விடுவிப்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## திருப்பாடுகளின் நாடகத்திற்கு பிரதி வழங்கும் நிகழ்வு நாளை

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்ப நாளான நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுண்டுக்குளி புனித யுவனியார் ஆலயப்பங்குத்தந்தை அ.கிறிஸ்தோப்பர் அடிகளார் கலந்துகொண்டு இவ்வாற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள் உட்பட ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கி சிறப்பிப்பதுடன் ஆசியுரையையும் வழங்கவுள்ளார்.

இந் நிகழ்வில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும் இம்முறை புதிதாக பங்கேற்க விருப்பமுடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இம்முறை திருப்பாடுகளின் நாடகம் **அன்பில் மலர்ந்த அமர காவியம்** என்னும் பெயரில் எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை நான்கு நாட்களுக்கு தினமும் மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் மேடை யேற்றப்படவுள்ளது. 1971 ஆம் ஆண்டு யாழ்.கோட்டை மதில் பின்னணியை அடிப்படையாக கொண்டு முற்றவெளியில் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்ற இவ்வாற்றுகை பின்னர் 1995ஆண்டில் யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்பட்டது. தற்போது 20ஆண்டுகளின் பின்னர் காலத்துக்கேற்ற புதிய மாற்றங்களுடன் இவ்வாண்டு மீண்டும் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

### மெய்வல்லுநர் போட்டியும் திறனாய்வுப் போட்டியும்

யாழ்.கரம்பகம் அ.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப.2 மணிக்கு பாடசாலை முதல்வர் இ.சுப்பிரமணியம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் வி.கணபதிப்பிள்ளையும் தென்மராட்சி கல்விவலய ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஏ.மனோரஞ்சிதனும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். கௌரவ விருந்தினராக கரம்பகம் கிராம உத்தியோகத்தர் ச.ஞானசேந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3-29)

## கரணவாய் கிராய் மயானத்தில் பார்த்தீனியச்செடியின் பரம்பல்



கரணவாய் கிழக்குப் பகுதியிலுள்ள கிராய் மயானத்தில் பார்த்தீனியச் செடிகள் வளர்ந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வடமாகாண விவசாய அமைச்சு பார்த்தீனியச் செடிகளை ஒழிப்பதற்கு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் கிராய் மயானத்தில் காணப்படும் பார்த்தீனியச் செடிகள் வளர்ந்து பூத்துக் குலுங்குகின்றன எனவும் பார்த்தீனியச் செடியின் பரம்பல் மிக வேகமாக அதிகரிக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு பார்த்தீனியச் செடிகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)




### அறநெறிப் பாடசாலையின் சிவராத்திரி விழா இன்று

கொக்குவில்தலையாழிஸ்ரீஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை சிவராத்திரிவிழா இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை தலையாழி ஞானவைரவர் ஆலய பிரம்மஸ்ரீ சத்தியா யோதரக்குருக்கள் வழங்கவுள்ளார்.

சிறப்புரையினை ஆன்மீக சொற்பொழிவாளர் அ.விக்னேஸ்வரனும் கௌரவ உரையினை வைத்திய கலாநிதி சி.யமுனானந்தாவும் வழங்கவுள்ளனர். (இ-3)

### மஹோற்சவம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை வேம்படிப்பிள்ளையார் கோவில் ஜய வருஷதிவ்விய மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி இரதோற்சவமும் 4 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## ஆயுதங்களுடன் நின்ற நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியில் வாள்கள், பொல்லுகள் மற்றும் கம்பிகளுடன் வீதியில் நின்றுகொண்டிருந்த நான்கு சந்தேகநபர்களை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். சண்டையொன்றில் ஈடுபடும் நோக்குடன் வீதியில் நின்றிருந்த சந்தேகநபர்கள் தொடர்பில் பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்துக்கு சென்ற பொலிஸார் அவர்களை கைது செய்தனர். கோண்டாவில் பகுதியில் கடந்த சனிக்கிழமை மாலையில் இடம்பெற்ற கைகலப்பு சம்பவத்துடன் தொடர்புபட்டே இவர்கள் மேலுமொரு கைகலப்புச் சம்பவத்துக்கு தயாராக நின்றுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாமீது தனிப்பட்ட குரோதம் இல்லையாம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கவுடன் தனிப்பட்ட குரோதம் எதுவும் கிடையாது என முன்னாள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னேற்றத்திற்கு பாரியளவில் பங்களிப்பு செய்துள்ளார்.

அரசியல் சூழ்நிலைகளின் அடிப்படையில் சிறு சிறு முரண்பாடுகள் ஏற்பட்டதுண்டு. எனினும், தனிப்பட்ட ரீதியான குரோதம் எதுவும் இல்லை.

சுதந்திரக் கட்சியின் நிறைவேற்றுச் சபையில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச மற்றும் சந்திரிகா ஆகியோரை இணைத்துக் கொண்டமைக்காக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு நன்றி சொல்ல வேண்டும். எதிர்வரும் பொதுத் தேர்தலில் நான் போட்டியிடுவேன், நான் மட்டுமல்ல எனது மகனும் போட்டியிடுவார்.

ஊழல் மோசடிகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு வேட்பு மனு கிடைக்காது. எனக்கு அவ்வாறான எந்தப் பிரச்சினையும் கிடையாது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு போட்டியிட சந்தர்ப்பம் வழங்காமை நியாயமானதே.

சந்திரிகாவை கட்சியில் இணைத்துக் கொள்வதன் மூலம் கட்சியின் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமையும் என எஸ்.பி. திஸாநாயக்க சிங்கள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது கண்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் வைத்து சந்திரிகாவை நிர்வாணமாக வீதியில் அடித்து துரத்த வேண்டுமென எஸ்.பி. திஸாநாயக்க ஆவேசமாக கூறியிருந்தார்.

இந்தக் கூற்றினை பொது வேட்பாளர் தரப்பு தேர்தல் பிரசார விளம்பரமாகவும் பயன்படுத்திக் கொண்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# பேசும் படம் - 27

இடம்:- நாவலர் வீதி கடச்சுவாமி ஒழுங்கை (யாழ்ப்பாணம்)




இனி இருட்டிதான் போட வேண்டும்... (அப்பகுதியில் நின்றவர்கள் கூறியது)

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்: எஸ்.ஆர்.கரன்

## காணாமற் போனோர் ஆணைக்குழு திருமலையில்

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக்குழு திருகோணமலையில் விசாரணைகளை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரையில் இந்த விசாரணை அமர்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த ஆணைக்குழுவின் விசாரணைக் காலம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைவதாக இருந்தது.

எனினும் அதன் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்கும் வகையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரையில் கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# இடமாற்றம் வழங்கக்கோரி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

## யாழில் நேற்று இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

**வலயங்களால் விடுவிக்கப்பட்டும் யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் கிடைக்கப் பெறாத ஆசிரியர்கள் இடமாற்றம் வழங்கக்கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.**



இவ் ஆர்ப்பாட்டத்தில் வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், மடு, தீவகம் ஆகிய வலயங்களினைச் சேர்ந்த ஆசிரியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

காலை 9.30 மணியளவில் நல்லூரிலுள்ள கல்வியமைச்சின் முன்பாக நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கத்தினரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், மாகாணசபை உறுப்பினர்களே ஏன் மௌனம், அடிப்படை வசதிகளின்றி ஆற்றிய சேவைக்கு கொடுக்கும் பரிசு இதுவா?, எம்மை வளர்த்த ஊருக்கு நாம் சேவை செய்ய யாருக்கும் விருப்பமில்லை, நாங்கள் சேவையினை இடை நிறுத்தவில்லை சேவையினை வழங்கியே திரும்புகின்றோம். எங்கள் உரிமைகளினை எமக்கு தாருங்கள், எங்களிற்கும் பிள்ளைகள் உண்டு நாமும் அவர்களோடு மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என எழுதப்பட்ட பதாகைகளினை ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண கல்வியமைச்சருக்கு கல்வியமைச்சின் செயலாளரினூடாக மனுவொன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

இம் மகஜரின் பிரதிகள் வடமாகாண முதலமைச்சர், ஆளுநர், மகளிர் விவகார பிரதியமைச்சர், மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண பொது சேவைகள் ஆணைக்குழு ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி பிரச்சினைக்கு முகம்கொடுக்கும் ஆசிரியர்களான நாம் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக நியமிக்கப்பட்ட கஸ்ட, அதிகஸ்ட பிரதேசங்களில் மிகவும் அர்ப்பணிப்புடன் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலும் கடமையாற்றி எமது தனிப்பட்ட குடும்ப நிலைமைகளையும் கருத்திற் கொள்ளாது அப்பிரதேசத்திலுள்ள மாணவர்களின் நலன் கருதி எமது கடமையினை மேற்கொண்டோம்.

எனினும் 2014 ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் கோரப்பட்டு அதற்குத் தகுதி பெற்று வலயங்களால் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் 2015 தையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் காரணமாக 01.01.2015 கிடைக்க வேண்டிய இடமாற்றம் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டது. ஆனால் தேர்தல் நிறைவடைந்து ஒருமாதகாலமாகியும் எமது வருடாந்த இடமாற்றம் தொடர்பாக தங்களால் எவ்விதமான பதில்களும் கிடைக்கப்பெறாத நிலையில் எம்முடன் எமது குடும்பத்தினரும் உடல் மற்றும் தனதளவில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் நாம் மிகுந்த மன உளைச்சலுக்கு மத்தியில் ஒன்று கூடி பின்வரும் தீர்மானங்களைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

01.01.2015 இல் வழங்கப்பட வேண்டிய வருடாந்த இடமாற்றம் இதுவரை எமக்கு வழங்கப்படவில்லை, 13.02.2015 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் எமக்கு சாதகமான பதில் வழங்கப்படவேண்டும்.

20.02.2105 இற்குள் எமக்குரிய வருடாந்த இடமாற்றம் வழங்கப்படவேண்டும். நாம் கோரிய காலத்தில் சாதகமான பதில் கிடைக்கப் பெறாவிட்டால் 16.02.2015 இல் இருந்து தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என தெரி விக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆர்ப்பாட்டததில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகள், இலங்கை ஆசிரியர் சங்க பிரதி நிதிகள், வடக்கு மாகாண கல்வியமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலனுடனான சந்திப்பில்,

குறித்த ஆசிரியர்களுக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 1 ஆம் திகதி இடமாற்ற கடிதம் கிடைக்குமெனவும் இது ஏப்ரல் மாதம் நடைமுறைக்கு வருமெனவும் அதற்கிடையில் பதிலீட்டு ஆசிரியர்கள் கிடைக்கப்பெற்றால் இடமாற்றம் பெற்று இங்கு வரமுடியும் என கல்வியமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## திருக்கேதீஸ்வரத்துக்கு விசேட பேருந்து சேவை

மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து திருக்கேதீஸ்வரம் செல்லும் பக்தர்களுக்கு வசதியாக யாழ்.தூரசேவைப் பேருந்து உரிமையாளர்களின் சங்கம் இன்று செவ்வாய்க்கிழமை காலையில் இருந்து விசேட பேருந்து சேவைகளை நடத்தவுள்ளதாக யாழ்.தூரசேவைப் பேருந்து உரிமையாளர் சங்கத்தலைவர் சி.சிவபரன் அறிவித்துள்ளார். (இ-3)

## க.பொ.த.(சா/த) செய்முறைப் பரீட்சை

2014 ஆம் ஆண்டு மார்கழி மாதம் இடம்பெற்ற க.பொ.த.(சா/த) பரீட்சைக்குரிய செயன்முறைப் பரீட்சையானது பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதியில் இருந்து இடம்பெறும். அனுமதி அட்டை கிடைக்கப் பெறாத மாணவர்கள் பரீட்சைத் திணைக்களத்தின் தொலைநகல் 011 278 4422 இலக்கம் உடனோ அல்லது வலயக் கல்வி அலுவலகம் யாழ்ப்பாணத்தினூடாகத் தொடர்பு கொண்டு அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ)

## க.பொ.த.(உ/த)-2015 விண்ணப்பித்தல்

க.பொ.த.(உ/த) 2015 பரீட்சைக்குரிய விண்ணப்ப திகதி முடிவுத்தினம் மார்ச் 05 ஆம் திகதி ஆகும். விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்குரிய முடிவுத்தினம் மார்ச் 10 ஆம் திகதி ஆகும். விசேட தேவையுடைய பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் விசேட தேவையுடையோர் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பித்தல் வேண்டும்.

முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் பின்னர் பாடங்களை மாற்றித் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக விண்ணப்பிக்கும் போது ஒப்படை வேலைகளுக்கு மாகாணத் திணைக்களத்தில் பதிவு செய்வதுடன் கட்டாயமாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கும் பரீட்சைக்கென விண்ணப்பிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இனத்துவ பாடசாலைகள் 85 இதுவரை இயங்கவில்லை

(மல்லாவி)

வடமாகாண கல்வித் திணைக் களத்தின். கீழ் தமிழ், சிங்களம், முஸ்லிம் ஆகிய இனரீதியான மாண வர்கள் கல்வி பயிலும் பாடசாலை கள் ஆயிரத்து 74 உள்ள போதும் 989 பாடசாலைகள் இயங்குவதா கவும் இப் பாடசாலைகளில் கிறிஸ் தவம், இந்து, பௌத்தம், இஸ்லாம் ஆகிய சமயங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 30 ஆயிரத்து 561மாண வர்கள்நடப்பாண்டில் கல்வி பயின்று வருவதாகவும் மாகாண கல்வித் திணைக்களத்தின் புள்ளி விபரத்தக வலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,


வடமாகாண கல்வித் திணைக்க ளத்தின் கீழ் 12 கல்வி வலயங்கள் இயங்குகின்றன. இதில் தமிழ் மாண வர்களுக்கான 978 பாடசாலைகளில் 906 பாடசாலைகள் இயங்குகின்றன.

சிங்கள மாணவர்களுக்கான 31 பாடசாலைகளில் 23 பாடசாலைகள் இயங்குகின்றன. முஸ்லிம் மாணவர் களுக்கான 65 பாடசாலைகளில் 60 பாடசாலைகள் இயங்குகின்றன. இப்பாடசாலைகளில் இந்து சமய மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் 13 ஆயிரத்து 524 பேரும் மாகாண பாடசாலைகளில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 364 பேருமாக மொத் தம் ஒரு இலட்சத்து 63ஆயிரத்து 888 பேர் கல்வி பயின்று வருகின்றனர்.

பௌத்தசமய மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் 386 பேரும் மாகாண பாடசாலைகளில் 2 ஆயிரத்து 370 பேருமாக மொத்தம் 2 ஆயிரத்து 756 பேர்கல்வி பயின்று வருகின்றனர்.

முஸ்லிம் மாணவர்கள் தேசிய பாடசாலைகளில் ஆயிரத்து 776 பேரும் மாகாண பாடசாலைகளில் 9 ஆயிரத்து 294 பேருமாக மொத்தம் 11 ஆயிரத்து 70 பேர் கல்வி பயின்று வரு கின்றனர். கத்தோலிக்க மாண வர்கள் தேசிய பாடசாலைகளில் 4 ஆயிர த்து 638 பேரும் மாகாண பாடசாலை களில் 28 ஆயிரத்து 789 பேருமாக மொத்தம் 33 ஆயிரத்து 427 பேர் கல்வி பயின்று வருகின்றனர்.

கிறிஸ்தவ மாணவர்கள் தேசிய பாட சாலைகளில் ஆயிரத்து 511 பேரும் மாகாண பாடசாலைகளில் 8 ஆயிரத்து 909 பேருமாக மொத்தம் 10 ஆயிரத்து 420பேர்கல்வி பயின்று வருகின்றனர் எனவடக்குமாகாணகல்வித்திணைக்கள த்தின் நடப்பாண்டுப் புள்ளி விபரத்தக வல்கள் தெரிவித்துள்ளன. (அ-2-15)



ஒகன், அமைப்பினால் கிளிநொச்சி மாவட்டத்தில் கண் பார்வையற்ற 10 பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவைகளும் அண்மையில்வழங்கப்பட்டன. பரந்தனில்உள்ளவன்னி விழிப்புலனற்றோர் சங்க தலைமையகத்தில்வைத்து இப் பொருட்களை கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை கள் அலுவலர் வே.தபேந்திரன் வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்:-சிவநகர் செய்தியாளர்)

## எயிட்ஸ் தொடர்பில் விழிப்புணர்வு செயலமர்வு

(மல்லாவி)

ஐரோப்பிய யூனியனின் நிதி யனுசரணையுடன் துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் உள்ள தென்னியன்குளம் கோட்டகட்டிய குளம், உயிலங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 44 இளைஞர், யுவதிகளுக்கு ஆட்கொல்லி நோயான எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வும் மற்றும் சுகாதார பழக்கவழக்கங்கள் எனும் தொனிப் பொருளிலான செயலமர்வு கடந்த 14, 15 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை உயிலங்குளம் கிராமத்தில் உள்ள மு/உயிலங்குளம் அ.த.க பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

மேற்படி செயலமர்வானது உயிலங்குளம் கிராம முன்னேற்ற அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எஸ்.ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெற்ற போது சுகாதார பழக்க வழக்கங்கள் என்ற தலைப் பிலான செயலமர்வை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் துணுக்காய் பிரதேச தலைவர் ஜீ.அரவிந்தனும் எயிட் நோய் தொடர்பான செயல மர்வை மல்லாவி பிரதேச சுகாதார வைத்திய மேற்பார்வையாளர் செல்வரட்ணம் அரவிந்தனும் நடத்தியுள்ளனர்.

இதில் இளைஞர், யுவதிகள் ஆர்வத்துடன் பங்கேற்றதுடன் தாம் பயன்பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (அ-2-15)

# முல்லைநகர கடற்கரையில் பால்நிலை சமத்துவ நிகழ்வு




கெயார் சர்வதேசம் நிறுவனமும் பெண்களுக்கெதிரான வன்முறைக் கெதிராக இயங்கும் பெண்கள்வலை யமைப்பும்இணைந்து முல்லைத்தீவு நகரக் கடற்கரையில் எழுச்சி நிகழ்வு ஒன்றை அண்மையில்பிற்பகல் 3.30 மணி முதல் 6 மணிவரையும் நடத் தினார்கள்.

உலகளாவிய ரீதியில் 100 கோடி மக்களின் எழுச்சி 2015 நிகழ்வுகள் எனும் மகுட வாசகத்திற்கமைய இந் நிகழ்வு நடைபெற்று வருகிறது. இதன் அடிப்படையில் முல்லைத்தீ விலும் நடைபெற்றுள்ளது.

இதற்கமைய வட மாகாணத்தில் முதலாவதாக நடத்தப்பட்ட இந்த நிக ழ்வில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய 4 மாவட்டங்களைச் சேர்ந்த ஏறத் தாழ 500 வரையான மக்கள் எழு ச்சியுடன் கலந்து கொண்டனர்.

ஆடல், பாடல் .இசை, பதாகை, வாழ்வில் சாதனை படைத்த பெண் களின் அனுபவப் பகிர்வு என்பன இடம்பெற்றன. பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்தவும், பால் நிலை சமத்துவம் மற்றும் நீதிக்காக வும்குரல்கொடுப்போம்என்ற தொனி ப்பொருளில் உலகெங்கும் இந்நிக ழ்வு நடைபெற்று வருகிறது. கெயார் சர்வதேச நிறுவனத் தின் அதிகாரி பிந்துஜா யோகராஜாவின் வழிநடத்த லில் நடைபெற்ற நிகழ்வில் முல்லை த்தீவு அரசாங்க அதிபர் நா.வேத நாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (அ-2-254)

## இலங்கை விளையாட்டுக்கு முக்கியத்துவமளித்துள்ளது

பிரதித்தூதுவர் மூர்த்தி பெருமிதம்



பாடசாலைக் கல்விக்கு மாத்திரமே இந்தியாவில் முக்கியத்துவமளிக்கும் கலைத்திட்டம் காணப்படும் வேளை, இலங்கையில் விளையாட்டுக்கும் முக்கியத்துவமளிக்கப்படுகின்றமை பாராட்டத்தக்கது. இவ்வாறு யாழ். இந் தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி தெரிவித்தார்.

கிளிநொச்சி, பாரதிபுரம், பாரதி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநா திற னாய்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பாடசாலை அதிபர் எப்போதும் இப் பாடசாலைக்கு நீங்கள் உதவ வேண்டும் என்று என்னிடம் கோருவார். எமது நாடு சார்பாக இந்தியத்தூதரகம் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பங்கைச்செய்யும். அதிபரின் வேண் டுதலுக்கிணங்க சிறிய உதவி ஒன்றையே நான் செய்தேன். இதன்மூலம் இந்தப்பாடசாலையில் நிலவிய தண்ணீர்த்தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்கு நிரந்தர த்தீர்வு பெறப்பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட இந்த கிராமத்தில். பிளைகள் கல்வியை மிக அக்கறையாகப் பேணவேண்டும். தமிழர்களின் ஒரேயொரு சொத்து கல்விதான். யுத்தத்தின்போது சொத்துக்கள் அழிந்த நிலை யிலும் கல்வியே உங்களோடு கூடவந்துள்ளது என்றார். (அ-2)

## வாள்வெட்டுக்கு இலக்காகி மூவர் வைத்தியசாலையில்

(குருமன்காடு)

வவுனியா கோவில்குளம் பகு தியில் வைத்து ஆச்சிபுரத்தை சேர் ந்த குழுவொன்று வாளால் வெட் டியதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர் என வவுனியா பொலிஸார் தெரி வித்தனர். வவுனியா தெற்கு இலுப் பைக் குளத்தை சேர்ந்த இளைஞ ர்கள் மீது இக் குழுவினர் முன்னர் தாக்கியுள்ளனர்.

இதன் காரணமாக அவ் இளை ஞர்கள் வவுனியா பொலிஸில் முறை யிட்ட பின்னர் வீடு நோக்கி சென் றுகொண்டிருந்த போதே கோவில் குளம் சந்தியில் வைத்து பொலிஸில் முறைப்பாடு செய்தமைக்காக எச்ச ரித்து வாளால் வெட்டியுள்ளனர்.

இதன் காரணமாக காயம டைந்த மூவரையும் உடனடி யாக வவுனியா பொது வைத் தியசாலையில் அனுமதித்த நிலை யில் அவர்கள் தொடர்ந்தும் சிகி ச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் ஆச்சிபுரத்தை சேர்ந்த இக்கும்பல் இதற்கு முன் னரும் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் மக்களை அச் சுறுத்தும் செயற்பாட்டில் ஈடு பட்டு வருவதாகவும் இதன் காரண மாக மக்கள் அச்சம் கொண்டி ருந்ததாகவும் அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக வவு னியா பொலிஸார் தீவிர விசார ணைகளை மேற்கொண்டுள்ள னர். (அ-2-250)



கிளி/தர்மபுரம் இல.1 பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு கடந்த 13 ஆம் திகதி பாடசாலையின் அதிபர் சு.சுதாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் அணிநடை நிகழ்வையும் [illegible] சான்றிதழ்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகா சிவராத்திரியின் முக்கியத்துவங்கள்

சிவனை நினைந்து அனுட்டிக்கும் விரதங்களில் சோமவாரம், திருவாதிரை, சிவராத்திரி, பிரதோஷம் என்பன சிறப்புப்பெற்று விளங்குகின்றன. இவற்றுள்ளே சிவராத்திரி விரதம் சிவனுக்குரிய விரதங்களில் முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றது.

இவ்விரதம் மாசி மாதத்தில் வரும் கிருஷ்ணபட்ஷ சதுர்த்தசியில் அனுட்டிக்கப்படுவதாகும்.

இச்சிவராத்திரியானது சிவனுக்குரிய இரவு எனக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் சிவம் என்பது மங்களம் என்ற ஒரு பொருளாகவும் கொள்ளப்படுவதால் சிவராத்திரி சிவனுக்குரிய ஒரு இரவுமட்டுமல்ல அது மங்களத்திற்கும் உரிய இரவாகும். மகா சிவராத்திரியின் மேன்மையை சிவாகமங்கள் மற்றும் புராணங்களில் காணலாம்.

சிவராத்திரி குறித்து காஞ்சி மாமுனிவர் பின்வருமாறு கூறியுள்ளார்

உருவமற்ற முழுமுதற் கடவுள் பக்தர்களின் பிரார்த்தனைக்கு இணங்கி அரூபத்திற்கும் ஸ்வரூபத்துக்கும் இடையே உள்ள ஜோதிலிங்கமாகக் காட்சி அளித்த நன்னாளே மகா சிவராத்திரி என்கிறார்.

மேலும் இவ்விரதம் தோன்றியமைக்கான காரணங்கள் பற்றி நோக்கின் முன்னொரு காலத்தில் பிரமனும் திருமாலும் தம்முன் யார் பெரியவர் என்று அறிதற் பொருட்டு கலகஞ் செய்தனர். அவ்வேளையிலே சிவ பொருமான் அடியும் முடியும் இல்லா அக்கினிப் பிழம்பாக அவர்கள் முன் தோன்றி இவ்வக்கினியின் அடியை அல்லது நுனியைக் கண்டவரே பெரியவர் என்று அருளினார்.

அதனைக் கண்டு ஆச்சரியமடைந்த இருவரும் கலகஞ் செய்தலை விடுத்து அடி முடி தேட ஆரம்பித்தனர்.

திருமால் பன்றி உருவெடுத்து பாதாளம் வரை சென்றும் அடியைக் காணவில்லை. பிரமன் அன்னப் பறவையாக ஆகாயத்துக்கு மேல் பறந்தும் அதன் முடியை அறிய முடியவில்லை.

இங்ஙனம் இவ்விருவருமறியா ஒளிமயமாய் நின்ற சிவபெருமான் அவர்கள் மேலிரங்கி அவர்களுக்கு அருள்புரிவதற்காக அவ்வொளியைச் சுருக்கி சிவலிங்கத் திருவுருவங் கொண்டருளினார் எனக் கூறப்படுகின்றது. மற்றுமொரு கர்வம் முடிந்து மகா பிரளயம் ஏற்பட்ட காலத்தில் சகல உயிரினங்களும் ஒடுங்கிய ஒரு பேரமைதி நிலவியது. எங்குமே இருள் மயம். அங்கு சிவனையும் சக்தியையும் தவிர எஞ்சியவர்கள் வேறு எவரும் இல்லை.

சிவனோ யோக சமாதியில் ஆழ்ந்திருக்கிறார். மீண்டும் படைப்புக் கடவுள் பிரமன் தோன்றி ஒடுக்கத்தில் உள்ள உயிர்களைப் படைக்கும் நேரம் நெருங்கிவிட்டது.

அன்னை சக்தி ஒடுங்கியுள்ள உயிர்கள் அனைத்தும் மீண்டும் தோன்றப் போகின்றன என்பதை உணர்கிறாள். கருணாமயி ஆன உமையவள் சென்ற கர்பத்தில் உயிர்கள் உற்ற இன்னல்களை நினைத்து மனம் உருகுகிறாள்.



மீண்டும் உற்பவம் ஆகவிருக்கும் உயிர் கள் பந்தபாசம் என்ற வினைத்துயர் நீங்கி சிவ புண்ணியம் என்ற அழியாச் செல்வம் எய்தி சிவானந்த முக்தி பெற வேண்டும் என்று இரவின் நான்கு சாமங்களிலும் அவள் சிவ பெருமானைப் பூசிக்கிறாள். இதுவே மகா சிவராத்திரி எனக் கூறப்படுகின்றது.

தேவர்கள் கடைந்த பாற்கடலில் ஆலகால விஷம் தோன்றியது. உலகை உய்விக்க சிவபிரான் அந்த விஷத்தைத் தாம் ஏற்றுப் பருகி தியாகராஜனாக உயர்ந்த காலம் சிவராத்திரி எனவும் கொள்ளப்படுகின்றது.

அடுத்து சூரியன், சந்திரன், அக்னி ஆகிய மூவரும் சிவபெருமானின் மூன்று கண்களாக விளங்குகிறார்கள். அன்னை சக்தி ஒரு சமயம் விளையாட்டாக சிவபிரான் கண்களைப் பொத்துகிறாள்.. அதனால் சகல புவனங்களும் இருண்டுவிட எல்லா உயிர்களும் கதிகலங்கித் துன்புறுகின்றன. அப்போது இறைவனைத் தேவர்கள் வழிபட்டு மீண்டும் ஒளி விட்ட தினம் சிவராத்திரி எனவும் கூறப்படுகின்றது.

சிவராத்திரி விரதத்தன்று உபவாசம் இருந்து நான்கு சாமமும் சிவபூசை செய்தல் வேண்டும். இந்நான்கு சாமங்களும் விழித்திருந்து இச்சாமங்களிலே சிவபூசை செய்வதே சிறந்ததாகும்.

சிவராத்திரி இரவிலே சிவபுராணம் ஓதுவதும் பங்சாட்சர செபம் செய்வதும் உயர் பலனைக் கொடுக்கும். சிவ பூஜா விதி என்ற நூல் சிவராத்திரி தினத்தில் நான்கு சாமமும் எவ்விதம் பூஜைமுறை அமைய வேண்டும் ஏன விளக்கம் தருகிறது. அதாவது,

**முதலாம் சாமம்**-பஞ்ச கௌவியத்தார் மூர்த்தியை அபிஷேகம் பண்ணிச் செம்பட்டு அணிவித்து பச்சைக் கர்ப்பூர நறுமணம் ஊட்டப்பட வேண்டும்.

**இரண்டாம் சாமம்**- பஞ்சாமிர்த அபிஷேகம் செய்து மஞ்சள் பட்டுச் சாத்தப்பட வேண்டும்.

**மூன்றாம் சாமம்**- தேன் அபிஷேகம் செய்து வெண்பட்டுச் சாத்தப்பட வேண்டும்.

**நான்காம் சாமம்**-கருப்பஞ்சாறு அபிஷேகம் செய்து நீலப்பட்டு மூர்த்திக்கு அணிவித்து பூசை இடம்பெற வேண்டும்.

சிவராத்திரி விரதம் அனுட்டிப்பவர்கள் முதல் நாள் ஒரு பொழுது உணவு உண்ண வேண்டும்.

சிவராத்திரி அன்று முழுவதும் உபவாசமாக இருக்க வேண்டும். பகலில் உறங்கக் கூடாது. முற்றிலும் உபவாசம் இருப்பது சிறந்ததாகும். அது முடியாதவர்கள் முதல் சாமம் வரை மட்டுமாவது உபவாசம் இருந்து விட்டு விரதத்தை முடிக்கலாம்.

விரத காலத்தில் பாலும் நீரும் பழமும் உண்ணலாம். சிவராத்திரி முடிந்த மறு நாள் பாரணை எனப்படும் உபவாசத்திற்குப் பிறகு உட்கொள்ளும் முதல் உணவை உட்கொள்ள வேண்டும்.

பின் பகல் பொழுதை சிவபுராணங்களைப் கேட்டு அல்லது சொல்லி சிவசிந்தனையில் கழிக்க வேண்டும். இரவில் உணவின்றி உறங்கச் செல்ல வேண்டும்.

சிவராத்திரி இரவிலே பதின்னான்கு நாழிகைக்கு மேல் வரும் நடுசாமம் லிங்கோற்பவ காலமாகும்.

எனவே சிவராத்திரியாகிய இன்று இரவு முழுவதும் விழிக்க இயலாதவர்கள் லிங்கோற்பவ காலம் வரையாவது (இரவு 12 மணி வரையாவது) விழித்திருந்து சிவனை நினைந்து வழிபடுவதன் மூலம் சிறந்த பலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி.த.செந்தில்நாதன்**
சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்

## சிவனை நாம் வணங்கி நிற்போம்

சினமெமை தீண்டா நிற்க
சிரமதில் கனதி போக
பரமனின் பாதம் பற்றி
பணிந்துமே நிற்போம் என்றும்

மனிதராய் வாழ வேண்டில்
மனமதில் தூய்மை வேண்டும்
புனிதராய் இருக்க வேண்டில்
போற்றுவோம் பரமன் தன்னை

ஆணவம் தமக்குள் ஏற
அனைத்தையும் மறந்தே நின்ற
மாலொடு பிரமன் தானம்
மதிகெட்ட செயலைச் செய்தார்

கடவுளர் தாமோ என்று
கங்கணம் கட்டி நின்று
அழிவினை தேடும் வண்ணம்
அவர்நிலை ஆயிற்றன்றோ

ஆணவம் அழிக்க அங்கே
ஆளவிலா ஜோதி தோன்றி
காணுங்கள் ஆதி அந்தம்
கடவுளாய் ஆவீர் நீங்கள்

என்ற அச்சேதி கேட்டு
இருவரும் முயற்சி செய்து
பன்றியாய் பட்சி ஆகி
பற்பல வித்தை செய்தார்

வென்றவர் யாருமின்றி
விக்கித்து நின்ற போது
அங்குமே சிவனும் தோன்றி
ஆணவம் போக்கி நின்றார்

என்றுநாம் அறியும் வண்ணம்
இயம்பிடும் புராணம் தன்னை
நன்றுநாம் கற்றோம் ஆனால்
நாமுமே திருத்தி வாழ்வோம்

மனங்களில் அழுக்கு வந்தால்
மாயையே தோன்றி நிற்கும்
குணமெலாம் மாறிப் போகும்
குறைகளே குவிந்து நிற்கும்

அறமெலாம் மறந்தே போகும்
ஆணவம் ஆட்சி செய்யும் அரனது
நாமும் கூட
அனைவரும் மறந்தே போவர்

சிவனது இரவு தன்னில்
அவனையே மனதில் எண்ணி
பலவினை போக்கு என்று
பணிவுடன் வேண்டி நிற்போம்

நீறுஅணிந்த நெற்றியோடு
ஆறு அணிந்த சடையுடையான்
பேறுதனைப் பெற்று விட
கூறி நிற்போம் அவன் நாமம்

தவமுடன் சிவனை எண்ணி
தலை மீது கையை வைத்து
சிவனை நாம் வணங்கி நிற்போம்
சிவனது இரவு தன்னில்!

**எம்.ஜெயராமசர்மா,**
**மெல்பேண்**

## சிவராத்திரி தினத்தன்று கர்ப்பூரம் ஏற்றி பிரார்த்தனை

(தொல்புரம்)

பொன்னாலைச் சந்தி நாராயணன் ஆலயத்தில் இன்று 17 ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று கலாபூஷணம் க.லோகேஸ்வரன் தலைமையில் மாலை 6 மணி தொடக்கம் விசேட பூஜை வழிபாட்டுடன் இரவு முழுவதும் கர்ப்பூரம் ஏற்றி பிரார்த்தனை இடம் பெறவுள்ளது. (இ-3-70)

## சிவராத்திரியை முன்னிட்டு சமய, கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய பரிபாலன சபையும் சொக்கவளவு சோதி விநாயகர் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் சமய, கலை நிகழ்வுகள் இன்று 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7.30 மணிக்கு சொக்கவளவு சோதி விநாயகர் ஆலய மண்டபத்தில் பரிபாலன சபை செயலாளர் பொன். சந்திரவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ)

## சிவபூமி மடத்தில் சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கீரிமலை சிவபூமி மடத்தில் சிவராத்திரி விழா விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை இன்று இரவு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களின் காத்தவராயன் கூத்து மற்றும் பண்ணிசை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. அத்துடன் இன்றும் நாளையும் மகேஸ்வரபூஜையும் இடம்பெறவுள்ளது. (இ-3)

## சிவராத்திரி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

மகா சிவராத்திரி நிகழ்வுகள் இன்று 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளன.

மாலை 5.55 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நள்ளிரவு 12 மணிக்கு சிவலிங்கத்திற்கு வில்வ அர்ச்சனை நடைபெறும். காலை 6 மணிக்கு மங்களாராத்தியுடன் நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தான் யாதவ்.

சற்றுத் தொலைவில், மலர்களுடன் பேசிக்கொண்டிருந்தாள் சிட்டு.

அப்போது, வண்ணத்துப்பூச்சிகள் கூட்டமாக தோட்டத்தைக் கடந்துசென்றன.



# விடை தேடிய வண்ணத்துப்பூச்சி!

"எவ்வளவு அழகான வண்ணத்துப்பூச்சிகள்! பூத்துக் குலுங்கும் மலர்களைக்கூட பார்க்காமல் எல்லாம் எங்கே செல்கின்றன' என யோசித்தான் யாதவ்.

"அழகான வண்ணத்துப் பூச்சிகளே, நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்? இவ்வளவு வேகமாக எங்கே செல்கிறீர்கள்?" என்று உரத்த குரலில் கேட்டான்.

அந்தக் கூட்டத்திலிருந்து ஒரு வண்ணத்துப்பூச்சி மட்டும் யாதவை நோக்கிப் பறந்து வந்தது.

அவன் விரல் நுனியில் அமர்ந்தது. என் பெயர் முகில்.

நாங்கள் கிழக்குத் திசைக் காட்டிலிருந்து வருகிறோம்" என்றது.

"என் பெயர் யாதவ்.

அதோ, பூக்களுடன் பேசி விளையாடும் அவள், என் தங்கை சிலம்பரசி.

நான், செல்லமாக "சிட்டு' என்று கூப்பிடுவேன்" என்றான்.

உங்கள் தோட்டம் மிகவும் அழகாக இருக்கிறது என்றது வண்ணத்துப்பூச்சி.

வண்ணத்துப்பூச்சியே, இந்தத் தோட்டம் உருவானதில் ஒரு ரகசியம் உள்ளது.

அது என் தங்கை சிட்டுவுக்குத் தெரியாது.

அதை உன்னிடம் சொல்கிறேன் என்றான் யாதவ்.

ரகசியம் எனக் கூறியவுடன், கூட்டத்துடன் செல்லவேண்டிய வண்ணத்துப்பூச்சி, தனது வேலையை மறந்தது.

சொல்லு யாதவ்.

அந்த ரகசியத்தை சிட்டுவிடம் சொல்ல மாட்டேன் என்றது.

யாதவ் சொல்ல ஆரம்பித்தான்.

கோடை விடுமுறை தொடங்கிய நேரம் அது.

ஒருநாள் நானும் சிட்டுவும் விளையாடிக்கொண்டே வெகு தூரம் சென்றுவிட்டோம்.

நாங்கள் சென்ற பாதையில், ஒரே ஒரு செடி இருந்தது.

அதில், ஒரே ஒரு பூ இருந்தது.

சிட்டு, அந்தச் செடியை வீட்டில் வளர்க்க ஆசைப்பட்டாள்.

அதைக் கொண்டுவந்து கொல்லைப்புறத்தில் நட்டு வைத்தோம்.


அந்தச் செடிதான், இவ்வளவு பெரிய தோட்டமாக மாறியதா?

இல்லை.

அந்தச் செடியிலிருந்த பூ அடுத்த நாளே வாடிவிட்டது.

செடியும் வளரவில்லை.

சிட்டு மிகவும் கவலைப் பட்டாள்.



அந்தப் பூச்செடி பெரிதாகி, கொல்லைப்புறம் முழுவதும் பூந்தோட்டமாக மாற வேண்டும் என அவளுக்கு ஆசை.

அதனால், தினமும் அந்தச் செடிக்கு தண்ணீர் ஊற்றுவாள்.

அதன் அருகில் அமர்ந்து, "ஏன் செடியே என்மீதுகோபமா. ஏன் வளர மாட்டேங்கிறே?' என்று கேட்பாள் என்றான் யாதவ்.



அப்புறம் என்ன ஆச்சு? என்று படபடத்தது வண்ணத்துப் பூச்சி.

அந்தச் சமயத்தில் ஊரிலிருந்து பாட்டி வந்திருந்தார்.

சிட்டு, அவரோடு ஊருக்குச் சென்றாள்.

நான் நீச்சல் வகுப்பில் சேர்ந்திருந்ததால், செல்ல முடியவில்லை.

"இந்தச் செடியைப் பார்த்துக்க அண்ணா' என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

இதை என்ன செய்யலாம் என யோசித்தவாறு, தனியாகச் சென்றேன்.

அப்போது, தேன் வண்டு ஒன்று என்னைப் பார்த்தது.

"ஏன் சோகமா இருக்கே? என்று கேட்டது.

நான் விஷயத்தைச் சொன்னேன்.

அந்தத் தேன்வண்டு, "கவலைப்படாதே, எனக்குப் பூச்செடிகள் இருக்கும் இடங்கள் தெரியும்.

தினமும் ஒரு பூச்செடியைக் கொண்டுவந்து தருகிறேன்' என்று சொல்லியது.

அது கொடுத்த விதைகளை எடுத்துவந்து விதைத்தேன்.

அவை நன்றாக வளர்ந்தன. சிட்டுவும் ஊரிலிருந்து திரும்பி விட்டாள்.

அவள் நட்டுவைத்த பூச்செடிதான் இத்தனை செடிகளையும் உருவாக்கியதாக நம்பினாள்.

தினமும் தண்ணீர் ஊற்றி, கவனமாகப் பார்த்துக்கொண்டாள். அவளால்தான் இவ்வளவு பெரிய தோட்டம் உருவாகி இருப்பதாக சந்தோஷப்படுகிறாள் என்றான் யாதவ்.

வண்ணத்துப்பூச்சி மேலே பார்த்தது.

அதனுடன் வந்த வண்ணத்துப்பூச்சிகள் தொலைவில் சென்றுகொண்டிருந்தன.

யாதவ், என்கூட வந்தவர்கள் சென்றுவிட்டார்கள்.

நானும் சென்றாக வேண்டும்.

நாங்கள் வெகு தொலைவில் உள்ள குறிஞ்சி மலரைப் பார்க்கச் செல்கிறோம் என்றது.

அற்புதமான மலரைப் பார்க்கச் செல்கிறீர்கள்.

எனக்கு ஒரு உதவி செய்வாயா? என்றான் யாதவ்.

என்ன உதவி?

(தொடரும்)

02.2015
17

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1788 - லெப்டினண்ட் போல் (Ball) என்பவன் சிட்னியிலிருந்து நோர்போல்க் தீவுக்கு கைதிகளைக் குடியேறச் சென்ற போது மனிதர் களற்ற லோர்ட் ஹோவ் தீவைக் கண்டு பிடித்தான்.
- 1854 - பிரித்தானியா ஒரேஞ்சு சுயாதீன நாட்டை விடுதலை பெற்ற நாடாக அங்கீகரித்தது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: எச்.எல். ஹன்லி என்ற நீர்மூழ்கிக் கப்பல் யூஎஸ்எஸ் ஹவுசட்டோனிக் என்ற போர்க்கப்பலைத் தாக்கி மூழ்கடித்தது.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: தென் கரோலினாவின் கொலம்பியா நகரம் அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் படைகள் வெளியேற்றத்தின் போது தீயிடப்பட்டது.
- 1867 -சூயஸ் கால்வாய் ஊடாக முதலாவது கப்பல் சென்றது.
- 1881 - இலங்கையில் இரண்டாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. நாட்டின் மொத் தத் தொகை 2,759,738, வட மாகாணத்தில் 302, 500, யாழ்ப்பாணத்தில் 40, 057 ஆகக் கணக்கெடுக்கப்பட்டது.
- 1933 - நியூஸ்வீக் முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1947 - வொயிஸ் ஒஃப் அமெரிக்கா தனது ஒலிபரப்புச் சேவையை சோவியத் ஒன்றியத்துக்கு விஸ்தரித்தது.
- 1979 - மக்கள் சீனக் குடியரசுக்கும் வியட்நாமுக்கும் இடையில் போர் ஆரம்பமாகியது.
- 1990 - இலங்கையின் ஊடகவியலாளர், மனித உரிமை செயற்பாட்டாளர் ரிச்சர்ட் டி சொய்சா கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- 1996 - பென்சில்வேனியாவில் இடம்பெற்ற சதுரங்க ஆட்டத்தில் காரி காஸ்பரொவ் ஐபிஎம்மின் டீப் புளூ கணினியை வென்றார்.
- 2000 - விண்டோஸ் 2000 வெளியிடப்பட்டது.

**பிறப்புகள்**

- 1888 - ஓட்டோ ஸ்டேர்ன், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானிய இயற்பியலாளர் (இ. 1969)
- 1927 - யுவான் அல்மெய்டா, கியூப புரட்சியாளர் (இ. 2009).

**இறப்புகள்**

- 1956 - எஸ். வையாபுரிப்பிள்ளை, தமிழறிஞர், பதிப்பாளர் (பி. 1891)
- 1970 - ஷ்மூவெல் யோசெப் ஆக்னன், நோபல் பரிசு பெற்ற இஸ்ரேல் எழுத்தாளர் (பி. 1888)
- 1986 - ஜே. கிருஷ்ணமூர்த்தி, தத்துவவியலாளர் (பி. 1895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

..."மூன்று முகம்" படத்தைத் தொடர்ந்து மேலும் பல வெற்றிப் படங்களை ரஜினி கொடுத்தார்.

ஏவி.எம். தயாரிப்பான **பாயும் புலியில், "கராத்தே", "குங்பூ"** முதலான சண்டைகளை மின்சார வேகத்தில் செய்து, ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தினார்.

**புது மாதிரியான படம்**

சண்டைக் காட்சிகளில், ரஜினியின் நடிப்பு படத்துக்குப்படம் மெருகேறிக் கொண்டிருந்தது. எனவே, சண்டைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து **"பாயும் புலி"** படத்தைத் தயாரிக்க ஏவி.எம். முடிவு செய்தது. இதற்கான கதை, வசனத்தை பஞ்சு அருணாசலம் எழுதினார்.

எஸ்.பி.முத்துராமன் இயக்கினார். பாடல்கள் வாலி இசை இளையராஜா.

இந்தப் படத்தின் முன் பகுதியில் பயந்தாங்கொள்ளியாக ரஜினி வருவார். தங்கை கற்பழிக்கப் பட்டாள் என்று அறிந்ததும், ஆக்ரோஷமாக மாறி, **கராத்தே, குங்பூ** முதலிய சண்டைகளைக் கற்று, எதிரிகளைப் பந்தாடும் கதாபாத்திரம்.

ஆயிரம் அடிக்கு ஒரு சண்டைக்காட்சி. புகுந்து விளையாடினார, ரஜினி.

**ராதா**

இதில், ரஜினிக்கு ஜோடியாக ராதா நடித்தார்.

மற்றும் மனோரமா, இந்திரா, "சில்க்" சுமிதா, ஜெய்சங்கர், பாலாஜி, வி.கே.ராமசாமி, ஒய்.ஜி. மகேந்திரன், சத்யராஜ் ஆகியோரும் நடித்திருந்தனர்.

14-1-1983இல் வெளிவந்த இந்தப்படம், நூறு நாட்களைக் கடந்து ஓடி பெரிய வெற்றி பெற்றது.

**மீண்டும் ஸ்ரீதர்**

பட அதிபர் கே.ஆர்.ஜி. தயாரித்த துடிக்கும் கரங்கள் படத்தில் ஸ்ரீதர் இயக்கத்தில் ரஜினி நடித்தார.

"இளமை ஊஞ்சலாடுகிறது" படத்தூச்குப்பின், ஏறத்தாழ ஐந்தாண்டு இடைவெளிக்குப்பிறகு ரஜினியும், ஸ்ரீதரும் இப்படத்தில் இணைநதனர். ரஜினியுடன் ராதா, சுஜாதா, சில்க் சுமிதா, வனிதா, ஜெய்சங்கர், வஜயகுமார் ஆகியோரும் நடித்தனர. இந்தப் படத்தின் மூலம்தான் பின்னணி பாடகர் எஸ்.பி.பால சுப்பிரமணியம், இசை அமைப்பாளராக அறிமுகமானார். பாடல்கள் எல்லாம் பிரபலமாயின. 4-3-1983 இல் வெளிவந்த இந்தப்படம், நூறு நாளை நெருங்கி ஓடி, வசூல் ரீதியாக வெற்றிப்படமாக அமைந்தது.



ரஜினி- ராதா ( பாயும் புலி)

**"சித்ராலயா" கோபு**

**"துடிக்கும் கரங்கள்"** படத்துக்கு இணை இயக்குனராகப் பணியாற்றிய சித்ராலயா கோபு, அப்போது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி கூறியதாவது:- **"துடிக்கும் கரங்கள்"** குறுகிய காலத் தயாரிப்பாகும். ஊட்டியில், ஒரு மாதத்தில் இப்படம் தயாரிக்கப்பட்டது. ரஜினி ரொம்ப சுறுசுறுப்பாக இருப்பார். டைரக்டர் வருவதற்கு முன்பே, மேக்கப் போட்டு தயாராக இருப்பார். நேரம் தவறாமையில் சிவாஜியும், ரஜினியும ஒரே மாதிரியானவர்கள்.

டைரக்டர் ஸ்ரீதர் மீது ரஜினி மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார். ஒவ்வொரு காட்சியும் படமானதும், சரியா? என்று டைரக்டரிடம் கேட்பார். என்ன சீன்? என்று கேட்டு, அதை உள்வாங்கி மனதில்பதிய வைதுக் கொண்டு, கச்சிதமாக நடித்து முடிப்பார்.

**எளிமை**

ரஜினி, எளிமையானவர். படப்பிடிப்பின் இடைவேளையில், தனியாக எங்கேயாவது படுத்து தூங்குவார். பந்தா எதுவும் இல்லாதவர். மற்றவர்களுடன் பேசும் போது, மரியாதையாக சார் போட்டு பேசுவார்.

ரஜினியை நான் தனியாக இயக்கியதில்லை. இப்படத்தின் ஒரு சிறு காட்சியை படமாக்கும் பொறுப்பை என்னிடம் ஸ்ரீதர் ஒப்படைத்தார். மெக்கானிக் ஷெட்டில் ரஜினி வேலை செய்வார். அப்போது அவர் டெலிபோனில் பேசுவது போன்றதுதான் அக்காட்சி. அப்போது உணர்ச்சிததும்ப நடித்தார். சூப்பர் ஸ்டாரை அந்த ஒரு காட்சியில் இயக்கியதை பெருமையாக கருதுகிறேன்.

**பிறந்த நாள்**

ஊட்டியில் படப்பிடிப்பு நடந்த போது, ரஜினியின் பிறந்தநாள் வந்தது. பிறந்த நாளை ஆடம்பரமாகக் கொண்டாட விரும்பாதவர் ரஜினி. ஆயினும், சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார், பட அதிபர் கே.ஆர்.ஜி. ரஜினியின் மனைவி லதாவும் ஊட்டி வந்து, இந்த விழாவில் கலந்து கொண்டார். ரஜினியின் பிறந்த நாளில் பங்கு கொண்ட அந்த நாளையும் என்னால் மறக்க முடியாது. இவ்வாறு சித்ராலயா கோபு கூறினார்.

**தாய் வீடு**

தேவர் பிலிம்ஸ் தயாரித்த தாய் வீடு படத்தில், கார் திருடனாக ரஜினி நடித்தார்.

*(தொடரும்)*



# கருவாச்சி காவியம்

**வைரமுத்து- 80**

....மறுகு கருது அறுத்துவச்ச கம்பங்கருது மூடைக ரெண்டு ஓரத்துல.

பச்சைப் பிள்ளக்காரி பிள்ளைய அட்டத்துல போட்டுப் படுத்திருக்க மாதிரி கம்பங்கருதுச் சாக்குகளுக்கு அங்கிட்டு ஒண்ணும் இங்கிட்டு ஒண்ணுமா ரெண்டு பூசனிக்கா.

குடிசைக் கூரைக்கு மத்தியில கயிறு கட்டிச் சுக்காக் காஞ்சு தொங்குது சொரக்குடுக்க ஒண்ணு .

இடுப்பப்புடிச்சு யப்பே! யாத்தேன்னு கத்திக்கதறச் சாஞ்சு விழுந்து சாஞ்சு கெடக்கா கம்பங்கருது மூட்டையில கருவாச்சி.

கடவுளே! ஒத்தையில பிள்ள பெறுன்னு என் நெத்தியில எழுதிட்டியா?

இந்த ஒலகத்துல மொதல்பிள்ள பெத்த பொம்பளைக்கு எவ பிரசவம் பாத்தது?

அப்பிடி ஆகிப்போச்சா இந்தக் கருவாச்சிக் கத.

முண்டித் தவிக்குது பிள்ள.

முட்டித் தெறிக்குது வலி.

இந்தப் பொழப்புக்குத் செத்தே போகலாம் போலிருக்கே! பேறுகால வலியில் துடிக்கிற எல்லாப் பொம்பளைகளும் ஒரு தடவையாவது போயிட்டு வாரா முடிவுக்கு அவளும் போயிட்டு வந்துட்டா.

முன்னப் பின்னப் பிள்ளை பெத்தவ இல்லையே யாத்தே நான் என்ன பண்ணுவேன்.

ஆளுக யாரச்சும் கூட இருந்தா நாம மல்லாக்கக் கெடக் காலம்.

வேலைய அவுக பாப்பாக.

இப்ப நானேதான் பிள்ளத்தாச்சி நானே தான் மருத்துவச்சி மல்லாக்காக் கெடந்து எடக்கு மடக்காகிப் போனா எந்திரிக்க முடியுமா.

அனத்திக்கிட்டே ஒரு கையத் தரையில உண்டி ஒருக் கழிச்சு எந்திரிச்சா.

சர சரன்னு சீலய தெரைச்சுத் தொடைக்குமேல சுருட்டி இடுப்புக்கு மேல ஏத்திவிட்டா.

பல்லக் கடிச்சு முனக்கிக்கிட்டே முனுக்க சாக்க இழுத்துப்போட்டு அதுமெல முட்டிக்கால் போட்டடா.

ரெண்டு பக்கமும் ரெண்டு கையத் தரையில அழுத்தி ஊண்டிக்கிட்டு ஆனமட்டும் தொடை ரெண்டையும் அகலப்படுத்திக்கிட்டா.



தலைய முன்னுக்க இழுத்து லேசா குனிஞ்சு பாத்தா சும்மா செஞ்சாந்தக் கரைச்சு விட்டமாதிரி செக்கச் செவேர்ன்னு ஒழுகுது தீட்டு.

வெளிய அடற்கிருச்சு மேகம்.

இருட்டிருச்சு பூமி.

என்னமோ ஆகாயத்திலிருந்து ஆதிசேசன் எறங்கி வாரமாதிரி உஸ்ங்குது ஊதக்காத்து.

மின்னலவிட்டு ஒரு தாக்கல் சொல்லி இடிய அனுப்பி ஒரு தண்டோரா போட்டு வரப்போறேன்னு சொல்லி விடுது மழை.

சடபுட சடபுடன்னு ஓலக் குடிசை மேல விட்டுவிட்டுத் தாளம் போட்டுட்டுப் போகுது தூறல்.

முட்டிக்கால் போட்டவ முக்குறா.

சும்மா கருப்புத் தந்தம் மாதிரி கெட்க்குற தொடையில கையவச்சு ஆனமட்டும் அழுத்திப்பாக்கிறா.

கடவுளே பிள்ள பெறக்குறதுன்னா என்னா? நீயே வெளிய எடுக்கிறதா? தாயே வெளிய தள்றதா?

தலைக்கு மேல தொங்குன சொரக்குடுக்கைய இறுக்கிப் புடிச்சிக்கிட்டா மரம் விட்டு மரம் தாவுற குரங்குக் கழுத்துக் குட்டி புடிச்சுக்கிட்ட மாதிரி.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் ஜனாதிபதி மைத்திரிபால




இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அவலோகிதேஸ்வர போதிசத்வ சிலையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பிற்பகல் திரைநீக்கம் செய்து வைத்தார்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விருந்தினர் பதிவேட்டில் கையொப்பமிடுகிறார்



இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜுடன் ஜனாதிபதி மைத்திரி



இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதி ஏற்கின்ற போது...




ஜனாதிபதி மைத்திரியும் அவரது பாரியாரும் ராஜ்பவனில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மற்றும் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரால் வரவேற்கப்பட்ட போது...




ஜனாதிபதி மைத்திரியும் பாரியாரும் மகாத்மா காந்தி நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிற போது...



ராஜ்பவனில் இந்திய பிரதமர் நரேந்திரமோடியும் ஜனாதிபதி மைத்திரியும்



இந்திய மற்றும் இலங்கை அரச தரப்புப் பிரதிநிதிகள் பங்கு கொண்ட கூட்டம்



இலங்கை ஜனாதிபதி மைத்திரி மற்றும் அவரது பாரியாரிடம் மகாத்மா காந்தியின் நினைவுச் சின்னம் வழங்கப்பட்ட போது...

# சுய மருத்துவம் எந்தளவுக்கு நல்லது


"உடம்பு வலிக்குது. வரும் வழியில் அப்படியேஇரண்டு மாத்திரை வாங்கிட்டு வர்றியா?" - நம்மில் பெரும்பாலானோர் மருந்து வாங்கும் ஸ்டைல் இதுதான். உடல்வலி என்று மருந்துக் கடைகளில் கேட்டால், சிவப்பு, பச்சை, வெள்ளை டப்பாக்களில் இருந்து மாத்திரைகளை எடுத்து, ஒரு கவரில் போட்டுத் தந்துவிடுகிறார்கள். மாத்திரை சாப்பிடப்போகும் ஆள் ஆணா, பெண்ணா, குழந்தையா, என்ன வயது, வலி ஏன் வந்திருக்கிறது? என்கிற எந்த விபரமும் மருந்துக் கடைக்காரருக்குத் தெரியாது. மருந்துக்கடைக்காரர் மருந்தைப் பரிந்துரைக்கலாமா, அவர் என்ன படித்திருக்கிறார், மருந்தினால் வரும் பின்விளைவுக்கு அவர் பொறுப்பேற்பாரா? என்கிற எந்தக் கேள்விக்கும் நம்மிடமும் பதில் இல்லை. இஷ்டப்படி மாத்திரைகளை விழுங்குவது சரியா?

"வைத்தியசாலைக்கு போனால் அந்த டெஸ்ட், இந்த டெஸ்ட் என்று செலவு வைத்திடுவார்கள்.மருந்துக் கடை என்றால் முப்பது ரூபாயில முடிஞ்சிடும்" என்பதுதான் இந்த அலட்சியத்துக்கு நாம் சொல்லும் காரணம். 30 ரூபாய் மாத்திரையில் வலி கொஞ்சம சரியாகலாம், ஆனால், கண்டுபிடிக்கப் படாத நோய் உள் ளேயே இருந்து, நம்மை அரித்துக்கொண்டுதான் இருக்கும். "வயிற்று வலி என்று 5 வருடமா கடையில மாத்திரை வாங்கி சாப்பிட்டுட்டு இருந்தார், கடைசியில் வைத்தியசாலைக்குப் போனா புற்றுநோய் இருக்கு என்று டாக்டர் சொன்னார். நோய் முத்திப்போச்சாம், இனி ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லிடடார்கள் என்று கடைசி நிமிடத்தில் கதறுவது இந்த அறியாமையின்விளைவு தான.

வளர்ந்த நாடுகளில் மருத்துவர் பரிந்துரைக்கும் மருந்துச்சீட்டு இல்லாமல், மருந்துகளை வாங்கவே முடியாது. மருத்துவர் ஆன்டிபயாடிக்கை பரிந்துரைத்தால்கூட அது ஏன்? எதற்கு? அதனால் ஏற்படும் விளைவுகள் என்ன? போன்றவற்றை பிரின்ட்அவுட் எடுத்து, நோயாளிக்கு கொடுத்துவிட்டு, அதில் நோயாளியின் கையெழுத்தையும் வாங்கிக்கொள்வார்கள். தூக்கம் தரும் மருந்துகளை சாப்பிட்டால், வாகனம் ஓட்டக்கூடாது, மீறி ஓட்டினால் அபராதம் கட்ட வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கியிருக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் மருந்துகளுக்கு என இவ்வளவு கடுமையான சட்டங்களும், கட்டுப்பாடுகளும் இல்லை.

**சுய மருத்துவம் நல்லது அல்ல!**

மருத்துவர் நோயாளியை நேரடியாகச் சந்திக்கும்போது மட்டுமே, நோயின் தன்மையை அவர் அறிய முடியும். நோயாளியின் உடல் நிலை, வயது, இயல்பு, எதிர்ப்பாற்றல், நோயின் தாக்கம் போன்ற காரணிகளைவைத்தே, ஒரு நோயாளிக்கு மருத்துவர் மருந்துகளைப் பரிந்துரைப்பார். மருந்துக் கடைக்காரரோ, போனில் மருந்துகளைப் பரிந்துரைக்கும் மருத்துவர்களோ, நோயாளியின் உடல் நிலையை அறிய மாட்டார்கள். காய்ச்சல் என மருந்தகத்திற்குச் சென்று, மருந்து வாங்கினால், அவருக்கு பரசிட்டமோல் தருவது வழக்கம். இதுவே குளிர் காய்ச்சல் என்றால் மலேரியா அல்லது தைபோய்டுக்கான மருத்துகளைக் கடைக்காரர்களே தருகின்றனர். இதைச் சாப்பிட்டால், காய்ச்சல் குறையலாம். ஆனால், பின் விளைவுகள் தீவிர மாக இருக்கும.



தொடரும்...

Health Care
மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவரசு ஆரம்ப பாடசாலையில் இருந்து விசேட அதிரடிப்படையை வெளியேற்றுக

## ஆனந்தன் எம்.பி.கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா பூவரசங்குளம் பிரதேசத்தைச்சேர்ந்த பூவரசு ஆரம்ப பாடசாலையிலிருந்து விசேட அதிரடிப்படையினரை வெளியேற்றுமாறு புதிய அரசாங்கத்திடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது,

யுத்தம் நடைபெற்று முடிந்ததன் பின்னர் 2010ஆம் ஆண்டில் வவுனியா பூவரசங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள பூவரசு ஆரம்ப பாடசாலையில் விசேட அதிரடிப்படையினர் முகாமிட்டு பாடசாலையின் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தி வருவதுடன், பாடசாலையின் அபிவிருத்தி நடவடிககைகளுக்கும் தடையாயுமுள்ளனர்.

கொழும்பு உயர் பாதுகாப்பு வலய தனியார் காணிகளில் உள்ள பாதுகாப்புத்தரப்பினர் அப்புறப்படுத்தப்பட்டு அந்தக்காணிகளை உரியவர்களிடம் கொடுப்பதற்கு புதிய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ஆனால் யுத்தத்தினால் உண்மையில் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களின் வாழ்வியலோடு ஒன்றிய பாடசாலையிலிருந்து விசேட அதிரடிப் படையினரை வெளியேற்றுவதற்கு இன்னமும் அரசாங்கத்திற்கு மனம் வராமலிருப்பது கவலையளிப்பதாகவுள்ளது.

முன்னர் ஆட்சி செய்த அரசாங்கம் காதுகொடுத்துக் கேளாதிருந்த எமது கோரிக்கைகளை புதிய அரசாங்கம் செவிமடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

மேலும், இது தொடர்பாக பொலிஸ், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சருக்கும், பாதுகாப்புச் செயலாளருக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

பூவரசு ஆரம்ப பாடசாலையில் இரண்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள மேற்படி பாடசாலைக்காணி, கட்டடம், கிணறு, மலசலகூடம் என்பவற்றையும் இவர்களே தமது பயன்பாட்டில் வைத்துள்ளனர்.

125இற்கும் மேற்பட்ட மாணவர்களைக்கொண்ட மேற்படி ஆரம்ப பாடசாலை தற்போது அருகிலுள்ள பூவரசங்குளம் மகாவித்தியாலய கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

கடந்த வருடத்தில் இப்பாடசாலைக்கென 'Room to Rad' நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியானது பாடசாலை சமூகத்தின் பொறுப்பில் பாடசாலைக்கான காணியும் நிரந்தர கட்டடமும் இல்லாமையால் மீளப்பெறப்பட்டுள்ளது. இவ்வாண்டும் UNICEF, Educational Ministry என்பவற்றால் இரு கட்டடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. பாடசாலை சூழலிலிருந்து அதிரடிப்படையினர் விரைவில் வெளியேற்றப்படாவிட்டால் இவ்விரு கட்டடங்களும் கட்ட முடியாத நிலை மீண்டும் ஏற்படக் கூடும் என மேற்படி பாடசாலைச் சமுகம் அச்சம் கொண்டுள்ளது.

இப்பாடசாலை காணியிலிருந்து அதிரடிப்படையினரை வெளியேறுமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் இரு தடவைகள் கோரினார். வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்விலும் வவுனியா மாவட்ட அபவிருத்திக் குழு கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எனவே உடனடியாக விசேட அதிரடிப்படையினரை வெளியேற்றி, வந்த நிதி திரும்பிப்போகாமல் நிரந்தரக்கட்டடம் அமைக்க வழிவகுப்பதுடன், பின்தங்கிய கிராமப்புற சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கும் உதவுமாறு பாடசாலை சமுகம் என்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட மக்களின் பிள்ளைகள் தமது கற்றல் நடவடிக்கைகளை தமது சொந்த பாடசாலையில் தடையின்றி மேற்கொள்ள புதிய அரசு காலதாமதமின்றி உடன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2-250)

## விதை நெல்லை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுங்கள்

(தருமபுரம்)

காலபோக நெற்பயிர்ச்செய்கைக்கு தேவையான அளவு விதை நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய விதை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்ள வேண்டுமென யாழ்.மாவட்ட கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

2014ஆம் ஆண்டு காலபோக நெல் விதைப்பில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு விதை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் குறைந்தளவு விதை நெல்லையே நியாயமான விலையில் வழங்கியிருந்தனர்.

அதேவேளை தனியார் துறை நிறுவனங்களும் விதை நெல்லை விவசாயிகளுக்கு விற்பனை செய்தன.

அத்துடன் தனிப்பட்ட விவசாயிகளிடம் இருந்தும் கொள்வனவு செய்து விவசாயிகள் பயன்படுத்தினர்.

அங்கீகரிக்கப்படாத நிலையிலுள்ள விதை நெல்லை விவசாயிகள் பயன்படுத்தியதால், முளைதிறன் வீதம் குறைவடைந்ததோடு நெல் பயிரில் வீரியம் இன்மையும், நோய்த் தாக்கமும் ஏற்பட்டது.

இதனைக் கருத்திற்கொண்டே இவ்வருட காலபோக நெற்செய்கைக்கு போதுமான அளவு விதை நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தி விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்குவதற்கு விதை நெல் உற்பத்தியாளர்கள்,கூட்டுறவு சங்கங்கள் ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

எனவே விதை நெல் கொள்வனவிற்கென விதை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு சங்கங்கள்,விவசாயத்திணைக்களத்தின் வழிகாட்டல் அல்லது ஆலோசனைகளுக்கு அமைய நெற்பயிரை பராமரித்து அறுவடை செய்தவர்களிடமிருந்து விதை நெல்லை கொள்வனவு செய்வதற்குரியஏற்பாடுகளைமேற்கொள்ளவேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-282)

## மாணவர்களிடம் பணம் வசூலிப்பு; நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(குருமன்காடு)

வவுனியா நகரை அணமித்த பகுதிகளில் உள்ள பல பாடசாலைகளிலும் மாணவர்களிடம் பல்வேறு காரணங்களை காட்டி பணம் வசூலிக்கப்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில பாடசாலைகளில் தனியார் கல்வி நிலையங்களின் ஊடாக கணனி நிலையங்களை ஆரம்பித்து அதற்கு மாணவர்களிடம் பணம் வசூலக்கப்படுவதாகவும் இதன் காரணமாக பல மாணவர்களும் பாடசாலையில் இக்கணனி கற்கையை தொடர பெருந் தொகை பணத்தை செலுத்தவேண்டியுள்ளதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இலவச கல்வித்திட்டத்தில் தனியார் கல்வி நிலையங்கள் நுழைந்து இவ்வாறு அதிகளவான பணத்தை பெறுவதற்கு அதிபர்களும் உடந்தையாக உள்ளதாகவும் அதிபர் மூலமாக மாணவாகளிடம் பணத்தை செலுத்துமாறு கடிதம் வழங்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

இதேவேளை வேறு சில பாடசாலைகளில் பதாகைகள் அமைத்தல், பாடசாலை அபிவிருத்தி என்ற போர்வையிலும் பணம் வசூலிக்கப்படுவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் கல்வி அதிகாரிகள் கவனமெடுத்து பெற்றோரிடம் இருந்து பெறபபடும் பணத்தை நிறுத்த வேண்டும் என கோரியுள்ளனர். (அ-2-250)




# அத்துமீறுகின்றனர் இந்திய மீனவர்கள்; மன்னார் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்







(மன்னார்)

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை கண்டித்து, மன்னார் மாவட்ட மீனவ சம்மேளனத்தின் ஏற்பாட்டில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று காலை மன்னாரில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மீனவ சம்மேளன தலைவர் அல்பிரட் ஜஸ்டின் சொய்சா தலைமையில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம், மன்னார் நகரின் பிரதான பாலத்தடியில் ஆரம்பமாகி பஸார் பகுதியூடாக மன்னார் வைத்தியசாலை வீதியை சென்றடைந்தது.அதன்பின் அங்கிருந்து மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் கலந்து கொண்டார்.

இதனைத்தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட நூற்றுக்கணக்கான மீனவர்கள், பதாகைகளை ஏந்தியவாறு இந்திய மீனவர்களின் வருகையை கண்டித்து பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

பின்னர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரியவிற்கான மனுவை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நந்தினி ஸ்ரான்லி டி மெல்லிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும் மகஜரை வழங்கமுடியாததை அடுத்து கோபமடைந்த மீனவர்கள், மன்னார் மாவட்டச செயலக பிரதான வீதிக்கு முன் அமர்ந்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மன்னார் பஸார் பகுதியில் நீண்ட நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. அதன்பின்னர் அங்கு வந்த மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட மீனவர்களின் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும், ஆர்ப்பாட்டம் முடியும் வரை மூடப்பட்டிருந்ததாக தெரிய வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தேர்தல்; இனவாதிகள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்



...ஒன்று, சிங்களப் பேரினத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தின் மூலம் பாசிச சிங்கள இராணுவத்தையும் அரசையும் வீழ்த்தி, தமிழீழத் தனியரசைப் பிரகடனம் செய்ய வேண்டும்.

பிரகடனம் செய்தால் மட்டும் போதாது. சர்வதேச சமூகம் இல்லையானாலும், பிற ஒரு சில நாடுகளாவது அதை அங்கீகரிக்க வேண்டும். இதற்காகத்தான் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முப்பது ஆண்டுகளாக நடந்தது. அதன் முடிவும் அனுபவமும் என்னவென்று அனைவரும் அறிவோம். மீண்டும் ஒரு படை கட்டி தமிழீழத் தனியரசுக்கான போர் கனவிலும் நடைபெறாது என்று சொல்லத் தேவையில்லை.

இரண்டு, புலி ஆதரவாளர்களும் தமிழினவாதிகளும் திராவிடக் கட்சிகளும் முயற்சிக்கும் வகையில் இவர்கள் நடத்தும் போராட்டங்கள், விண்ணப்பங்கள் மூலம் அழுத்தம் கொடுத்து இந்திய அரசோ அல்லது இவர்களில் ஒரு பிரிவினர் நம்புவது போன்று மோடி பிரதமராகியோ இந்திய ஆட்சியாளர்களிடம் ஈழ ஆதரவு நிலை உருவாகி அல்லது அமெரிக்கத் தலைமையிலுள்ள சர்வதேச சமூகம் ஈழத் தமிழர்களின் துயரம் கண்டு நெக்குருகி பொதுவாக்கெடுப்புக்கான, அதாவது ஈழத் தமிழருக்குத் தன்னுரிமைக்கான வாய்ப்புக் கிட்டலாம் அதாவது, இவர்கள் நடத்தும் வேட்டையில் கொம்புடன் கூடிய முயலைப் பிடிக்கலாம் என்கிறார்கள்.

மூன்று, சிங்களப் பேரினவாத, பௌத்த மதவெறி பாசிச ராஜபக்ச கும்பலை அதிகாரத்திலிருந்து தூக்கி எறிந்து இலங்கையில் ஒரு ஜனநாயக அரசு அமைந்து, அது ஈழத் தமிழர்களின் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையை ஏற்க வேண்டும். இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளும் வர்க்க முரண்பாடுகளும் மிகவேகமாக முற்றி வரும் சூழலில் புலிப் பூச்சாண்டியைக் காட்டியே சிங்களப் பேரினவாத, பௌத்த மதவெறியில் சிங்கள மக்களை நீண்ட காலத்துக்கு பாசிச ராஜபக்ச கும்பல் தனது அதிகார ஆதிக்கத்தில் இருத்தி வைத்திருக்க முடியாது என்பதையே இந்தியாவிலுள்ள நிலைமைகள் தெளிவாகக் காட்டுகின்றன. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சில ஆயிரம் வீரர்களையும் துருப்பிடித்த ஆயுதங்களையும் கொண்டிருந்த சிங்கள இராணுவம் இன்று நான்கு இலட்சம் வீரர்களையும் அதிநவீன ஆயுதங்களையும் கொண்ட முப்படைகளையும் பெற்று, உலகின் பெரிய இராணுவங்களில் ஒன்றாகிவிட்டது. சிங்கள இராணுவம் மட்டுமல்ல, இலங்கை அரசின் எல்லா உறுப்புகளிலும் பாசிச ராஜபக்ச குடும்பக் கும்பலின் ஆதிக்கம் நிறைந்துவிட்டது. அதற்கு எதிராகப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

> “
> **இராஜபக்சேக்களின் அரசியல் வீழ்ச்சியும், ஈழத்தமிழர்களின் சில கோரிக்கைகளையேனும் ஏற்கும் சிறிசேனா-ரணில் அரசு அமைந்திருப்பதும், ஈழச் சிக்கலுக்கான தீர்வுகளை மாறாநிலையியல் பார்வையில் அணுகக்கூடாது என்பதைத் தமிழினவாதிகளுக்கு இடித்துரைக்கிறது.**
> ”

ஆனால், அம்மக்கள் எவ்வளவு பெரிய மக்கள் சக்தியைத் திரட்டினாலும் ஈழத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் இஸ்லாமிய மக்கள் ஆதரவின்றி பாசிச ராஜபக்ச கும்பலின் அதிகார ஆதிக்கத்தை வீழ்த்த முடியாது. அதேபோல, சிங்கள உழைக்கும் மக்களின் ஆதரவின்றி ஈழத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும், இஸ்லாமியர்களும் என்னதான் போராடினாலும் தமது உரிமைகளைப் பெறவும் முடியாது. இது யாருடைய விருப்பங்களுக்கும் அப்பாற்பட்ட புறநிலை எதார்த்தம். நாம் கூறுவது, ஆளும் வர்க்கங்கள் சொல்லுவதைப் போல சுரண்டலுக்கான, அம்மக்களை ஒடுக்கி வைப்பதற்கான சமனற்ற கட்டாய ஒற்றுமையல்ல. சம உரிமை அடிப்படையிலான, ஜனநாயக முறையிலான ஒற்றுமை. பாசிச ராஜபக்ச குடும்பக் கும்பல் ஆதிக்கத்தைத் தூக்கியெறிவதற்கான போராட்டத்தில் பங்குபற்றியதற்கு ஈடாகவும் முன்நிபந்தனையாகவும் ஈழத் தமிழர்களும், மலையகத் தமிழர்களும், இஸ்லாமியர்களும் தமது உரிமைகளாகக் கோர முடியும். இதைத்தான் ஈழத் தமிழர்கள் உட்பட இலங்கையின் அனைத்து முற்போக்கு, ஜனநாயக சக்திகள் (அவை சிறியவையானாலும்) தமது பாதையாகத் தெரிந்தெடுத்துக் கொண்டு, இயக்கங்களைக் கட்டமைத்து வருகிறார்கள். இவ்வாறான பாதையைத்தான் ம.க.இ.க.-வினர் ஆதரிக்கின்றனர்.



ஆனால், இதெல்லாம் நடைமுறை சாத்தியமற்றவை, சிங்களவருக்குச் சாதகமானவை, தமிழீழத் தனியரசை நிராகரிப்பதற்குச் சொல்லப்படும் சாக்குப் போக்குகள் என்று தமிழினவாதிகள் வாதிடுகின்றனர். இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்கள் இனப் படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், இத்தனைக்கும் பிறகு, சிங்கள அரசு ஈழத் தமிழர்களின் உரிமைகளைச் சிறிதும் ஏற்க மறுக்கும் நிலையில், எஞ்சிய பல்லாயிரம் ஈழத் தமிழர்களும் முள் வேலி முகாமுக்குள், இராணுவக் கொடுங்கோன்மையின் கீழ் வதைபடும் நிலையில் தமிழீழத் தனியரசுக் குறைவான எதையும் பேசுவது துரோகம் என்று குதிக்கிறார்கள்.

தமிழினவாதிகள் மேலே தொகுத்துச் சொல்லும் இதே நிலைமைகளின் காரணமாகத்தான், பாசிச ராஜபக்ச கும்பலை அதிகாரத்திலிருந்து வீழ்த்தாமல் ஈழச் சிக்கலில் ஒரு அடி கூட முன்வைக்க முடியாது.

அதைத் தூக்கி எறிந்து, சிங்கள-ஈழத் தமிழ் பாட்டாளி மக்களின் தலைமையில் இலங்கையில் ஒரு புதிய ஜனநாயக அரசு அமைப்பது. அதை நிறைவேற்றுவதன் மூலம் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தன்னுரிமையைப் பெறுவது என்ற பாதையைச் சரியானதென்று முன்வைக்கப்படுவதை ம.க.இ.க. வினர் ஏற்கின்றனர்.

இவ்வாறு தெளிவாகச் சொன்ன பிறகும் ம.க.இ.க. வினர் ஈழத்துக்கு எதிரானவர்கள் என்று தமது அவதூறுகளைத் தமிழினவாதிகள் தொடர்ந்தனர்.

ஆனால், இப்போதைய இலங்கையின் அரசியல் மாற்றங்களைச் சாக்கு வைத்து, தேசிய சுயநிர்ணய உரிமையைக்கூட கைவிட்டு அதிகாரப் பகிர்வு, 13-வது சட்டத்திருத்தம் ஆகியவற்றுக்குள் சுருங்கிக் கொள்கிறார்கள்.



இனியாவது பகுத்தறிவுக்குப் பொருந்தாத தீர்வுகளையும் குறுகிய இனவாதங்களையும் கைவிட்டு, எதார்த்த அரசியல் நிலைமைகளையும் எதிரிகளை யும் நட்பு சக்திகளையும் சரியாக மதிப்பிட்டு, ஈழத் தமிழினத்துக்கான தன்னுரிமையுடன் கூடிய புதிய ஜனநாயகத்துக்கான இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும். (முற்றும்)

-வினவு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் விசாரணை பிரச்சினைக்கு தீர்வாகாது!

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

(கொழும்பு)

**நல்லிணக்கத்தினை ஏற்படுத்த நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையில் வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சர்வதேச விசாரணை இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது என தெரிவிக்கும் ஜாதிக ஹெல உறுமய தேசிய அரசாங்கத்தில் தேசிய பிரச்சினைக்கான தீர்வினை எட்ட முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளது.**

தேசிய அரசாங்கம் அமையப் பெற்ற பின்னரும் இலங்கையை சர்வதேச அழுத்தங்கள் சூழ்ந்து வருகின்றமை தொடர்பில் ஹெல உறுமய கட்சியின் பொது செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவடைந்தும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு எட்டுவதற்கு வாய்ப்புக்கள் அமையாதமைக்கு தமிழ் மற்றும் சிங்கள அரசியல் தலைமைகள் இரண்டு பக்கத்திலும் பல தவறுகள் விடப்பட்டன.

எனினும் தனித்து தீர்வொன்றினை பெற்றுக்கொள்வதை விட நாட்டை காப்பாற்றி ஒட்டு மொத்தமாக தீர்வொன்றுக்கு செல்ல வேண்டும். சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் வென்றெடுக்க வேண்டும் என்பதற்காகவே அனைவரும் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தினோம்.

எனவே தற்போது மக்கள் விரும்பும் மக்களின் சுதந்திரத்தினையும் உரிமைகளையும் பெற்றுக்கொடுக்கும் வகையில் தேசிய அரசாங்கமொன்றினை அமைத்துள்ளோம். இதில் மூவின மக்களின் பங்கும் உள்ளடங்கியுள்ளது.

அதேபோல் தொடர்ந்தும் மூவின மக்களையும் ஒன்றிணைத்து இவ் ஆட்சியினை முன்னெடுத்து செல்ல வேண்டும்.

இவ்வாறானதொரு நிலையில் தொடர்ந்தும் சர்வதேசத்தின் பக்கச் சார்பான தலையீட்டினை நாட்டிற்குள் கொண்டு வருவதன் மூலம் மீண்டும் இலங்கைக்குள் குழப்பங்கள் வருமே தவிர சர்வதேச தலையீட்டினால் இனப்பிரச்சினைக்கான தீர்வோ அல்லது பக்கச் சார்பற்ற விசாரணையோ இடம்பெற போவதில்லை.

அதேபோல் வடமாகாண சபையின் செயற்பாடுகள் நாட்டை காப்பாற்றும் வகையில் மேற்கொள்ளப்படுவதாகவும் இல்லை. படித்த கூட்டம், நீதி அறிந்த பலர் வடமாகாண சபையில் உள்ளனர். அரசியல் அனுபவமும் தற்போதைய நிலைமைகள் எவ்வாறானதென தெரிந்த அரசியல் தலைவர்கள் உள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் வடமாகாண சபையில் இனப்படுகொலையை வலியுறுத்தி தீர்மானமொன்று கொண்டு வருவது நாட்டை பாதுகாக்கும் வகையில் அமைய பெறாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கான விடயதானங்கள்

(கொழும்பு)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் கீழுள்ள விடயதானங்கள் தொடர்பில் விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவின் அதிகாரங்களே குறைக்கப்பட்டுள்ளன.



இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த 11 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இதன் பிரகாரம், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருக்கும் அவரிடம், பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள முக்கியத்துவமற்ற நான்கு துறைகளை மேற்பார்வை செய்யும், கண்காணிக்கும் பொறுப்புகள் மட்டும் அளிக்கப்பட்டுள்ளன.


பாதுகாப்புச் சேவைகள் கட்டளை மற்றும் அதிகாரிகள் கல்லூரி, ரணவிரு சேவா அதிகார சபை, பாதுகாப்பு சேவைகள் பாடசாலை, தேசிய கடற் படையணி ஆகிய துறைகளை மேற்பார்வையிடும் பொறுப்புகள் மட்டுமே, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

# இந்திய-பாக். அரசுகளினால் வழங்கப்பட்ட உதவிப்பொருட்கள் கிடைக்கப்பெறவில்லை

## மீரியாபெத்த மக்கள் கவலை

(கொழும்பு)

கொஸ்லாந்தை மீரியாபெத்த தோட்டத்தில் மண் சரிவுக்குள்ளான போது இந்திய அரசினாலும் பாகிஸ்தான் அரசினாலும் வழங்கப்பட்ட பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவில்லை என அம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அசாதாரண காலநிலையினால் கொஸ்லாந்தை பிரதேசத்திலுள்ள மீரியாபெத்த தோட்டம் முற்றாக மண் சரிவுக்குள்ளாகி உயிர்களும் உடைமைகளும் காவு கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை பல நிறுவனங்கள் செய்து வந்தபோதும் தொப்புள் கொடி உறவுகளுக்கு தேவையான உதவிகளை செய்வதற்கென இயந்திரங்கள், நீர்ப்பம்புகள், மரம் வெட்டும் இயந்திரங்கள், நீர் பவுசர் போன்ற பல கோடி ரூபாய் பெறுமதியான பொருட்களை இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் மூலம் முன்னாள் ஊவா மாகாண ஆளுநர் முன்னிலையில் முன்னாள் மாகாண அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்பட்டதாக ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது தவிர பாகிஸ்தானும் மருந்து பொருட்களையும் கூடாரங்களையும் அனுப்பி வைத்தது. இது வரையில் இப்பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்று ஒரு தகவல்

## எனக்குத் தெரியவில்லை

காட்டில் ஒரு முனிவர் இருந்தார். ஒரு நாள் அவரைத் தேடி நான்கு பேர் வந்தார்கள். "சுவாமி எங்களுக்கு ரொம்ப நாளாக ஒரு சந்தேகம்" என்றார்கள்.

"என்ன" என்று கேட்டார்.

"இந்த உலகத்தில் எவ்வளவோ காரியங்கள் நடக்கிறது. எது நியாயம்? எது அநியாயம்? என்று புரிந்து கொள்ள முடியவில்லை" என்றார்கள்.

"அதை யாராலும் புரிந்து கொள்ள முடியாது" என்றார் முனிவர். வந்தவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். முனிவர் பார்த்தார்.

"சரி... என்னுடன் புறப்படுங்கள்" என்றார். "எங்கே?" என்று கேட்டார்கள்.

"இப்பொழுது உங்கள் நான்கு பேரையும் ஒரு புஷ்பக விமானத்தில் அழைத்துக் கொண்டு போகப்போகிறேன். இந்த உலகத்தில் சர்வ சாதாரணமாக நடக்கக்கூடிய ஒரு காட்சியைக் காட்டப் போகி றேன். நீங்கள் பார்க்கப்போகும் அந்தக் கட்சி நியாயமா... அநியாயமா... என்று சொல்ல வேண்டும்.

நீங்கள் சரியான பதில் சொன்னால் புஷ்பக விமானத்தில் தொடர்ந்து பயணம் செய்யலாம். தவறான பதில் சொன்னால் இந்த புஷ்பக விமானம் உங்களைக் கீழே தள்ளிவிட்டு விடும்" என்றார்.

நான்கு பேருக்கும் பயம் தான் .இருந்தாலும் முனிவரோடு புறப்படச் சம்மதித்தார்கள். எல்லோரும் புறப்பட்டு ஒரு காட்டு வழியாகப் போய்க் கொண்டி ருக் கிறார்கள்.

அங்கே நடந்து கொண்டிருக்கும் ஒரு காட்சியைக் காட்டினார் முனிவர். புஷ்பக விமானத்தில் இருந்தவாறே எல்லோரும் கீழே குனிந்து பார்த்தார்கள்.

அங்கே ஒரு தாய்ப்புலி அப்போது தான் குட்டி போட்டிருந்தது. குட்டிகளை ஈன்ற உடனேயே பசிக்கு இரை தேடி அந்தப் பக்கமாக வந்தது. அதேநேரம் ஒரு தாய்மானும் அப்பொழுது தான் குட்டி போட்டி ருந்தது. அதுவும் இதேபோல் குட்டிகளை ஈன்றவுடனேயே பசிக்கு இரை தேடி அந்தப் பக்கமாக வந்தது.

புலி அந்த மானை அடித்துக் கொன்று விட்டது. அதைத் தானும் சாப்பிட்டு தனது குட்டிகளுக்கும் கொடுத்தது. இப்பொழுது அந்தப் புலிக் குட்டிகளின் முகத்தில் மகிழ்ச்சி. தாயை இழந்த அந்த மான் குட்டிகளின் முகத்தில் துக்கம்.

இப்பொழுது அந்த முனிவர் நான்கு பேரிடமும் கேட்கிறார். "நீங்கள் இங்கே பார்த்தீர்களே... இதில் எது நியாயம்? எது அநியாயம்? ஒவ்வொருவராகச் சொல்லுங்கள். உங்கள் பதில் சரியில்லை என்றால் இந்த விமானம் உங்களைக் கீழே தள்ளி விட்டு விடும். சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றார்.

முதலில் ஒருவன் "அந்தப் புலி செய்தது தான் சரி. அதனு டைய பசிக்கு மான்தான் ஆகாரம். தன்னுடைய பசிக்கு தானே இரை தேடிக் கொண்டது அவ்வளவு தான்" என்றான். அவ் வளவு தான்! அந்த விமானம் அவனைக் கீழே தள்ளிவிட்டது.

இரண்டாவது ஆள் சொன்னான் "புலி செய்தது பாவம். அந்தத் தாய்மான் என்ன பாவம் செய்தது? இப்பொழுது அந்தக் குட்டிகளுக்கு யார் ஆதரவு?" என்றான். அவ்வளவு தான்! அவனையும் கீழே தள்ளிவிட்டது விமானம்.

மூன்றாவது ஆள் வந்தான். அவன் சொன்னான். "இரண்டுமே நியாயம் தான். புலி இரை தேடியது இயற்கை. அதற்கு மான் இரையானதும் இயற்கை. அதனால் ஒன்றும் தப்பில்லை" என் றான். அவ்வளவு தான்! அவனையும் விமானம் கீழே தள்ளிவிட்டது.

இப்போது நான்காவது ஆள் வந்தான். "நீயாவது சொல். இதில் எது நியாயம்?" என்று கேட்டார் முனிவர்.

அவன் தெளிவாகப் பதில் சொன்னான். அதவாது, "எனக்குத் தெரியவில்லை" என்றான். அவன் கீழே விழாமல் சௌகரியமாகப் பயணம் செய்தான். ஆக, இதுதான் சரியான பதில் என்பதை முனிவர் உணர்த்தினார். இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவென் றால்,

இந்த உலகத்தில் எவ்வளவோ காரியங்கள் நடக்கிறது. அதெல்லாம் ஏன் அப்படி நடக்கிறது என்பதற்கு எப்படிப்பட்ட பண்டிதராலும் பதில் சொல்ல முடியாது. தெரியாததை தெரியாது என்று ஒத்துக் கொண்டால் வாழ்க்கைப் பயணம் சுகமாக இருக்கும். அதனால் தேவையில்லாத விடயங்களைப் புரிந்து கொள்வதற்கு நேரத்தைச் செலவு பண்ணாதீர்கள். வாழ்க்கை யைக் குழப்பாதீர்கள்.

வாழ்க்கைக்குத் தேவையானதை மட்டும் புரிந்து கொள்ளுங் கள் அதுபோதும். இந்தக் காலத்தில் ஆள் ஒருவன் ஒரு பெரிய வரைத் தேடி வந்தான்.

ஐயா... ஒரு சந்தேகம்" என்றான்.

"உன்னுடைய சந்தேகம் என்ன?" என்றார். "பகுத்தறிவு என்றால் என்ன?, விதி என்றால் என்ன?" என்று கேட்டான்.

அதற்கு அவர், "இப்பொழுது உன்னுடைய வலது காலைத் தூக்கு" என்றார். தூக்கினான்.

"சரி... இப்பொழுது உனது இடது காலையும் தூக்கு" என்றார். தூக்கினான். பொத்தென்று கீழே விழுந்தான்.

பெரியவர் சொன்னார். உன்னால் ஒரு காலைத் தூக்கமுடிந்தது அதுதான் பகுத்தறிவு. இரண்டு கால்களையும் ஒரே சமயத்தில் தூக்கினால் அடிபடும் என்பதுதான் விதி என்று விளக்கம் கொடுத்தார்.


இவன் தன் விதியை நொந்தபடி இடுப்பைப் பிடித்துக் கொண்டே நடந்து போனான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2015 - 14.03.2015



**பதவி உயர்வு வந்து சேரும் நேரம்! கனிவும், கண்டிப்பும் சமமாக கருதும் துலாம் ராசி நேயர்களே!**

## பதவி உயர்வு வந்து சேரும் நேரம்!




மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் 5ஆம் இடத்தில் லாபாதிபதி சூரியனுடன் இணைந்து சஞ்சரிக்கின்றார். இது யோகம்தான். பொருளாதார நிலை உயரும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். அருளாளர்களின் தொடர்போடு அனைத்துக் காரியங்களிலும் வெற்றி காண்பீர்கள். தன ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பது யோகம்தான். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். இரவு பகலாக பாடுபட்டதற்கு ஏற்ற பலனும் கிடைக்கும்.

சனிச்சந்திர யோகத்தோடும், வக்ர குருவின் ஆதிக்கத்தோடும் மாதம் பிறப்பதால் இனி வரும் காலம் இனிய காலமாகவே அமையும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் இதுவரை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இம்மாதம் மகிழ்ச்சி அடையும் விதத்தில் அனைத்தும் வந்து சேரப்போகிறது. 10இல் குரு வந்தால் பதவி மாற்றம் என்று சொல்வார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது பதவி மாற்றத்தை கொடுக்கும் குரு பகவான் வக்ர இயக்கத்தில் இருப்பதால் அது சாதகமான பலனையே உங்களுக்கு வழங்கும்.

குறிப்பாக 6இற்கு அதிபதி வக்ரம் பெறும்பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் எதிர்பாராத விதத்தில் நல்ல பலன்கள் ஏற்படும். எதிரிகளின் தொல்லை குறையும். உதிரி வருமானங்கள் பெருகும். பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும் வாய்ப்புகள் கைகூடி வரும். வியாபார விரோதங்கள் விலகும். வழக்குகள் சாதகமாகும். பயணத்தால் பலன் கிடைக்கும்.

குழந்தைகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். இழந்தவைகளை மீண்டும் பெறும் வாய்ப்பு கிட்டும். 3இற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் உடன்பிறப்புகள் மட்டும் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார் களா? என்பது சந்தேகம் தான். குடும்பப் பிரச்சினைகள் முடிவடைய முறையாக முருகப் பெருமான் வழிபாட்டையும், குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**மீனச் சுக்ரனின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 17ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் உச்சம் பெறும் இந்த நேரத்தில் உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை அமையும். பழைய நகைகளைக் கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்களை வாங்கலாமா என்று பரிசீலனை செய்வீர்கள். உச்ச சுக்ரனின் ஆதிக்கத்தால் மணி விழாக்கள், மண விழா க்கள், பெண்களின் சுபச் சடங்குகள் ஆகியவை நடைபெறும் அமைப்பு உண்டு. பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

மார்ச் 4ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 9, 12இற்கு அதிபதி யான புதன் 5இல் சஞ்சரிப்பது யோகம் தான். நம்பிக்கைக்குரியவர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். பொன், பொருட்கள் வாங்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். கும்ப புதனின் சஞ்சாரத்தால் விஷ்ணு வழிபாட்டில் விருப்பம் காட்டினால் இக்காலம் உங்களுக்கு ஒரு பொற்காலமாக மாறும்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் மார்ச் 13ஆம் திகதி மேஷ ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான பொருட்களையும், அத்தியாவசிய பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள். வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும். சிவன் வழிபாடும், ஸ்ரீதேவி வழிபாடும் உங்கள் கவலையைப் போக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் நீங்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். உதிரி வருமானங்கள் பெருகும். வீடு கட்டிக் குடியேற வேண்டும் என்ற ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் உண்டு. கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலமாகவே ஆதாயம் கிடைக்கும். 12இல் ராகுவும், 6இல் கேதுவும் இருப்பதால் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்வதன் மூலம் சந்தோஷத்தை தக்க வைத்துக் கொள்ளலாம்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**குரு பார்க்கும் செவ்வாயால் குதூகலம் கூடும்! அன்பு காட்டுவதிலும், அதட்டிப் பேசுவதிலும் உச்சநிலைக்குப் போகும் விருச்சிக ராசி நேயர்களே!**

## குரு பார்க்கும் செவ்வாயால் குதூகலம் கூடும்!




மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசியையும் குரு பார்க்கிறார். உங்கள் ராசிநாதனையும் குரு பார்க்கிறார். எனவே, தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். தொகை எதிர்பார்த்தபடியே கிடைக்கும். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும்.

உடல் ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும். உற்சாகத்தோடு செயல்படத் தொடங்குவீர்கள். வாங்கல்- கொடுக்கல்களில் திருப்தி ஏற்படும். வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். லாப ஸ்தானத்தில் ராகு சஞ்சரிக்கிறார். லாபாதிபதியான புதன் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, தொழிலில் எதிர்பார்த்தபடியே லாபம் கிடைக்கும்.

ஜென்மச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் குருவின் பார்வை அதன் கடுமையைக் குறைக்கிறது. எனவே பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழக்கிழமை தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது. அதோடு மட்டுமல்லாமல் சனி கவசம் பாடி சனியின் சன்னிதியில் எள் தீபம் ஏற்றி சனிக்குரிய வழிபாடுகளையும் மேற்கொள்வதன் மூலம் சந்தோஷங்களை நாளும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

கூடப் பிறந்தவர்களால் கூடுதல் நன்மை கிடைக்கும் நேரமிது. கொள்கைப் பிடிப்போடு செயல்பட முன்வருவீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் எதிர்பார்த்த நற்பலன்கள் வந்து சேரும். உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்திற்கு அதிபதியான சூரியன் அவரது வீட்டையே பார்க்கிறார். எனவே அரசியல் செல்வாக்கு மேலோங்கும்.

பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள், பதவிகள் கிடைக்கலாம். பிரகாசமான எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைத்துக் கொள்ளப் போகிறீர்கள்.

இம்மாதம் கொண்டாடப்படும் சிவராத்திரி விழாவன்று சிவாலயம் சென்று ஆறுகால பூஜையிலும் கலந்து கொண்டு சிவனையும், உமையவளையும் வழிபட்டு வந்தால் நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 17ஆம் திகதி மீன ராசியில் சுக்ரன் உச்சம் பெறப் போகிறார். இதன் விளைவாக மேலும் நறபலன்களைக் காணப் போகிறீர்கள். 7, 12இற்கு அதிபதி உச்சம் பெறும் பொழுது, பயணங்கள் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குல தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். ஆடம்பரப் பொருட்களையும், அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்ப புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 4ஆம் திகதி கும்ப ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். லாபாதிபதியாக விளங்கும் புதன் 4இல் சஞ்சரிக்கும் பொழுது, தாய்வழி ஆதரவு பெருகும். மாமன், மைத்து னர் வழியில் மகிழ்ச்சிக்குரிய தகவல் வந்து சேரும். சேமிப்பு உயரும். தெய்வத் திருப் பணிகளில் ஆர்வம் காட்டு வீர்கள். நீண்ட நாட்களாக நிறைவேறாத காரியமொன்று நிறைவேறி மகிழ்ச்சியை வழங்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அஞ்சல் வழியில் அனுகூலச் செய்திகள் வந்து சேரும்.

**மேஷ சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 13ஆம் திகதி மேஷ ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். 12இற்கு அதிபதி 6இல் சஞ்சரிக்கும் பொழுது, எதிர் பாராத விதத்தில் உங்களுக்கு நற்பலன்கள் வந்து சேரப் போகின்றது.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். தொழில் துறையில் உள்ளவர்களுக்குப் புதிய தொழில் தொடங்கும் வாய்ப்பு உண்டு. எதிரிகள் விலகுவர். லாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். இம்மாதம் ஆனைமுகப் பெருமான் வழிபாடும், ஆறுமுகப் பெருமான் வழிபாடும் ஆனந்தம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கும் மாதமாக அமையப் போகின்றது. பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பாராட்டு மழையில் நனையப் போகிறீர்கள். குழந்தைகளின் முன்னேற்றம் கருதியும், கடல் தாண்டும் முயற்சி கருதியும் செயறபாடுகளில் வெற்றி கிடைக்கும். குரு பார்வை உங்கள் ராசியில் பதிவதால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்லமுடிவிற்கு வரும். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் பெருகும். உங்கள் பெயரிலேயே புதிய சொத்துக்கள் வாங்கும் எண்ணம் குடும்ப உறுப்பினர்களுக்கு உருவாகும். சிவன் வழிபாடு சிறப்பினை வழங்கும். சிவனையும், உமையவளையும் வழிபடுவதன மூலம் சிறந்த பலன்களை வர வழைத்துக் கொள்ள இயலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் வெறியாட்டம்



## கடற்கரை மணலில் முழுந்தாழிட வைத்து 21 கிறிஸ்தவர்கள் வெட்டிப்படுகொலை

**(கெய்ரோ)**

**லிபியாவில் 21 எகிப்திய கிறிஸ்தவர்களின் தலையைவெட்டி ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் வெறியாட்டம் ஆடியுள்ளனர். இது தொடர்பான காணொலியை இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளனர். இச்சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**




சிரியா. ஈராக்கில் பல்வேறு பகுதிகளை தங்கள்வசம்கொண்டு வந்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் வெறியாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது. இருநாடுகளிலும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத படையை ஒழித்துக் கட்டும் பணியில் அமெரிக்கா தலைமையிலான உலக நாடுகளின் படை போராடி வருகிறது.

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்களிடம் பணயக் கைதியாக சிக்கியவர்களை சித்திரவதை செய்து, தலையை துண்டித்தும், பெற்றோல் ஊற்றி எரித்தும், கொடூரமாக கொலை செய்து காணொலியை வெளியிட்டு வருகின்றனர்.

கடைசியாக கடந்த 3 ஆம் திகதி ஜோர்தான் விமானியை உயிருடன் எரித்தது தொடர்பான காணொலியை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டனர். இச்சம்பவம் உலகம் முழு வதிலும் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதனையடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் மீதான தாக்கு தலை ஜோர்தான் அதிகரித்தது. ஜோர்தானுக்கு அதன் நட்புநாடுகள் உதவி செய்தன. இந்நிலையில் லிபியாவில் 21 எகிப்திய கிறிஸ்தவர்கள் தலையை வெட்டி ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் காணொலியை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளனர்.

எகிப்தியர்கள் 21 பேரும் லிபியாவில் பிடிக்கப்பட்டவர்கள் என்று ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தெரிவித்துள்ளனர். தீவிரவாதிகள் வெளியிட்டுள்ள காணொலியில், ஒரேஞ் நிற உடையில் பிடிபட்டவர்களை அழைத்து சென்று கடற்கரைப் பகுதியில் வைத்து தலையை வெட்டி கொலை செய்யும் பதிவு வெளியாகியுள்ளது.

லிபியாவின் தலைநகர் திரிபோலியில் உள்ள கடற்கரைப்பகுதி என்றே கூறப்படுகிறது. கிறிஸ்தவத்தை பின்பற்றும் நாட்டு மக்களுக்கு ஒரு செய்தி என்று இரத்தத்தால் எழுதப்பட்ட தகவலுடன் காணொலி வெளியிடப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி மாதம் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் 21 எகிப்திய கிறிஸ்தவர்களை பணயக் கைதியாக பிடித்துள்ளோம் என்று தெரிவித்தனர்.

சிரியா. ஈராக்கை அடுத்து லிபியாவிலும் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் கால்பதித்துள்ளது பெரிதும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. லிபியாவில் பல்வேறு தாக்குதலை நடத்துவோம் என்று தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். லிபியாவில் 34 ஆண்டுகளாக நடந்து வந்த கடாபியின் ஆட்சி 2011 முடிவுக்கு வந்ததில் இருந்து போராட்டக் குழுக்கள் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு செயற்பட்டு வருகின்றன. அங்கு ஆயுதம் தாங்கிய பல்வேறு தீவிரவாத குழுக்கள் செயற்பட்டு வருகிறது. எகிப்திய கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்ட நிலையில் தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று எகிப்திய ஜனாதிபதி அப்தெல் பட்டா அல்-சிசி கூறியுள்ளார். இந்த துயர சம்பவத்தை அடுத்து எகிப்தில் 7 நாட்கள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நைஜீரியாவில் பெண் தீவிரவாதி நடத்திய வெடிகுண்டுத் தாக்குதலில் 7 பேர் மரணம்



வடகிழக்கு நைஜீரியாவின் யோபோ மாநிலத்தில் உள்ள பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் பெண் தீவிரவாதி நடத்திய மனித குண்டுத் தாக்கு தலுக்கு 7 பேர் பலியாகியுள்ளனர்.

டமட்டூரு மத்திய பூங்கா பகுதியில் நேற்று முன்தினம் உடலில் வெடிகுண்டுகளை கட்டிவந்த பெண் அவற்றை வெடிக்கச் செய்ததில் அந்த தீவிரவாதி உட்பட 7 பேர் பலியாகினர். 32 பேர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலில் சிக்கியவர்களின் உடல்கள் அப்பகுதி முழுவதும் சிதறிக் கிடந்தன.

அவற்றை அகற்ற வந்த மீட்புப் படையினரை தடுத்த பொதுமக்கள் இந்த தாக்குதலுக்கு காரணமான பெண்ணின் உடலை மட்டும் அங்கிருந்து எடுத்து செல்லக் கூடாது என்று ஆவேசமாக தகராறு செய்த னர். அந்த தீவிரவாதியின் சடலத் தின் மீது பெற்றோலை ஊற்றி அங்கேயே எரித்தனர்.

அண்மைக் காலமாக இதுபோல் பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து மற்றும் புகையிரத நிலையங்களில் அதிரடி தாக்குதல்களை நடத்தும் போகோஹராம் தீவிரவாதிகள். இத்தகைய தாக்குதல்களுக்கு பெண்கள் மற்றும் சிறுவர். சிறுமியரை மனித வெடிகுண்டுகளாக பயன்படுத்தி வருவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தத் தாக்குதலில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் 32 பேரில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது. (இ-5)

## ஸ்ரீரங்கம் இடைத் தேர்தலில் ஆளும் அ.தி.மு.க. முன்னிலை

ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கையில், தமிழக ஆளும் அ.தி.மு.க. பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் தொடர்ந்து முன்னிலை வகிக்கின்றது.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா. சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றதை அடுத்து, அவர் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டதால் ஏற்பட்ட இடைத்தேர்தல் இது.

இதில் வாக்கு எண்ணிக்கை நேற்று காலை தொடங்கியதில் இருந்தே அ.தி.மு.க. வேட்பாளரான எஸ்.வளர்மதி தொடர்ந்து முன்னிலையில் இருந்து வருகிறார்.

இதனால் அ.தி.மு.கவின் தொண்டர்கள் தங்களது கொண்டாட்டங்களை தொடங்கியுள்ளார்கள்.

அ.தி.மு.கவுக்கு போட்டியாக களமிறங்கிய தி.மு.கவின் உறுப்பினர் என்.ஆனந்த் இரண்டாவது இடத்தில் நிற்கிறார். முன்னதாக நடைபெற்ற தேர்தலில் ஜெயலலிதா போட்டியிட்ட போதும், அவரை தி.மு.க. சார்பில் இவர்தான் எதிர்த்து நின்றார்.



போட்டியிட்டுள்ள மற்ற முக்கிய கட்சிகளின் வேட்பாளர்களான பாரதிய ஜனதா கட்சியின் எம்.சுப்ரமணியம் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கே.அண்ணாதுரை ஆகியோர் மிகவும் பின்தங்கியுள்ளார்கள். இவர்கள் தவிர ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் வேட்பாளரான ஹேமநாதன். சுயேச்சை வேட்பாளரான டிராபிக் ராமசாமி ஆகியோரும் மிக குறைவான வாக்குகளே பெற்றுள்ளார்கள்.

ஸ்ரீரங்கம் தொகுதியில் கடந்த 13 ஆம் திகதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. தொடர்ந்து நேற்று திங்கட்கிழமை இதற்கான வாக்கு எண்ணிக்கை நடத்தும் பணி துவங்கப்பட்டது.

இந்த குறிப்பிட்ட தேர்தலுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்த தேசிய கட்சியான பா.ஜ.க., ஒரு சில ஆயிரம் வாக்குகள் மட்டுமே பெற்று பின்தங்கியுள்ளது கவனிக்கத்தக்கது.

இந்திய காங்கிரஸ் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட சில இதர கட்சிகள் இத்தேர்தலைப் புறக்கணித்தன.

இதற்கிடையே அண்டை மாநிலமான ஆந்திராவில் உள்ள திருப்பதி சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தல் முடிவுகளிலும் அம்மாநிலத்தின் ஆளுங்கட்சியான தெலுங்கு தேசம் கட்சியின் வேட்பாளர் முன்னிலை வகிக்கிறார்.

அந்த தொகுதியில் தெலுங்கு தேசம் கட்சி சட்டமன்ற உறுப்பினர் வெங்கட்ரமணா உயிரிழந்ததால் அவரது மனைவியான சுகுணா தற்போது அக்கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டுள்ளார். இவருக்கு எதிராக நிறுத்தப்பட்ட காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஆர்.ஸ்ரீதேவி மிகவும் பின்தங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்சியாளர்களை பாதுகாக்கும் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது

(கொழும்பு)

வழக்குகளின் சாட்சியாளர்கள் மற்றும் குற்றச்செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டமொன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பிலான உத்தேச சட்டப்பிரேரணை எதிர்வரும் 19 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வழக்குகளின் சாட்சியாளர்கள், குற்றச் செயல்களில் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் உறவினர், நண்பர்கள் இந்தப் புதிய சட்டத்தின் மூலம் நன்மை பெற்றுக்கொள்வார்கள்.

சாட்சியாளர்களின் பொறுப்புக்களைப் போன்றே உரிமைகளை சட்ட ரீதியாக நிலைநாட்ட தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

சாட்சியாளர்களை பாதுகாக்க தேசிய அதிகார சபையொன்று உருவாக்கப்படும்.

நீதி அமைச்சர், நீதி அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர், பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான செயலாளர் ஆகியோர் இந்த அதிகார சபையில் அங்கம் வகிக்கவுள்ளனர்.

சர்வதேச நியதிகளுக்கு அமைவான முறையில் இந்த சட்டம் உருவாக்கப்பட உள்ளது என விஜயதாச ராஜபக்ஷ ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# கடலோரங்களில் உல்லாச விடுதிகளை நிர்மாணிக்க இடமளிக்கப் போவதில்லை

(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் கடலோர பகுதிகளில் அதிக உயரமான உல்லாச விடுதிகளை நிர்மாணிக்க இடமளிக்கப் போவதில்லை என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் காலி பிரதேசத்தில் ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்களை சந்திக்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும் போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேலும் அதி உயர் கட்டடங்களால் கடலோர பகுதிகளில் சூழல் பாதிப்பு ஏற்படுவதாக அவர் கூறியுள்ளார். இந்த நிலையில் தென்னைமரங்களை விட அதிக உயரத்தில் கட்டடங்களை அமைக்க தடை விதிக்கப்படும்.

அதேநேரம் நாட்டின் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)


வாழ்க்கையில் வெறுப்பா ?
பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(சி-9913)
கைகொடுக்கும் நண்பர்கள்
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776



இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 7 1/2 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BBA, DIP IN ENGLISH/ நிர்வாக உத்தியோகத்தர்<br>தொ.இ: B/4111 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 15 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4106 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 54 செவ் 12 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில் கனடா PR<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/4113 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 9 1/4<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: G/4110 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 16 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.ENG, B. MG/ பொறியியலாளர் அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/4114 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 27 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/4112 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 50 1/2 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: O/L/ தனியார்<br>தொ.இ: B/4115 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராட்டாதி<br>கி.பா: 45 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, DIP IN PRESCHOOL TEACHING<br>தொ.இ: G/4116 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



சர்வதேச தரத்திலான தொழில்நுட்பக் கற்கைநெறிகளÊ
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆரம்பம்.....

பெரும்பாலான மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க பின்வரும் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

➢ க.பொ.த உயர்தர கணித பிரிவில் 3 பாடங்களில் சித்தி **அல்லது** பொருத்தமான NVQ 4 தகைமை உடைய மாணவர்களுக்கான பாடநெறிகள்

- Higher National Diploma in Building Services Technology
- Higher National Diploma in Construction Technology
- Higher National Diploma in Farm Machinery Technology
- Higher National Diploma in Mechatronics Technology
- Higher National Diploma in Production Technology

விண்ணப்ப முடிவுத் திகதி:- 23.02.2015

➢ க.பொ.த உயர்தர உயிரியல் பிரிவில் 3 பாடங்களில் சித்தி அல்லது பொருத்தமான NVQ 4 தகைமை உடைய மாணவர்களுக்கான பாடநெறிகள்

- Higher National Diploma in Farm Machinery Technology
- Higher National Diploma in Food Technology

Leads to B.Tech Degree

வயதெல்லை:- 31.12.2014 இல் 29 வயதிற்குட்பட்டோர்
அனைவருக்கும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஆங்கில பாடநெறி
அரசமானிய அடிப்படையிலான பாடநெறிக் கட்டணங்கள்
தவணை அடிப்படையில் கட்டணம் செலுத்துவதற்கான வசதிகள்
சமுர்த்தி பயனாளிகளுக்கு பாடநெறிக் கட்டணங்கள் இலவசம்.

மின்னஞ்சல;: applications2015ucj@gmail.com

| கற்கைநெறி | காலம் | பாடநெறிக் கட்டணங்கள் |
|---|---|---|
| அடிப்படைக் கற்கைநெறி(Foundation) | 6 மாதங்கள் | இலவசம். |
| NVQமட்டம் 5 (Diploma) | 12 மாதங்கள் | ரூபா 30,000.00 |
| NVQ மட்டம் 6 (Higher Diploma) | 12 மாதங்கள் | ரூபா 30,000.00 |
| கைத்தொழிற்பயிற்சி (On the Job Training in Industries) | 6 மாதங்கள் | இலவசம். |

மேலதிக தொடர்புகளுக்கு:தொலைபேசி இல: 021-221 7792
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்லூரி,
இல-17, பிறவுண் வீதி,யாழ்ப்பாணம்.

UNIVERSITY COLLEGE
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
நெடுஞ்சாலைகள்,உயர் கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
UNIVOTEC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கணனிகள்



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா நிதி ஒதுக்கீட்டிலிருந்து கணனித் தொகுதி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. கடந்த 12ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 1 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர், வைத்தியகலாநிதி யோ.திவாகரிடம் கணனித் தொகுதிகளைக் கையளித்தார். நிகழ்வில் வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நலன்புரிச் சங்க நிர்வாக உறுப்பினருமாகிய சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளருமாகிய லயன் சி.ஹரிகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

### முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் ஆதரவாளர்கள் 18-ம் திகதி பேரணி

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாளர்களை கலந்து கொள்ள செய்யும் பேரணி ஒன்று நுகேகொடவில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி இந்த பேரணி நடைபெறும் என்று தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது.

இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் இந்த பேரணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர்கள் யாரும் கலந்து கொள்ள மாட்டார்கள் என்று அந்தக்கட்சியின் பொதுச்செயலாளர் அனுரபிரியதர்ஷன யாப்பா நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.

எனினும் அனுரபிரியதர்ஷன யாப்பா கலந்து கொள்ளாத போதும், சுதந்திர கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்று தேசிய சுதந்திர முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர்கள் பிய சிரி விஜேநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

# சு.கவின் ஜனாதிபதிகள் இணைய வேண்டுமாம்

## 6 மாகாண முதலமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

மூன்று ஜனாதிபதிகளும் இணைந்து செயற்பட வேண்டுமென ஆறு முதலமைச்சர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் உருவாக்கப்பட்ட மூன்று ஜனாதிபதிகளும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது.

மேல், தென், வடமேல், வட மத்திய, மத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களின் முதலமைச்சர்கள் இவ்வாறு கோரியுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மூன்று ஜனாதிபதிகளும் இணைந்து செயற்படுவதன் மூலம் பொதுத் தேர்தலில் வெற்றியீட்ட முடியும் என தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்நோக்கி வரும் அழுத்தங்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கொழும்பில் நேற்று முன்தினம் முதலமைச்சர்கள் கூடி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு மற்றும் ஊவா மாகாண முதலமைச்சர்கள் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இன்னும் பதவி விலகவில்லை - ரஜீவ விஜேசிங்க

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து தான் இன்னும் விலகவில்லை எனவும் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதில் கிடைக்கும் பதிலுக்கு அமைய தீர்மானம் எடுக்க போவதாகவும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த க்ஷனிக ஹிரிம்புரேகம பதவியில் இருந்து விலகியமைக்கு காரணம் தொடர்பில் சிக்கல் இருப்பதாகவும் அது சம்பந்தமாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தான் இல்லாத நேரத்தில மானிய ஆணைக்குழுவின் தலைவரை விலக்கும் செயல் தவறானது எனவும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால், விசாரணை நடத்தி சட்டத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ரஜீவ விஜேசிங்க தெரிவித்தார். (இ-5)

# தே.ப.மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பதவி வெற்றிடங்கள்

நெடுஞ்சாலைகள் உயர்கல்வி முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் தேசியபயிலுநர்மற்றும்கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) பதவிகளுக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

பணிப்பாளர், உதவிப்பணிப்பாளர், [illegible]ணிப்பாளர்/அதிபர், பிரதி அதி[illegible] பதவி, விரிவுரையாளர் தரம் II, செயலாளர் மற்றும் சட்டஅலுவலர் பதவி II, வாகன பழுதுபார்ப்பு அலகு சேவை அலுவலர் பதவி தரம் II, தரநிர்ணய உத்தியோகத்தர் தரம் II, பரிசோதகர் பதவி தரம் III, நூலகர் பதவி III, வாகனப் போக்குவரத்து அலுவலர் தரம் III ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச்சட்டமுறை, அரசாங்கத்திணைக்களங்கள் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் தங்களது விண்ணப்பங்களை உரிய நிறுவனத்தின் தலைமையூடாக முன்வைத்தல் வேண்டும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, இல 971, ஸ்ரீஜயவர்த்தனபுர மாவத்தை வெலிக்கடை, இராஜகிரிய என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் கோரல் தொடர்பான விபரங்களை 15/02/2015 வெளியான தினகரன் பத்திரிகையிலோ அல்லது வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிடலாம். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 160 | 110 | 150 |
| தக்காளி | 220 | 240 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 50 | 40 |
| கோவா | 100 | 90 | 80 | 80 |
| கரட் | 200 | 140 | 90 | 160 |
| பூசணி | 120 | 100 | 80 | 100 |
| புடோல் | 60 | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 70 | 100 |
| பாகற்காய் | 100 | 120 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 160 | 140 | 100 | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 80 | — | 100 |
| கறிமிளகாய் | — | 200 | 150 | 160 |
| முருங்கைக்காய் | — | 650 | — | 800 |
| போஞ்சி | — | 200 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 40 | — |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 20 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 50 | 45-50 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 60-110 | 100 | 130 | 120 |

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி பகவதி சக்திவேலாயுதம்

யாழ்.பருத்தித்துறை விநாயகமுதலியார் வீதியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பகவதி சக்திவேலாயுதம் அவர்கள் கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி 1.30 மணிக்கு ஆரம்பமாகி Greenford Hall, Ruislip Road, Greenford, Middlesex UB6 9QN, London, United Kingdom என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



### சண்முகம் பரமகுரு

(கரப்புகுத்திஅ.த.க.பாடசாலை அதிபர்)

கரப்புகுத்தி கனகராயன் குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் பரமகுரு அவர்கள் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரப்புகுத்தி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சண்முகலிங்கம் இந்திரன்

யாழ்.கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் இந்திரன் கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 19 ஆம் திகதி மு.ப 11 மணியளவில் Newham Town Hall, Barking Road, East Ham, London E6 2RP, United Kingdom என்னுமிடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### கந்தையா சிவஞானம்

யாழ்.சாவகச்சேரி சரசாலையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்ரேலியா Sydney ஐ வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சிவஞானம் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி Liberty Funerals, 101 South St. Granville NSW 2142, Australia என்னும் இடத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப் படும்.



### செல்லத்துரை எல்மோ டங்கன்

Kalutara OLD Road ஐ பிறப்பிடமாகவும் 218, Rue St.Martin 75003 Paris ஐ வசிப்பிடமாகவும் கொண்ட Elmo Duncan கடந்த 11 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் ஆராதனைகள் இன்று செவ் வாய்க்கிழமை Eglise Sainte Marthe 118, AV Jean Jaures93500 Paintin Metro Quatre Che mins Lingne 7 Bus என்னும் இடத்தில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி பிலோமினா அமரசிங்கம்

யாழ்.மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வவுனியா இராசேந்திரகுளத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிலோமினா அமரசிங்கம் அவர்கள் கடந்த 14 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று 462, அனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் மிருசுவில் சென் நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு மகஜர் அனுப்பி வைப்பு

(சாவகச்சேரி)

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களது பதவி உயர்வு தொடர்பான வேண்டுகோள் அடங்கிய மகஜர் ஒன்றினை "அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர்சங்கம்" வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத் துள்ளது.

அதன் தலைவர் எஸ்.லோகநாதனால் கையொப்பமிடப்பட்டுள்ள மேற்படிகடிதத்தில் வடமாகாண ஆளுநரின் அனுமதியுடன் வெளியிடப்பட்ட கல்விசாரா ஊழியர்களின் பதவி உயர்வுத் திட்டத்தின் பிரகாரம் தகைமையுடைய ஊழியர்களுக்கு வகுப்பு 11.1 பதவி யுயர்வு வழங்குவதற்கு தாங்கள் நடவடிக்கை எடுத்தமையை நாம் அறிவோம்.

சில வலயக்கல்வி அலுவலகங்களில் தாமதமான நிர்வாக செயற்பாடு காரணமாக வகுப்பு 11.1 பதவியுயர்வு பெற்றுக் கொள்வதற்கான தகைமையுடைய ஊழியர்களது விண்ணப்பங்கள் தங்களது அமைச்சுக்கு அனுப்பப்படாது சிறுசிறு காரணங்களைக்காட்டி வலயக் கல்வி அலுவலகங்களில் தேக்க நிலையில் வைத்திருப்பதாக பாதிக்கப்பட்ட ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தயவு செய்து தங்களது அமைச்சும் வடமாகாண கல்வித்திணைக்களப் பணிப்பாளர் பணிமனையும் மேற்படி விடயம் தொடர்பில் உதவுவதோடு தகைமையுடைய கல்விசாரா ஊழியர்களுக்கு (பாடசாலை பணியாளர், காவலாளி மற்றும் பணியாளர் தரங்களில் உள்ள ஊழியர்கள்) வகுப்பு 11.1 பதவியுயர்வு வழங்கி உதவுமாறு தொழிற்சங்கம் சார்பாக கேட்டுக்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-29)

## திருக்கோணேஸ்வரத்தில் சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் மகா சிவராத்திரியை முன்னிட்டு சிறப்பு சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை மகாசிவராத்திரி அன்று இரவு 10 மணியளவில் மகா சிவராத்திரியின் மகிமை எனும் தலைப்பில் பண்டிதரும் சைவப்புலவருமான பொன். சுகந்தனின் சிறப்பு சொற்பொழிவும் அத்துடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (இ)

# கிழக்கில் கருணா, பிள்ளையானின் ஊழல்கள் அம்பலப்படுத்தப்படும்

## த.தே.கூ.கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

**கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தனும், முன்னாள் மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் முரளிதரனும் ஊழலில் இருந்து தப்ப முடியாது. அவர்களின் அறிக்கையினை நான் கொடுப்பேன். பல வேலைத்திட்டங்களில் ஒப்பந்தங்கள் அவர்களின் உறவினர்களே செய்தார்கள். பத்து இலட்சம் ரூபா வேலைத் திட்டத்தில் முன்னாள் மீள்குடியேற்ற பிரதியமைச்சரின் ஆதரவாளர் இலஞ்சம் பெற்றுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் குற்றம் சுமத்தியுள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பால்சேனை மற்றும் நாகபுரம் கிராமத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பியோகேஸ்வரன் மக்கள் சந்திப்பின் பொருட்டு நேற்று முன்தினம் விஜயம் செய்து மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமது மக்கள் கடந்த காலத்தில் எமது இனத்துக்கு செய்த அநீதிக்கு முன்னாள் ஜனாதிபதிக்கு வாக்கு மூலம் தண்டணை கொடுத்திருக்கின்றார்கள். முன்பிருந்த அரசாங்கம் எல்லா இடத்திலும் ஊழல். இதில் எமது முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தனும், மீள்குடியேற்றப்பிரதி அமைச்சர் முரளிதரனும் தப்ப முடியாது அவர்களின் அறிக்கையினை நான் கொடுப்பேன்.

கிழக்கின் உதயம் என்ற பொருளாதார அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட எமது பகுதிக்கு 250 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டது. இதனை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்த பொருளாதார பிரதியமைச்சர் 200இற்கு மேற்பட்ட மில்லியன்களை முஸ்லிம் மக்களின் நலன் கருதி முஸ்லிம் பிரதேசங்களுக்கு ஒதுக்கியுள்ளார்.

இதற்கு அதிகாரிகள் சிலரும் துணைபோயுள்ளனர். இதனை நான் பாராளுமன்றத்தில் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளேன். அது மட்டுமல்லாது இவ்வாறானவர்களுக்கு எம் தமிழ் மக்களும் வாக்களிக்கும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இச்செயற்பாடு எமது தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை பாதிக்கின்றது. இன்று எமது தமிழ் பகுதியில் திட்டமிட்ட வகையில் முஸ்லிம் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்கள் எம்மால் முறியடிக்கப்பட்டன. முன்பு வாகரையின் 17 தமிழ் கிராமங்களைச் சேர்த்து ஓட்டமாவடியை ஒரு நகரசபையாக மாற்றுவதற்கு முயற்சி செய்தார்கள். இதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால் முன்னாள் முதலமைச்சர் பதவியில் இருக்கும் போது தான் இதனை அனுமதித்து கையொப்பம் இட்டிருந்தார்.

ஆனால் தற்போது மீண்டும் முயற்சிகள் நடைபெறுவதாக அறிகின்றோம். இதற்கு ஒரு போதும் அனுமதியோம். முஸ்லிம் மக்களை மாத்திரம் கொண்டு ஓட்டமாவடி நகர சபையாவதை நாம் எதிர்க்க மாட்டோம். தேர்தல்களின் பின் அரசாங்கம் எங்களுக்கு அமைச்சுப் பதவியைத் தந்தார்கள் ஆனால் அதனை நாம் ஏற்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மரண அறிவித்தல்

## திருமதி. தையல்நாயகி ஞானசம்பந்தன் (சுதுமலை தெற்கு, மானிப்பாய்)



அல்லைப்பிட்டியை பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.தையல்நாயகி ஞானசம்பந்தன் கடந்த 13.02.2015 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி உடையார், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சொர்ணம்மா தம்பதி யினரின் அன்பு மகளும், சுதுமலை தெற்கு காலஞ்சென்றவர்களான பண்டிதர் ஆ.சி.நாகலிங்கம் தங்கமுத்து தம்பதியின ரின் அன்பு மருமகளும், சுதுமலை தெற்கு ஞானசம்பந்தன் (முன்னாள் பிறப்பு -இறப்பு விவாகப்பதிவாளர், சமாதான நீதவான்) அவர்களின் அன்பு மனைவியும் பவானியின் (லண்டன்) அன்புத்தாயாரும் ஶ்ரீதரனின் (லண்டன்) அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான தவவிநாயகம் (முன்னாள் கிராமத்தலைமைக்காரன், முன்னாள் கிராம சபைத்தலைவர்), வேலாயுதபிள்ளை திருமதி.சிவயோகலட்சுமி,திருமதி.நடேஸ்வரி மற்றும் நடேசபிள்ளை (தொழில் அதிபர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி.கிருஸ்ணாம்பாள் (பிரான்ஸ்), திருமதி.இராசம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி (தபால் அதிபர் அல்லைப்பிட்டி),சச்சிதானந்தன் (இளைப்பாறிய உதவி ஆணை யாளர்) மற்றும் திருமதி.மங்கையற்கரசி யாழ்ப்பாணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவானந்தன், கஜவல்லி கேதீஸ் வரநாதன், கௌரிநாயகி,சொர்ணநாயகி, றங்கநாயகி, யோகநாதன்,பிரபாகரன் ஆகியோரின் பெரிய தாயாரும் காலஞ்சென்ற உருத்திரகுமார் மற்றும் சத்தியபாலினி,கிருபாலினி, சந்திரகுமார்,சூரியகுமார் , தவபாலினி, ஜெயபாலினி, குணபாலினி, ஜெயசுந்தரராசா,காலஞ்சென்ற ஶ்ரீஸ்கந்தராசா மற்றும் சியாமளா, மஞ்சுளா, சோமேஸ்வரி காலஞ்சென்ற லோகேந்திரா மற்றும் தெய்வேந்திரா,விஜந்திரா, கஜந்தினி, சுதாஜினி, துஷ்யந்தன், கஜநேசன்,கமலினி, தர்ஷினி ஆகியோரின் அன்பு மாமியாரும் சங்கரன், ஹரிகரன், சக்கரவர்த்தி, பத்மஶ்ரீ,சுவர்ணஶ்ரீ,லஷ்மிஶ்ரீ, சரவணன், ஶ்ரீதேவி, சம்பத்குமார், ஞானகி,அருள்நேசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனுஷ்கா,நிலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18.02.2015 நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுதுமலை தெற்கு பதிவாளர் தெருவில் அமைந்த அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

021 225 5764
077 159 8446
077 654 2489

தகவல்:- ஞானசம்பந்தன்-கணவன்
திருமதி.பவானி ஶ்ரீதரன்-மகள்
திரு.நடேசபிள்ளை-சகோதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுறமாட்டை ஆடிக்கறக்கணும்
பாடுறமாட்டை பாடிக்கறக்கணும்
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மைத்திரியின் இந்திய விஜயம் மோடிக்கு வெற்றி ; ஈழத் தமிழருக்கு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். ஜனாதிபதியாக பதவியேற்ற கையோடு மைத்திரிபால சிறிசேனவின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இந்தியா என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவுக்கு விஜயம் செய்த மைத்திரிபால சிறிசேன நேற்றையதினம் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது பேசப்பட்ட விடயம், சந்திப்பின்போது செய்துகொள்ளப்பட்ட உடன்பாடுகள் என்பன ஒரு புறம் இருக்க,

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய விஜயம் என்பது பிரதமர் நரேந்திர மோடிக்கு கிடைத்த சர்வதேச இராஜதந்திர வெற்றி என்று கூறலாம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சீனவுடன் உறவை ஏற்படுத்தி இந்தியாவை அகற்ற முற்பட்டார்.

மன்மோகன் சிங் ஆட்சியிலிருந்தபோது மகிந்த ராஜபக்ஷ இலங்கையில் நடத்திய நாடகங்கள் இந்திய தேசத்தின் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்த போதிலும் அதுபற்றி எதுவும் கதைக்க முடியாத அளவிலேயே காங்கிரஸ் அரசின் நிலைமை இருந்தது.

மகிந்த ராஜபக்ஷ முன்னெடுத்த வன்னி யுத்தத்தில் இந்திய அரசு வழங்கிய உதவிகள் வெளிப்பட்டால் இலங்கை அரசு மீது போர்க்குற்ற விசாரணை நடத்த வேண்டும் என்ற ஐ.நா. தீர்மானம் இந்திய மத்திய அரசு மீதும் நகரும் என்பதன் காரணமாக மகிந்த எது செய்தாலும் மன்மோகன் சிங்கும் சோனியாவும் மௌனம் காத்தனர்.

ஆனால், கடவுள் செயலாக இந்தியாவில் மோடி ஆட்சியமைக்க எல்லாமுமே திசை திரும்பலாயிற்று. மோடி பிரதமரான போது இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ சீனாவுடன் கைகோர்த்து நின்றார். மோடி எதுவும் பேசவில்லை.

ஆனால் இலங்கையில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டால் மட்டுமே இலங்கை - [illegible] உறவை முடிவுறுத்த முடியும் என்பது மோடியின் உறுதியான நம்பிக்கை. மோடியின் நம்பிக்கையை அமெரிக்காவும் அங்கீகரித்திருக்கும்.

காலப்பிழையும் சேர்ந்துவர, ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பை மகிந்த ராஜபக்ஷ விடுத்தார். முடிவு மைத்திரி ஜனாதிபதி என்றாயிற்று. அவ்வளவுதான் இப்போது சீனாவை இலங்கை தூக்கி எறிந்து விட்டது. இந்தியாவின் நெருக்கமான உறவை ஏற்படுத்த மைத்திரி தயாராக இருக்கின்றார்.

அதன் ஓர் அங்கமாகவே அவரின் இந்திய விஜயம் அமைந்துள்ளது. இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் மோடியை இலங்கைக்கு வருகை தருமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுவார். ஏற்கெனவே திட்டமிட்டதன் பிரகாரம் மோடியும் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்வார். இவை நடந்து கொண்டிருக்கும்போது மெதுவாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை திரும்பிப்பாருங்கள். வதனம் பல மடங்கு வீக்கம் எடுத்திருப்பதை அவதானிக்க முடியும்.

ஆக, இலங்கையில் நடந்த ஆட்சிமாற்றமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்திய விஜயமும் பிரதமர் மோடிக்கு கிடைத்த சர்வதேச ராஜதந்திர வெற்றி என்று கூறுவதில் எந்த மிகைப்படுத்தலும் இல்லை.

மைத்திரியின் இந்திய விஜயம் மோடிக்கு வெற்றியாயினும் ஈழத்தமிழருக்கு அது வெற்றியை தருமா என்பதுதான் இங்கு எழுந்து நிற்கும் முக்கிய கேள்வி?

இலங்கையிலிருந்து சீனாவின் தொடர்பை அறுத்தெடுத்த பிரதமர் மோடி, ஈழத்தமிழர்களின் பிரச்சினையையும் அறுத்து விடுவாரா? அல்லது தனது நாட்டுப் பிரச்சினை தீர்ந்தால் போதும் என்று நினைப்பாரா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# நல்லிணக்க ஆணைக்குழு தேவை தேசிய சமாதான பேரவை கோரிக்கை

(கொழும்பு)

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று நிறுவப்பட வேண்டுமென தேசிய சமாதானப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மெய்யாகவே வருந்தி மன்னிப்பு கோரினால் மன்னிப்பு வழங்கக் கூடிய வகை யிலான அதிகாரங்களை இந்த ஆணைக குழு கொண்டிருக்க வேண்டுமென தெரி வித்துள்ளது.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம் பெற்ற சம்பவங்கள், குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல், மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட விடயங்கள் இலங்கையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்து வதில் தடைகளை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண புதிய அரசாங்கம் இணங்கியுள்ளமை வரவேற்கப்பட வேண்டியது என சுட்டிக்காட்டியுள்ளது.

இரண்டு வழிகளில் அரசாங்கம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயற்சித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

சாட்சியங்கள் இருந்தால், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் தென் ஆபிரிக்க பாணியிலான உண்மை நல்லிணக்க ஆணைக்குழு அமைத்தல் ஆகிய இரண்டு வழிகளை பின்பற்ற புதிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உண்மைகளை கண்டறிவது மிகவும் சிரமமானது என தெரிவித்துள்ளது. உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவின் மூலம் யுத்த காலத்தில் இடம் பெற்ற விடயங்கள் பற்றிய உண்மைகளை வெளிக்கொணர முடியும் என குறிப்பிட்டுள்ளது.

மன்னிப்பு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டால் தைரியமாக குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் முன்வந்து உண்மைகளை ஒப்புக்கொள்வார்கள் எனவும், இதன் மூலம் காயங்களை ஆற்றுப்படுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளது. (எ-11)

# ஆயர் சபை அளித்த நன்கொடையை ஏழைகளுக்கு வழங்கினார் பாப்பரசர்

(கொழும்பு)

பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸுக்கு இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சபை வழங்கிய நன்கொடையை இலங்கைக்கே மீண்டும் பரிசளிக்க பாப்பரசர் தீர்மானித்துள்ளார்.

கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின சமூக சேவை நிதியத்திற்கு 8.7 மில்லியன் ரூபாயை இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் சபையினால் நன்கொடையாக வழங்கப்பட்டிருந் தது.

எனினும் அந்த பணத்தை கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு வழங்க பாப்பரசர் தீர்மானித்துள்ளார்.

இந்த பணத்தில் இலங்கையில் உள்ள ஏழைகளுக்கு உதவி செய்து அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாப்பரசர், கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கத்தோலிக்க ஆயர்கள் சபையினால் குறித்த பணத்தொகையை ஏழை மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-11)

# கழிவகற்றல் நடவடிக்கை தற்காலிக இடைநிறுத்தம் !

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் கழிவகற்றல் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

மாநகர சபையினால் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் இதுவரை காலமும் கல்லுண்டாய் பகுதியில் வெளியேற்றப் பட்டு வந்தது.

தற்போஅ அப்பிரதேசத்தில் கழிவு வெளியேற்றுவதில் தடை ஏற்பட்டுள்ளதால் மாநகர சபை கழிவகற்றல் நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கும் வரை மாநகர சபை எல்லைக்குட்பட்ட குடியிருப்பாளர்கள் மற்றும் அரசு, அரசு சார்பற்ற நிறுவனத்தினர்கள் அனைவரும் ஏனைய குடியிருப்பாளர்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் நோய் தொற்றுக்குள்ளாத வகையிலும் வீதிகளை அசுத்தப்படுத்தாது திண்மக் கழிவுகளை பேணி சுகாதாரமான சூழலைப் பேண ஒத்துழைக்குமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார். (எ)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கீரிமலை சிவபூமி மடத்தில் சிவராத்திரி விழா செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் இன்று மாலை 7.00 மணிக்கு சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் அவர்களின் ஆசியுரையும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களின் காத்தவராயன் கூத்தும், கரகாட்டம், பண்ணிசைக்கச்சேரியும் இடம்பெறும. செவ்வாய், புதன் இருநாட்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (எ-11)

(யாழ்ப்பாணம்)

யாழ்.மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் மகா சிவராத்திரி விழா இன்று மாலை 5.30 மணிக்கு சன சமூக நிலைய அரங்கத்தில், சனசமூக நிலையத்தின் தலைவர் சி.கி.துரைசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ)

## சேவை நேரம் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய சேமிப்புவங்கியின் யாழ். மேற் தரக் கிளையின் வாடிக்கையாளர் சேவை நேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை முதல் இந்த வாடிக்கையாளர் சேவை நேரம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# பல இலட்சம் பெறுமதியான படகுகளுக்கு தீ வைப்பு

## இளவாலை பொலிஸார் விசாரணை

(யாழ்ப்பாணம்)

இளவாலை கரைத்துறை கடற்கரையில் நேற்று அதிகாலை பல இலட்சம் ரூபாய் பெறுமதியான படகுகள் இரண்டும் இயந்திரங்களும் வலைகள் மற்றும் வாடியும் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன.

தொழிலுக்கு செல்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் இரண்டு அன்றிரவு பன்னிரெண்டு மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்துள்ளன.

நாய்கள் குரைக்கும் சத்தத்தைக் கேட்டு கடற்கரைப் பகுதியில் உள்ள வீட்டில் இருந்தவர்கள் வெளியில் வந்து பார்த்த வேளையில் படகுகள் இரண்டும் தீயில் எரிவதை கண்டு சத்தம் இட்டுள்ளார்கள். இதேநேரம் இளவாலை பொலிஸா ருக்கு வழங்கிய தகவலைத் தொடர்ந்து உடனடியாக குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸார் எரிந்த படகு ஒன்றின் தீயை அணைப்பதற்காக கடலுக்குள் தள்ளிய போதிலும படகின் முன்பக்கம் முழுமையாக எரிந்துள்ள துடன் மற்றைய படகும் இயந்திரமும் மற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட வலைகளும் முழுமையாக எரிந்து சேதம் அடைந்துள்ளன.

இளவாலை கரைத்துறையில் வசிக்கும் சகோதரர்களான பாக்கியநாதன் றேகன் மற்றும் பாக்கியநாதன் கமில்ரன் என்பவர்களுடைய சுமார் ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான படகுகளும் இயந்திரங்கள் வலைகள் என்பனவே எரிந்து சேதமாகியுள்ளன. இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (எ-11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## நல்லவனாக இரு



❖ பெரிய உழைப்பு என்னும் விலை இல்லாமல் அரிய செயல்கள் எதையும் செய்து விட முடியாது.

❖ பணம் மட்டுமே வாழ்க்கையல்ல. நன்மையும், தெய்வ பக்தியுமே நமக்கு போதுமானது.

❖ நற்செயல்களில் நாம் முழுமூச்சுடன் ஈடுபட்டால் கடவுளின் துணை நிச்சயம் கிடைக்கும்.

❖ எந்த வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்துக் கொள்பவனே அறிவாளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகக்கிண்ணம்-2015



# மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தது அயர்லாந்து

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான உலகக்கிண்ண லீக் போட்டியில் அயர்லாந்து 4 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

உலகக்கிண்ணத் தொடரில் 5ஆவது லீக் போட்டியில் நேற்று அயர்லாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி அதிரடியில் அசத்தியது. இதனால் 50 ஓவர் முடிவில் அந்த அணி 7 விக்கெட்டுகளை இழந்து 304 ஓட்டங்களை எடுத்தது.

அந்த அணிக்கு சிம்மோன்ஸ் 102 ஓட்டங்கள் (9 பவுண்டரி, 5 சிக்சர்), டெரன்சமி 89 ஓட்டங்கள் (9 பவுண்டரி, 4 சிக்சர்) எடுத்து கைகொடுத்தனர்.

மேலும் வெய்ன் சுமித் (18), கிறிஸ் கெய்ல் (36), சாமுவேல்ஸ் (21), ரஸல் (27) ஆகியோர் ஓரளவு ஓட்டங்கள் குவிக்க கடினமான ஓட்டங்களை அயர்லாந்து அணிக்கு இலக்காக கொடுத்தது மேற்கிந்திய தீவுகள்.

அயர்லாந்து தரப்பில் பந்து வீச்சில், ஜோர்ஜ் டாக்ரெல் அதிக பட்சமாக 3 விக்கெட்டுகளையும், கெவின் ஓ பிரையன், ஜோன் மூனி, ஆண்டி மெக்பிரைன் தலா 1 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.


பிறகு 305 ஓட்டங்கள் இலக்கை நோக்கி களமிறங்கிய அயர்லாந்து ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தது. மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சாளர்கள் விக்கெட்டுகளை கைப்பற்ற திணறினர்.

இதன் காரணமாக அயர்லாந்து அணி 45.5 ஓவர்களிலே இலக்கை எட்டியது.

அந்த அணி 6 விக்கெட்டுகளை இழந்து 307 ஓட்டங் களை எடுத்து 4 விக்கெட் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது.

அணித்தலைவர் வில்லியம் போர்ட்டர்பீல்டு 23 ஓட்டங்களையும், பால் ஸ்டர்லிங் 92 ஓட்டங்களையும் (9 பவுண்டரி, 3 சிக்சர்), எட் ஜாய்ஸ் 84 ஓட்டங்களையும்(10 பவுண்டரி, 2 சிக்சர்) எடுக்க, நியால் ஓ பிரையன் 79 ஓட்டங்களுடன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இவருடன் ஜோன் மூனி 6 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.



பந்து வீச்சில் மேற்கிந்திய தீவுகள் தரப்பில், டெய்லர் 3 விக்கெட்டுகளையும், கெய்ல், சாமுவேல்ஸ் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இதன்மூலம் 25 பந்துகள் மீதமிருந்த நிலையில் அயர்லாந்து அணி 4 விக்கெட்டு வித்தியாசத்தில் மேற்கிந்தீயதீவை வீழ்த்தி வரலா ற்று வெற்றியை பதிவு செய்தது. பால் ஸடார்லிங் ஆட்ட நாயகனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். (க)

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015 — துடுப்பாட்டம்

மே.தீவுகள் (50 ஓவர்கள்) 304/7

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| சிம்மன்ஸ் | 102 | 84 |
| டேரன்ஸ் சம்மி | 89 | 67 |
| கிறிஸ் கேல் | 36 | 65 |
| ரஸல் | 27 | 13 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015 — துடுப்பாட்டம்

அயர்லாந்து (45.5 ஓவர்கள்) 307/6

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| பால் ஸ்டர்லிங் | 92 | 84 |
| எட் ஜாய்ஸ் | 84 | 67 |
| நியால் ஓ பிரையன் | 79 | 60 |
| வி.போட்டர்பீல்டு | 23 | 43 |
| சண்டிமல் | | |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015 — பந்துவீச்சு

அயர்லாந்து

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| ஜோர்ஜ் டாகரெல் | 10 | 0 | 50 | 3 |
| கெவின் ஓ பிரையன் | 09 | 0 | 71 | 1 |
| ஜோன் மூனி | 07 | 1 | 59 | 1 |
| ஸ்டர்லிங் | 06 | 0 | 33 | 0 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015 — பந்துவீச்சு

மே.தீவுகள்

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| டெய்லர் | 8.5 | 0 | 71 | 3 |
| கெய்ல் | 08 | 0 | 41 | 1 |
| சாமுவேல் | 04 | 0 | 25 | 1 |
| கோல்டர் | 09 | 1 | 44 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண...

கலாசாலையும் நாளையதினத்தை விடுமுறை நாளாக அறிவித்துள்ளது. சிவராத்திரியை ஒட்டி வடமாகாணப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படும் நிலையில் கலாசாலைக்கும் விடுமுறை அறிவிக்கப்படுவதாகவும் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிககிழமை பதில் வேலை நாளாக அமையும்எனவும்

## முரண்பாட்டு...

அமைச்சரின் நேற்றைய வடமாகாண விஜயம் எமக்கெல்லாம் ஒரு புதிய உத்தியோகபூர்வ வாழ்க்கைக்கு இடமளிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு.

உத்தியோகபூர்வமாக எமக்கிருக்கும் வெற்றிடங்கள், பிரச்சினைகள், தடங்கல்கள் தடைகள், நிதிபற்றாமை பற்றி எல்லாம் ஏற்கெனவே கூறியுள்ளேன்.

எமது வடமாகாணம் மற்றைய மாகாணங்களை போலல்லாது பாரிய போர்க்கால இன்னல்களுக்கும் அவலங்களுக்கும் முகம் கொடுத்துள்ள ஒரு மாகாணம்.

எனவே எமது தேவைகள்மற்றும் விசேட தேவைகளைக் கணக்கில் எடுத்து நிவாரணங்களைப் பெற்றுத் தரக் கோரியுள்ளேன்.

அமைச்சர் சமயசார்புள்ளவர். அவருடன் சில சமயசார்பான கூட்டங்களில் கூட நான் அரசியலுக்கு வரமுன் கலந்து கொண்டிருக்கின்றேன்.

அந்த அடிப்படையில் மக்களின் தேவையறிந்து மனிதாபிமான முறையில் எமது கோரிக்கைகளுக்குச் செவிசாய்ப்பார் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

எமது வாழ்க்கையில்சில மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதை உணரக்கூடியதாக இருக்கின்றது. இதுவரை காலமும் முரண்பாட்டு அரசியலில் ஈடுபட்டு வந்த நாங்கள் இனியேனும் இணக்க அரசியலில் ஈடுபட இறைவன் எமக்கு வழி அமைக்க வேண்டும்.

இணக்க அரசியல் என்று கூறும்போது இதற்கு முன்னர் இருந்தவர்கள் இணக்க அரசியலுக்குக் கொடுத்த வியாக்கியானத்தை நாங்கள் கூற முன்வரவில்லை.

சரிசம உரித்துக்களையுடைய இரு மக்கள் கூட்டங்கள் என்ற அடிப்படையில் எமக்கிருக்கும் உரிமைகளை உளமார எடுத்துரைத்து மனிதாபிமான அடிப்படையில் அவற்றை அரசாங்கத்துடன் பேசிப் பெற்றுக் கொள்ளுவதையே நான் இணக்க அரசியல் என்று கூறுகின்றேன்.

இதற்கு இரு தரப்பாரிடமும் கொடுத்தெடுக்கும் அந்த மனோபக்குவம் இருக்க வேண்டும். தமிழ் மக்கள் மற்றும் பெரும்பான்மையினரின் உதவியாலும் பதவிக்கு வந்த ஜனாதிபதி என்ற வகையில் புதிய ஜனாதிபதியின் அரசாங்கம் எமது அரசாங்கம் ஆகும்.

எனவே அரசாங்கத்திடம் நாம் கோரவும் அவற்றை அரசாங்கம் வழங்கவும் இனி எந்தத்தடையும் இருக்கத் தேவையில்லை என அவர மேலும் தெரிவித்தார். (எ-11)

## விசாரணை கூண்...

மேலும் குறிப்பிடுகையில்,

விடுதலைப்புலிகளுடனான ஆயுதப் போராட்டத்தில் சிங்கள மக்கள் பல இழப்புக்களை சந்தித்தனர். நாடு மிகவும் பின் தங்கிய நிலைக்கு தள்ளப்பட்டது.

எனினும் எமது இராணுவத்தின் தியாகமும் அரசாங்கத்தின் முயற்சியுமே விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளிடம் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுக்க துணை புரிந்தது. யுத்தத்தின் பின்னர் வடக்கில் தமிழ் மக்கள் தமது சுதந்திரத்தினை வென்றெடுத்துள்ளனர்.

இலங்கையின் மூவின மக்களும் ஒன்றுபட்டு வாழக்கூடிய நிலைமை ஏற்பட்டிருந்தும் தொடர்ச்சியாக பிரிவினையினை தூண்டும் செயற்பாட்டினை தமிழ் தலைமைகள் மேற்கொள்கின்றது.

நாட்டின் நிலைமைகள் மாறினாலும் இலங்கையை சர்வதேச விசாரணைகளில் உட்படுத்தி விசாரணைக் கூண்டில் நிறுத்தவே இவர்கள் முயற்சிக்கின்றனர்.

அதேபோல் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவற்றினை கண்டறிய உள்ளக விசாரணைப் பொறிமுறையினை பலப்படுத்த வேண்டும்.

இலங்கையில் ஏற்கெனவே உள்ளக விசாரணை ஆணைக்குழு செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

காணாமல் போனோர் தொடர்பிலும் ஏனைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படுகின்றது.

இந்நிலையில் சர்வதேச விசாரணைகளை நடத்தும் வகையில் உள்ளக விசாரணைப்பொறி முறையினை கொண்டு செல்லவோ அல்லது சர்வதேசத்தினை திருப்திப்படுத்தும் வகையில் உள்ளக விசாரணை பொறிமுறையினை கையாள வேண்டிய அவசியமோ இல்லை. இலங்கைக்கு எது அவசியமோ அதையே கையாள வேணடும் எனவும் குறிப்பிட்டார். (எ-11)


### நல்லாட்சியை நோக்கி பயணிக்கும் ஜனாதிபதியையும் பிரதமரையும் வாழ்த்துகின்றோம்

சம்பள அதிகரிப்புடன் விலைவாசிகளையும் குறைத்து இன, மத பாகுபாடற்ற சமாதானத்துடன் கூடிய நல்லாட்சியை நோக்கி பயணிக்கும் ஜனாதிபதி மைத்திரிக்கும் பிரதமர் ரணிலுக்கும் எம் நல்வாழ்த்துக்கள்.

மேலும் தென்மராட்சியின் அபிவிருத்திக்காக பொது மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிவதாசன் திட்டத்தையும், பிரதேச செயலகத்தை இரு பிரிவாக்கும் திட்டத்தையும் அமுல் செய்யுமாறு வேண்டி நிற்கின்றோம்.

தென்மராட்சி மக்கள் சார்பில்
சிரேஷ்ட பிரஜைகள்

சாவகச்சேரி

(C-139)


அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார்.

இதேவேளை கற்பித்தல் பயிற்சிக்காக பாடஅலகுகளைப்பெறவேண்டிய ஆசிரிய மாணவர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை பாடசாலைகளுக்குச் சென்று பாட அலகுகளைப் பெற்று கலாசாலைக்கு வருகை தருமாறும் அதிபர் கோரியுள்ளார். (எ-11)

## உறவுகளை...

பெண்களில் ஒரு பகுதியினர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்குச்சென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிப்பதற்கான மகஜரை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம்.சார்ள்ஸிடம் கையளித்தனர்.

காணாமல் போனோர் கடைசியாக அணிந்திருந்த ஆடைகளும் உண்ணாவிரதத்தின் போது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. (எ-11)

## விசாரணை...

தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பிலான தீர்மானம் நிறைவேற்றப்படுவதனை தாமதிக்கும் யோசனைக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹூசெய்ன் ஆதரவினை வெளியிட்டுள்ளதாக சர்வதேச ஊடகமொனறு தகவல் வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைபேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டு, மார்ச் மாத அமர்வுகளில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எனினும், இந்த அறிக்கை சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை காலம் தாழ்த்துமாறு புதிய இலங்கை அரசாங்கம் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடமும் கோரி வருகின்றது.

நம்பகமான உள்ளக விசாரணைப் பொறிமுறைமையை ஏற்படுத்த கால அவகாசம்வழங்குமாறு இலங்கை கோரியிருந்தது.

இந்தக் கோரிக்கைக்கு ஆணையாளர் ஹூசெய்ன் ஆதரவளிப்பதாக தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் வரையில் இலங்கை அரசாங்கம் கால அவகாசம் கோரியிருந்தது.

புதிய இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை கவனத்திற் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்த தீர்மானம் சமர்ப்பிக்கப்படுவதனை தீர்மானிக்கும் அதிகாரம் ஆணையாளருக்கு உண்டு என அண்மையில் அமெரிக்கா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆணையாளரின் நிலைப்பாடு தீர்மானம் சமர்ப்பிப்பது குறித்த நிலைப்பாட்டில் தாக்கத்தை செலுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ.நா மனித மனித உரிமை ஆணைக்குழுவின் இந்த முடிவு தமக்கு கவலையையோ அல்லது மகிழ்ச்சியையே அளிக்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவித்தார்.

இலங்கையின் புதிய அரசு இந்த விடயத்தில் ஒரு நம்பகத்தன்மை வாய்ந்த விசாரணை நடத்தவதற்கு உறுதியளித்து விசாரணை அறிக்கையை வெளியிடுவதை ஒத்தி வைக்கக் கோரியிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார். (எ-11)

## அணு சக்தி...

இந்தியாவிற்கு நான்குநாள் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடியும் புதுடில்லியில் நேற்று திங்கட்கிழமை மதியம் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இந்தச் சந்திப்பின் இறுதியில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தியா இலங்கைக்கு இடையில் சிவில் பயன்பாட்டுக்கான அணு சக்தி ஒத்துழைப்பு கட்டமைப்பை ஏறபடுத்துவது, இந்தியாவில் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ள நாளந்தா பல்கலைக்கழகத்தின் கிளைகளை இலங்கையில் ஏற்படுத்துவது, விவசாயம் வர்த்தகம் மற்றும் கலாசாரத் துறைகளில் கூட்டுறவை மேம்படுத்துவது தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த சந்திப்பின் முடிவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, சிறிசேனவுடனான சந்திப்பும் பேச்சுவார்த்தையும் சிறப்பான முறையில் நடைபெற்றதாக தெரிவித்தார்.

சமீபத்தில் நடைபெற்ற இலங்கை ஜனாதிபதி தேர்தலில், மைத்திரிபால சிறிசேன பெற்ற வெற்றிக்கு இந்திய மக்கள் சார்பில் வாழ்த்துக்களை பரிமாறிக்கொள்வதாக கூறினார்.

நடைபெற்று முடிந்த இலங்கை ஜனாதிபதித் தேர்தல், அந்நாட்டில் ஜனநாயகம் வலுவாக இருப்பதை பிரதிபலிப்பதாகவும் மோடி குறிப்பிட்டார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு இலங்கை மக்கள் அளித்துள்ள வெற்றியின் மூலம் அவர்கள், ஒன்றுபட்ட, அமைதியான வளர்ச்சியை விரும்புவதை எடுத்துரைத்துள்ளார்கள் என்றும் மோடி தெரிவித்தார்.

இந்தியா, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, தெற்காசிய நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவது, இரு நாடுகளுக்கும் இடையேயான பகுதியில் உள்ள கடற்வழி பாதுகாப்பு போன்றவை குறித்தும் இந்த சந்திப்பில் விரிவாக விவாதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இருநாட்டு மீனவர்கள் விவகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து பேசியதாகவும் மோடி கூறினார்.

இருநாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் விவ காரம் இது என்பதால், இருநாட்டு மீனவ அமைப்புகள் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த ஊக்குவிப்போம் என்றார் மோடி. மீனவர்கள் எடுக்கும் முடிவுக்கு, இருநாட்டு அரசாங்கங்களும் செயல்வடிவம் கொடுக்க உறுதிகொண்டுள்ளதாகவும் மோடி குறிப்பிட்டார்.

இறுதியாக தன்னை மைத்திரிபால சிறிசேன இலங்கைக்கு வருமாறு விடுத்துள்ள அழைப்பை ஏற்று எதிர்வரும் மார்ச் மாதம் தான் இலங்கைக்கு செல்லவுள்ளதாகவும் மோடி அறிவித்தார்.

முன்னதாக இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு குடியரசு தலைவர் மாளிகையில் அரசு முறை மரியாதை செய்யப்பட்டது.

இலங்கையில் புதிய ஜனாதிபதியாக பொறுபேற்றுள்ள மைத்திரிபால சிறிசேன, பதவியேற்ற ஒரு மாதக்ககாலத்தில் மேற்கொள்ளும் அவரது முதல் வெளிநாட்டு சுற்றுப் பயணம் என்பதால், அவரது இந்த இந்தியப் பயணம் மிக முக்கியத்துவம் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியா வந்த மைத்திரிபாலவை, தமிழகத்தை சேர்ந்த மத்திய இணையமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் விமான நிலையம் சென்று வரவேற்றார். இன்று செவ்வாய்க்கிழமை பிஹார் மாநிலத்தில் உள்ள கயா செல்லவுள்ள மைத்திரிபால சிறிசேன, புத்தர் ஞானம் பெற்ற பகுதியாக கருதப்படும் மஹாபோதி கோயில் உள்ளிட்ட இடங்களுக்கும் செல்லவிருக்கிறார்.

அதையடுத்து ஆந்திர மாநிலத்தில் உள்ள திருப்பதி கோயிலுக்கும் சென்று, பின்னர் கொச்சின் விமான நிலையத்திலிருந்து நாளை காலை இலங்கை திரும்புகிறார். (எ-11)

## சமாதானத்தின்...

சமாதானக் கரங்களை எங்களை நோக்கி நீட்டுங்கள் என்றும் மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

யாழ் பொது நூலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வடக்கு மாகாண விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் கரு ஜெயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கின்ற சமாதானத்தின் பலன்கள் அனைத்தையும் வடக்கு மாகாண மக்களும் முழுமையாக அனுபவிக்க வேண்டும்.

அதுதான் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசின் நோக்கமாகவும் இருக்கின்றது. இதற்கமையவே அரசின் நூறு நாள் வேலைத் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதில் இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை நீக்கி அனைவரிடத்தேயும் ஐக்கியத்தை ஏற்படுத்துவதே புதிய அரசின் நோக்கமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் புதிய ஆளுநர் மற்றும் பிரதம செயலாளர் மாற்றியமைக்கப்பட்டுள்ள அதே நேரம் இன்னும் பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளது. ஆனால் கடந்த கால பிரச்சினைகள் தொடர்பில் கதைப்பதற்காக நான் இங்கு வரவில்லை. இங்குள்ள தற்போதைய நிலைமைகளில் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டிய நட வடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து செயற்படவே வந்திருக்கின்றேன்.

இங்குள்ள எந்தப் பிரச்சினை என்றாலும் அதனைக் கலந்துரையாடி தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும். இதற்கமைய மத்திய மாகாண அரசுகள் இணைந்து செயற்பட்டால் மக்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கும். இதற்கமைய பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொண்டு இணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த காலங்களிலிருந்த நிலைமைகளுக்கும் இன்றுள்ள நிலைமைகளுக்கும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக கடந்த கால நிதிக் கொடுக்கல் வாங்கல்களினால் நாட்டில் தற்போது பாரிய நிதி நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. இதனால் புதிய அரசு அத்தியாவசிய தேவை தவிர வேறு எவற்றுக்கும் நிதியை வீண்விரயம் செய்வதில்லை.

இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றம் ஜனநாயகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதனால் ஜனநாயகம் சமாதானம் நிறைந்த நாடாக இன்று உலக நாடுகள் எமது நாட்டைப் பார்க்கின்றன. இவ்வாறு இன்று எமக்கு சார்பாக பல உலக நாடுகளும் இருக்கின்றன என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் கரு தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்




(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் உள்ளூராட்சி மாகாண சபைகள், புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் யாழ் பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

நேற்று யாழ் வந்த அமைச்சர் வடக்கின் தற்போதைய நிலைமைகள் மற்றும் அபிவிருத்திகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார். இதனைத் தொடர்ந்து வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்களுடனும் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனால் மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் விளக்கப்பட்டதுடன் இங்குள்ள பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக் காட்டியதுடன் தேவைகள் தொடர்பிலும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் மத்திய மாகாண சபைகளுக்கு இடையிலான உறவு முறைகள் தொடர்பிலும் அதனை எதிர்காலத்திலும் வளர்த்தெடுப்பது என்பது தொடர்பிலும் மத்திய மாகாண தரப்பினர்கள் கலந்துரையாடியிருந்தனர்.

இதற்கமைய மாகாணத்தின் பிரச்சினைகளை அறிந்து கொண்டுள்ளதாகவும் தொடர்ந்து இங்கு பல்வேறு உதவிகளை வழங்கி பல அபிவிருத்திகளை முன்னெடுக்க உள்ளதாகவும் அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளையில் வடக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிற்கு புதிய வாகனங்களையும் அமைச்சர் கருஜெயசூரிய மற்றும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஆகியோர் இணைந்து வழங்கி வைத்தனர்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கரு ஜெயசூரிய, முதலமைச்சர், அமைச்சர்கள், வடக்கு மாகாண ஆளுநர், தமிழ்த் தேசியக் கூட்டமைபபின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஈ.பிடிபியின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், மாவட்ட அரச அதிபர்கள், திணைக்கள தலைவர்கள், திட்டமிடல் அதிகாரிகள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபையின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை வட மாகாண விசேட ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது, இந்த நிகழ்வுக்கு அமைச்சர் கரு ஜெயசூரிய வந்திருந்தார். அமைச்சரை நிகழ்விடம் வரை அழைத்துவந்த முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொள்ளாது வெளியேறினார். ஆனாலும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார், வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (எ-4)


aat; வங்கியியல் கற்கை நெறிகளுக்கான விரிவுரை ஆரம்பமாகியுள்ளன.

சனி, ஞாயிறு வகுப்புகள் மட்டும்.
2-ம் மாடி, இலங்கை வங்கி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

தொ.பே:-0775631280 (9542)



**பணியாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் **NEW SCIENCE WORLD** தனியார் கல்வி நிறுவனத்திற்கு அனுமதி அட்டை பரிசோதகர், பராமரிப்பாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 0773364055 (19.02.2015 வியாழன் மாலை 4.00 மணிக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும்.)

NEW SCIENCE WORLD VICTORY MUST
**NEW SCIENCE WORLD**
Navalar Road-Brown Road Junction, Jaffna. (சி-135)



BCHS
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Batch 1 : 21-02-2015
Batch 2 : 23-02-2015
Batch 3 : 25-02-2015
Batch 4 : 28-02-2015

No.15 1/2, Siriampiyady Lane,
(Above Sathosa SM)
Jaffna. Tel :021-2224550

Hotlines
0777585913, 0777222422, 071429935

அலுவலகர்களுக்கு/உத்தியோத்தர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் 21/02/2015 2.30PM TO 4.30PM வரை ஆரம்பமாகின்றது. பதிவுகளுக்கு அழையுங்கள். (சி-134)



# எதற்காக இந்த விருதுகள்?....






**நாட்டின் உயர் விருதான ஜனாதிபதி விருது**

வடமாகாணத்தின் சிறந்த அச்சுத்துறை முயற்சியாளர்களுக்கான விருதுகள்
2006 - சிறந்த அச்சுத்துறை முயற்சியாளர்களுக்கான விருது
2007 - சிறந்த அச்சுத்துறை முயற்சியாளர்களுக்கான விருது
2008 - சிறந்த அச்சுத்துறை முயற்சியாளர்களுக்கான விருது
2009 - சிறந்த அச்சுத்துறை முயற்சியாளர்களுக்கான விருது
4

2014 - இலங்கை தொழில் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சமூக கலந்துரையாடல் மற்றும் வேலைத்தள கூட்டுறவுக்கான விருது
Social Dialogue & Workplace Cooperation Award 2014

2015 - நாடளாவிய ரீதியில் **Sri Lanka Association of Printers (SLAP)** இனால் நடாத்தப்பட்ட அச்சுத்துறைக்கான பிராந்திய விருதுகள் 2015 (கொழும்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கிடையிலான போட்டிகள்)

ஒரே தடவையில் 5 விருதுகள்
Gold Awards For Letterheads
Browns Awards For Visiting Cards
Browns Awards For Digital Printing
Browns Awards For Diaries & Planners
Browns Awards For Greeting Cards & Invitation





Head Office:
#681, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
W www.harikanan.com
E print@harikanan.com
T +94 21 222 2717|8

Branch:
Karadippokku Junction,
Kilinochchi, Sri Lanka.
E printharikanan@gmail.com
T +94 21 228 0000

Harikanan
PRINTERS OF THE NORTH


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org